# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

சுடர் 32 கதிர் 320 புரட்டாதி 26ஆம் நாள் வியாழக்கிழமை 12 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


# காணிகளினை விடுவிப்பதற்கு மேலும் 2 வருட கால அவகாசம்

## அரசும் இராணுவமும் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 12

வடக்கில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளில் விடுவிக்கக்கூடியவற்றை விடுவிப்பதற்கு இன்னும் இரண்டு வருட கால அவகாசம் தேவை என்று அரசும் இராணுவமும் நேற்று அறிவித்தன. தேசிய பாதுகாப்பையும் கருத்திலெடுத்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்படாத காணிகளுக்கு மாற்றுக் காணிகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசு அறிவித்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. வடக்கில் பொதுமக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில் அங்கு கேள்வி எழுப்பப்பட்டது.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன பதிலளித்தார். "வடக்கில் இராணுவம் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்கப் புதியதொரு வழிமுறை உருவாக்கப்பட்டு வருகின்றது. இன்னும் இரண்டு வருடங்களுக்குள் காணிகள் விடுவிக்கப்படும். அவ்வப்போது காணப்படும் பாதுகாப்பு நிலமைகளைக் கருத்திற்கொண்டு நிலங்கள் விடுவிக்கப்படும். அல்லது பொதுமக்களுக்கு மாற்றுக் காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

"இராணுவம் வசமுள்ள பொதுமக்களின் காணிகளில் 62 சதவீதம் விடுவிக்கப்பட்டுள்ளன. ஏனைய காணிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அல்லது மாற்றுக் காணிகளாவது வழங்கப்படும்'' என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 >> 25

# அநாதரவான படகிலிருந்து 153 கி. கஞ்சா நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

காங்கேசன்துறை கடற்பரப்பிலிருந்து வட கிழக்கில் 8.5 கடல் மைல் தூரத்தில் அநாதரவாக இருந்த படகிலிருந்து 153 கிலோ கிராம் கேரளக் கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டது என்று கடற்ப >> 25

அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தும்

# முழு அடைப்புக்கு பலத்த ஆதரவு!

யாழ்ப்பாணம், ஒக். 12

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கில் நாளை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட வுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்குப் பல்வேறு அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வடக்கு கிழக்கு தொடருந்து காப்பாளர் சங்கம், மன்னார் பிர >> 25

# எல்லோரும் ஒத்துழையுங்கள் அரசியல் கைதிகள் உருக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 12

எங்கள் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கும் எமக்கு நீதி கிடைப்பதற்குமாக நாளை வெள்ளிக் கிழமை வடக்கில் முன்னெடுக்கப்படும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு எல்லோரும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் தமது உறவினர்கள் ஊடாக நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: >> 25

முச்சந்தி முரளி



இப்படியே காலத்தை இழுத்தடிக்கிறது தானே காலாகாலமா உவையளின்ரை பழக்கம்...

# நீதிமன்ற வளாகத்துக்கு அடிக்கல் நடுவதைப் பிற்போட்டார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் 242 மில்லியன் ரூபா செலவில் திறந்த நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை அரச தலைவர் மைத்திரிபால தலைமையில் இடம்பெறவிருந்தது. திடீரென அந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.

தேசிய தமிழ் மொழித் தின விழாவில் கலந்து கொள்ள யாழ்ப்பாணத்துக்கு வரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முற்பகல் 11.30 மணிக்கு நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நடு >> 25

# அரசியல் கைதிகள் விடுவிப்பு தாமதத்துக்கு சட்ட மா அதிபர் திணைக்களமே காரணமாம்

கொழும்பு, ஒக். 12

தமிழ் அரசியல் கைதிகளில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டிய கைதிகள் தவிர்ந்த, ஏனைய கைதிகளை உடனடியாக விடுவிக்கு மாறு சட்டமா அதிபர் திணைக்க ளத்துக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது. அங்கு நிலவும் தாமதம் காரணமாகவே கைதிகளின் விடுதலை பிரச்சினையா கின்றது.

இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத் தில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை, அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை மீண்டும் வவுனியா நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்வது >> 25

# நாட்டைக் கூறுபோட்டுவிடும் புதிய அரசமைப்பு: *விமல்*

கொழும்பு, ஒக். 12

புதிய அரசமைப்பானது ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன், நாட்டை இரண்டாகக் கூறுபோடுவதற்கு அது வழிவகுக் கக்கூடும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று நேரில் சுட்டிக்காட்டியுள்ளது விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி.

புதியதொரு அரசமைப்பு உருவாவதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள அரசியல் கட்சிகளையும், அமைப்புகளையும் தனித்தனியே சந்தித்துப் பேசி அவற்றை வழிக்குக் கொண்டு வருவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தானே களமிறங்கியுள்ளார். அதன் முதல் சந்திப்பு தேசிய சுதந்திர முன்னணியுடன் நேற்று நடந்தது.

"புதிய அரசமைப்பில் ஒருங் >> 25

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின்

# பரிந்துரையை ஏற்கவேண்டிய கட்டாயம் அரசுக்கு கிடையாது

## அயலுறவுத்துறை அமைச்சு அறிக்கை

>> 25

# ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் நாளை யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், ஒக். 12

உண்மையை ஊக்குவித்தல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிறிப் யாழ்ப்பாணத்துக்கு நாளை வெள்ளிக் கிழமை வருகிறார்.

ஐ.நாவின் சிறப்பு அறிக்கை >> 25

புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கையில் உள்ளவற்றை

# மேலெழுந்தவாரியாகப் பார்க்காதீர்கள் ஒவ்வொன்றையும் ஆழமாகப் பாருங்கள்

## இப்படி அழுத்திக் கூறுகின்றார் ஜயம்பதி விக்கிரமரட்ண

கொழும்பு, ஒக். 12

இடைக்கால அறிக்கையை மேலெழுந்தவாரியாகப் பார்க்கவேண்டாம். ஒவ்வொரு விடயங்களையும் ஆழமாகப் பாருங்கள். இப்போது கிடைத்துள்ள வரலாற்றுச் சந்தர்ப்பம் இனியும் கிடைக்காது என்பதையும் உணர்ந்து கொண்டு இதனை ஆராயவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், புதிய அரசமைப்பு உருவாக் >> 25

# இடைக்கால அறிக்கையை தமிழர்கள் எதிர்க்கவேண்டும்

## யாழ். பல்கலை மூத்த விரிவுரையாளர் கணேசலிங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

புதிய அரசமைப்புக்கான இடைக் கால அறிக்கையைத் தமிழர்கள் எதிர்க்கவேண்டும் என்று அழைப்பு விடுத்தி ருக்கிறார் யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான மூத்த விரிவுரையாளர் கணேசலிங்கம்.

"புதிய அரசமைப்பில் >> 25






## கண்ணிவெடி அகற்றலை பார்வையிட்ட அமெ. குழுவினர்

கிளிநொச்சி, ஒக்.12
கிளிநொச்சி, முகமாலையில் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை அமெரிக்கத் தூதரகக் குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர்.
அமெரிக்க நிதி உதவியில் டாஸ் நிறுவனத்தினர் மேற்கொள்ளும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளையே அவர்கள் பார்வையிட்டனர்.
அந்தப் பகுதியில் மீட்கப்பட்ட அபாயகரமான வெடிபொருள்கள் தொடர்பில் டாஸ் நிறுவன அதிகாரிகள் விளக்கமளித்தனர். (ற)

### இளைஞரை தாக்கிய விவகாரம்:

# பொலிஸ் ஆணைக்குழு இன்று ஆராய்கின்றது

கொழும்பு, ஒக்.12
அம்பாந்தோட்டையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரின் கன்னத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சர் துஷார தலுவத்த அறைந்த விவகாரம் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் இடம்பெறுகின்றன. இந்த விவகாரம் தொடர்பில் இன்று தேசிய பொலிஸ் ஆணைக் குழு ஆராயவுள்ளது.
இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் காலி பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்தன அழகக்கோனின் கீழான விசாரணைக் குழு சம்பவத்துடன் தொடர்புடைய உதவி பொலிஸ் அத்தியட்சரிடம் நேற்று வாக்கு மூலம் பதிவு செய்துள்ளனர்.
இதுவரை அந்த விடயம் தொடர்பில் 10 மேலதிக சாட்சியங்கள் வாக்கு மூலங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் சட்டத்தரணி ருவன் குணசேகர தெரிவித்தார்.
தாக்குதலுக்கு உள்ளான இளைஞரின் வாக்கு மூலம் நீதிமன்ற அனுமதியுடன் சிறைச்சாலை அதிகாரிகளின் முன்னிலையில் தங்காலை வைத்தியசாலையில் வைத்து பெறப்பட்டது என்றும். வாக்குமூலங்கள் மற்றும் சாட்சியங்களின் பிரகாரம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர சுட்டிக்காட்டினார்.
கடந்த 6 ஆம் திகதி வெள்ளியன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைதான இளைஞரின் கன்னத்தில் உதவி பொலிஸ் அத்தியட்சர் துஷார தலுவத்த அறையும் காணொலிக் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவியிருந்தன. (ற-31)

## அரச சேவையாளர் தின நிகழ்வு

கொழும்பு, ஒக்.12
தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் அரச சேவையாளர் தினம் நேற்று மன்னாரில் நடைபெற்றது.
இந்த நிகழ்வு மன்னார் மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில் மாவட்டச் செயலகத்தில் பயன் தரும் கன்றுகள் நடப்பட்டன. நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலர் நந்தினி ஸ்ரான்லி டி மெல் மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி4)

## சீரற்ற காலநிலை காரணமாக மத்தளவுக்கு இரு விமானங்கள்

கொழும்பு, ஒக்.12
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட வேண்டிய விமானங்கள் இரண்டு நேற்று மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டன. சீரற்ற காலநிலை காரணமாகவே இந்த விமானங்கள் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
சென்னையிலிருந்து வந்த சிறிலங்கன் விமான சேவைகள் நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல். 122, சீஷல்ஸ் நாட்டிலிருந்து வந்த யு.எல்.708 ஆகிய இருவிமானங்களும் நேற்று மு.ப. 11.20 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தது.
அங்கு நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இரு விமானங்களையும் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. மத்தள விமான நிலையத்திலிருந்து பயணிகளை கொழும்புக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
நேற்று காலை முதல் கட்டுநாயக்க விமான நிலையம் உள்ளிட்ட பிரதேசங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவியது. கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த பிரதேசங்களில் மழை நீர் தேங்கியிருந்தமையால் அங்கு வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. (ற-31)

## அரசியல் கைதிகளுக்காக நல்லூரில் சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக்.12
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என வலியுறுத்தி நேற்று நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.
அரசியல் கைதிகளின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்ட வழிபாட்டில் உறவுகளுடன் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.
அநுராதபுரம் சிறையில் தொடர் உணவு ஒறுப்பில் இருந்து உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கைதிகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடந்த 15 தினங்களாக உணவு ஒறுப்பில் ஈடுபடும் கைதிகளுக்கு சக்தியை வழங்க வேண்டும் என்று வழிபாட்டில் மனமுருகி வேண்டிக் கொண்டதைக் காண முடிந்தது. (ற-101)

## உணவு உற்பத்தி வாரத்தை முன்னிட்டு மரக் கன்றுகள்

வவுனியா, ஒக்.12
தேசிய உணவு உற்பத்தி வாரத்தை முன்னிட்டு அரச உத்தியோகத்தர் தினமான நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. வவுனியா மாவட்ட பிரதி மாகாண பணிப்பாளர் த.யோகேஸ்வரன் தலைமையில் வவுனியா மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர் றோகண புஸ்பகுமார மரக்கன்று நட்டார். உத்தியோகத்தர்களுக்கான மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரதி மாகாணப் பணிப்பாளர் த.யோகேஸ்வரன், விவசாய பண்ணை முகாமையாளர் நிரஞ்சன் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற)

# பொலிஸில் சேவையாற்ற பட்டதாரிகளுக்கு வாய்ப்பு

### மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக்.12
வேலையற்ற பட்டதாரிகளுக்கு பொலிஸ் துறையில் சேவை புரிய வாய்ப்புக்கள் உள்ளன என்று வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் ஆயிரம் பேருக்கான வேலைவாய்ப்பு உள்ளது. 18 தொடக்கம் 28 வயதுடைய ஆண், பெண் இரு பாலாரும் பொலிஸ் சேவையில் இணைய முடியும்.
பொலிஸ் பற்றாக்குறையால் கிளிநொச்சி மாவட்டத்தில் 500 பொதுமக்களுக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தரே காணப்படுகிறார். சேவைகளை வழங்குவதில் பெரும் இடர்கள் காணப்படுகின்றன.
வேலையற்ற பட்டதாரிகளுக்கு பொலிஸ் நிலையத்தில் சேவைபுரிய வாய்ப்புக்கள் உள்ளன. பட்டதாரிகளை இணைக்கும் வகையில் அவர்களுக்குப் பொருத்தமான பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன.
வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்படுபவர்களின் பின்னணியில் ஆயுத குழுக்கள் எதுவும் இல்லை. மது போதையாலும், தனிப்பட்ட பிரச்சினைகளாலுமே குற்றம் இழைக்கின்றனர்.
வட மாகாணத்தில் உள்ள மக்களில் 99 சதவீதமானோர் நல்லொழுக்கம் கொண்டவர்கள். ஒரு சிலரது செயற்பாடுகளால் அனைவரையும் ஒரே மாதிரியாக பார்க்க முடியாது - என்றார். (ற-ரி4)

## துன்னாலையில் நேற்று இருவர் கைது

துன்னாலை, ஒக்.12
வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்கள் இருவரும் நேற்று அதிகாலை துன்னாலைப் பகுதியில் வைத்து நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். 22, 25 வயதுடையவர்களே கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி2, 26)



கல்வயல் டேனுஜா முன்பள்ளியில் நடமாடும் புத்தகங்கள் காட்சிப்படுத்தலும் முன்பள்ளிச் சிறார்களுக்கு சிறுவர் கதைகூறலும் ஆக்கத்திறன் போட்டியும் நேற்று நடத்தப்பட்டது. தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்வில் பொது நூலகப் பிரதிநிதிகளும் கல்வயல் கிராம மக்களும் கலந்து கொண்டனர். (ற)



## வறட்சி உதவி கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக்.12
அரசால் வழங்கப்படும் வறட்சி உதவிப்பொருட்களில் புறக்கணிக்கப்படுகின்றோம் என்று தெரிவித்து வவுனியா தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
வவுனியா பிரதேச செயலகம் முன்பாகக் கூடிய மக்கள் பிரதேச செயலக வாயிலை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். அந்தப் பகுதி கிராம அலுவலரையும், ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களில் மூவரையும் அழைத்து பிரதேச செயலர் கலந்துரையாடினார்.
அதில் திருப்தியடையாத மக்கள் பிரதேச செயலகத்தில் இருந்து மாவட்டச் செயலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர். தமது கோரிக்கை அடங்கிய மனுவை மாவட்ட செயலரிடம் கையளித்தனர். இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு இன்று பதில் வழங்கப்படும் என்று மாவட்ட செயலர் ரோகண புஸ்பகுமார தெரிவித்ததை அடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.
“எமது கிராமத்தில் 70க்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருந்தும் எமக்கு வறட்சி உதவிப் பொருள்கள் வழங்கப்படவில்லை. அயல் கிராமங்களில் வறட்சி உதவிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. எமது கிராமத்துக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றது.” என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். - (ற)

# பதிலைத் தந்துவிட்டு யாழ்ப்பாணம் வருக

## அரச தலைவரிடம் வணிகர் கழகம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.12
உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல்கைதிகளின் கோரிக்கைகள் நியாயமானவையாகும். அவற்றைப் புறந்தள்ள முடியாது. எதிர்வரும் 14ஆம்திகதி சனிக்கிழமை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு வர இருக்கிறார். அவர் தனது வருகைக்கு முன்னர் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நல்ல ஒரு பதிலைத் தரவேண்டும். பதிலைத் தந்துவிட்டே அரசதலைவர் யாழ்ப்பாணத்துக்கு வர வேண்டும். இதுவே யாழ்ப்பாண ஒட்டுமொத்த சமூகத்தின் எதிர்பார்ப்பாகும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட வணிகர் கழகம் தெரிவித்தது.
இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
தமிழ் மக்களின் ஆதரவுடனே இந்த அரசு பதவிக்கு வந்தது. ஆனால் தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினையையும் அரசு முற்றுமுழுதாகத் தீர்த்து வைக்கவில்லை. இது கவலைதரும் விடயமாகும்.
அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம், தனியார் காணிகளை இராணுவத்திடம் இருந்து விடுவிக்கும் செயற்பாடு என எதிலுமே திருப்தியளிக்கும் நடவடிக்கைள் மேற்கொள்ளப்படவில்லை.
வவுனியாவில் உள்ள நீதிமன்றங்களில் சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் பாதுகாப்புப் பிரச்சினைகள் இருப்பதாகக் கூறி தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன. கைதிகள் அநுராதபுரம் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் மட்டுமன்றி இவர்களது குடும்பத்தினரும் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர். அரசு இது விடயத்தில் இனியும் இழுத்தடிப்புகளை மேற்கொள்ள முடியாது. உடனடியாக கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். இல்லையேல் அவர்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டங்களில் உள்ள நீதிமன்றகளில் அவர்களைப் பாரப்படுத்த வேண்டும்.
இந்தக் கோரிகைகளுக்காக நடத்தப்படும் எமது மக்களின் நியாயமான போராட்டங்கள் மற்றும் கவனவீர்ப்புகள் புறந்தள்ளிவிட முடியாதவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ய-8)

## கடையடைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஒக்.12
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ள முழுமையான கடையடைப்புக்கு வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் ஆதரவு தெரிவித்தது.
தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும். அவர்களது வழக்கு விசாரணைகள் மீண்டும் வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என்ற இரு கோரிக்கைகளையும் வலியுறுத்தி நாளை 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று வடக்கு மாகாணத்தில் முழுமையான கடையடைப்புப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடையடைப்புப் போராட்டத்துக்கு வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும் என சம்மேளனத் தலைவர் க.நாகராசா தெரிவித்தார். (ய)

## தெல்லிப்பழை வைத்தியசாலை தாதியர் அறைக்குள் புகுந்து திருட்டு

யாழ்ப்பாணம். ஒக்.12
தெல்லிப்பழை வைத்தியசாலை தாதியர் அறைக்குள் புகுந்த ஒருவர் தாதிய உத்தியோகத்தர் ஒருவரின் கைப்பையில் இருந்த பணத்தைத் திருடித் தப்பிச் சென்றார்.
இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.
பார்வையாளர் நேரத்தில் உள்நுழைந்த ஒருவர் தாதியர் ஓய்வு அறைக்குள் சென்று அங்கிருந்த கைப்பைகளை ஆராய்ந்துள்ளார். அதைக் கண்ட தாதியர் ஒருவர் ஏனையோருக்குஅதைக்கூறியுள்ளார். அவர்கள் சென்று அந்த நபரைப் பிடிக்க முற்பட்ட போது அவர் தப்பியோடினார். விரட்டிச் சென்றபோதும் அவர் அகப்படவில்லை.
அங்கிருந்த கைப்பை ஒன்றிலிருந்த 4 ஆயிரம் ரூபா திருடப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா, ஒக் 12
வவுனியா பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். புத்தளத்தைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
புத்தளத்தில் இருந்து வவுனியா நோக்கி பேருந்தில் பயணித்த ஒருவரின் பயணப் பையை சந்தேகத்தின்பேரில் பொலிஸார் சோதனையிட்டபோது 915 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)



முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் மின்னல் தாக்கத்தால் கட்டடமும், பொருள்களும் சேதமாகின. இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. (ற-101,ரி3)

## அரசியல் கைதிகளுக்காக பிரார்த்தனை நடத்துங்கள்

### வாசுதேவக்குருக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஒக்.12
தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்புக்காக நடத்தப்படும் முழுக் கடையடைப்புப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளுக்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிரார்த்தனையில் ஈடுபடுவோம்.
இவ்வாறு தெரிவித்தார் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்.
அவர் தெரிவித்ததாவது
எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் தொலைத்து நிற்கும் எம் பிள்ளைகளுக்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும். உணவு ஒறுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். பிரார்த்தனையால் இயலாதது ஒன்றும் இல்லை எனலாம். விரத நோன்பிருந்து அவர்களின் விடிவுக்காக அனைவரும் பிரார்த்திக்க வேண்டும் - என்றார். (ற)

## கடையடைப்புப் போராட்டத்துக்கு பனை, தென்னை சங்கம் ஆதரவு

கிளிநொச்சி, ஒக்.12
தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், அநுராதபுரம் சிறையில் சாகும்வரை உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் நாளை வடக்கு மாகாணத்தில் முழுமையான கடையடைப்புப் போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்துக்குத் தமது முழு ஆதரவையும் வழங்குவதாக கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையாமதனரூபன் தெரிவித்தார்.
கிளிநொச்சி பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் முப்பது கிளை நிலையங்களும் மூடப்படும். கண்டாவளையில் அமைந்துள்ள வெல்ல உற்பத்தி நிலையம்,கோணாவில் போத்தல் கள் உற்பத்தி நிலையம், ஏ9 சாலை கரடிப்போக்கில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைக் காரியாலயம் என்பனவும் முற்றாக மூடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் அரசியல்கைதிகள் நீண்டகாலமாகச் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.
உடல், உள ரீதியாகவும் தினம் தினம் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் மட்டும் துன்பங்களை அனுபவிக்கவில்லை. அவர்கள் சார்ந்துள்ள குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன.
எனவே, அரசியல் கைதிகளுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவதற்குஎம்மால் முடிந்த உதவிகளை செய்ய வேண்டும். அதன் பயனாகவே எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கதவடைப்பு போராட்டத்துக்கு நாம் எமது ஆதரவை வழங்குகின்றோம் - என்றார்.
(ய)

## கோட்டை தொடருந்து நிலையத்தில் குழப்பம்

கொழும்பு கோட்டையிலிருந்து சேவையை ஆரம்பிக்கும் தொடருந்து சேவைகள் நேற்றிரவு நிறுத்தப்பட்டுள்ளன. தொடருந்து சாரதிகள் மற்றும் பாதுகாவலர்களின் பணி நிறுத் தம் காரணமாக சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக புகையி ரத கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து கோட்டை தொடருந்து நிலையத்தில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. (5)

அரசியல்வாதிகளின் மனைவி, மகள்கள்

## தேர்தலில் போட்டியிடுவதற்காக திருத்தம் கொண்டுவரவில்லை

*அமைச்சர் பைசர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 12

உள்ளூராட்சிமன்றத் தேர் தல்களில் பெண்களுக்கு நாம் இடஒதுக்கீடு வழங்கி யது, அமைச்சர்களினதும், நாடாளுமன்ற உறுப்பினர் களினதும், பிரதேச அரசி யல்வாதிகளினதும் மனை வியரையோ அல்லது அவர் களது மகள்களையோ தேர் தலில் களமிறக்குவதற்காக அல்ல. இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறைமை யில் பெண்கள் பிரதிநிதித்து வத்துக்கு அதிகளவில் இடம ளிப்பது தொடர்பாக வெளி நாட்டு தூதரக பிரதானிகள், உள்நாட்டு மற்றும் பன் னாட்டு அரசசார்பற்ற அமைப் புகளின் பிரதிநிதிகள், தேர் தல் கண்காணிப்பாளர் களை தெளிவூட்டும் நிகழ்வு உள்ளூராட்சி மற்றும் மாகாண அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

உள்ளூராட்சி மன்றங்க ளுக்கும் மாகாண சபைக ளுக்கும் 25 சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை வழங் கும் சட்டத்தை நிறைவேற்றி யுள்ளோம்.

இலங்கையில் 22 மில்லி யன் மக்கள் உள்ளனர். இந்தத் தொகையில் அனை வருக்கும் தேர்தலில் போட் டியிடுவதற்கான சந்தர்ப் பத்தை வழங்குவதே எமது நோக்கமாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர் தலில் பெண் பிரதிநிதித்துவம் வழங்கும் போது அரசியல் வாதிகளின் குடும்பத்தில் வேட்பாளர்கள் தெரிவு செய் வதனை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்றி ணைந்து செயற்பட வேண் டும். பெண்களுக்கு அரசி யல் ரீதியாக ஆர்வமூட்ட வேண்டும்.

முதலாவது பெண் தலைமை அமைச்சராக சிறிமாவோ பண்டாரநாயக்கவை தெரிவு செய்தமையின் ஊடாக மாத்திரம் பெண்கள் பிரதிநிதித்துவத்தில் திருப்தி அடைய முடியாது. அரசிய லினுள் பெண் பிரதிநிதிகள் அதிகரிக்க மேலும் நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

வேட்புமனுத் தாக்கல் செய் யும் போது தொகுதிகளுக்கு 10 பெண்களை கட்டாயமாக நியமிக்க வேண்டும். மேலும் 50 பெயர்கள் உள் ளடக்கப்பட வேண்டும். இது சிறந்த ஏற்பாடாகும். ஜன வரி மாதம் உள்ளூராட்சி தேர்தலும் மார்ச் மாதம் மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படவுள்ளன. புதிய தேர்தல் முறைமை மற்றும் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பில் மக்களுக்கு அறி வுறுத்தும் செயலமர்வு நடத் துவதற்காக அமைச்சரவை யில் சிறப்புப் பத்திர மொன்றை சமர்ப்பிக்கவுள் ளேன -என்றார். (5.31)

## தாய்வான் வங்கியின் பணத்தைக் களவாடியதில் அரசின் முக்கிய புள்ளிகளுக்கும் தொடர்பா?

'திடுக்' தகவல்களை வெளியிடுகிறது குற்றப் புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, ஒக். 12

தாய்வான் வங்கியில் இணையவழி மோசடியூடா கத் திருடப்பட்ட பணத்தில் ஒரு பங்கு மாத்திரமே லிட்றோ எரிவாயு நிறுவனத் தின் முன்னாள் தலைவரி டம் உள்ளது. எஞ்சிய பங் குப் பணம் அரசின் முக்கிய புள்ளிகள் உள்ளிட்ட பல ருக்கு வழங்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவி னர் சந்தேகம் வெளியிட்டுள் ளனர். இந்தியர்கள் இருவர் பங்குப் பணத்தைப் பெற் றுக்கொண்டு நாட்டைவிட் டுத் தப்பியோடியுள்ளதாக வும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித் துள்ளனர்.

இது தொடர்பில் குற்றப் புல னாய்வுப் பிரிவினர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள சிட்டி வங்கியின் தலைமையக கணினிக் கட் டமைப்புக்குள் முதலில் ஊடு ருவல் நடந்துள்ளது. அதனூ டாக தாய்வானின் ஈஸ்டன் வங்கியின் கணக்கிலிருந்து 69.5 மில்லியன் அமெரிக்க டொலர் திருடப்பட்டுள்ளது.

இதில் ஒரு சிறுபகுதி, நியூ யோர்க்கில் உள்ள இலங்கை வங்கிக் கிளையின் ஊடாக இலங்கைக்கு பரிமாற்றப்பட் டுள்ளது. எஞ்சிய பணம் எந்த நாடுகளுக்கு மாற்றப்பட் டுள்ளது என்பது தொடர்பில் பன்னாட்டுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி ஜனக சமிந்த என்பவர் இலங்கை வங்கிக்குச் சென்று தனது வங்கிக் கணக்குக்கு அமெ ரிக்க டொலர்களில் பணம் கிடைக்கவேண்டியிருப்ப தாக வங்கியின் முகாமையா ளர் ஜகத் அனுரசிறியிடம் கோரியுள்ளார். அவரது வங் கிக் கணக்கைப் பரிசீலித்த போது 11 லட்சத்து 39 ஆயி ரத்து 60 அமெரிக்க டொலர் வைப்பிலிடப்பட்டிருந்தது.

அந்தப் பணத்தில் 3 கோடி ரூபாவை உடனே எடுக்க வும் மேலும் 5 கோடி ரூபாவை என்.டி.பி. வங்கி யில் உள்ள கணக்குக்கு மாற்றவும் அவர் வங்கி முகா மையாளரைக் கோரியுள் ளார். அதற்குரிய விண்ணப் பத்தை மேற்கொள்ளுமாறு முகாமையாளர் அவருக்கு கூறியுள்ளார்.

இந்நிலையில், நியூயோர்க் கில் உள்ள இலங்கை வங் கிக் கிளையிலிருந்து இங்கு மின்னஞ்சல் அனுப்பப்பட் டுள்ளது. அதில், இணைய ஊடுருவல் மூலம் பணம் திருடப்பட்டுள்ள விடயம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கை வங்கியின் கிளைக்கு பணம் பரிமாற்றப் பட்டமையும் அறிவிக்கப்பட் டது. இதனையடுத்து உஷா ரடைந்த இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் பொலிஸாருக்கு தகவலைத் தெரியப்படுத்தியுள்ளார்.

முதல் நாள் வங்கியில் வந்து பணத்தைப் பெற்றுச் சென்ற ஜனக சமிந்த வங்கிக்கு மீண்டும் வந்தபோது பொலி ஸார் அவரைக் கைது செய் தனர்.

அவர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில், லிட்றோ சமையல் எரிவாயு நிறுவன முன்னாள் தலை வர், இந்தியாவைச் சேர்ந்த டுட்டாலியா என்பவர் அமெ ரிக்க டொலர்களை வங்கி யில் வைப்பிலிடுவார். அவ ருக்கு 50 சதவீதத்தையும், 30 சதவீதத்தை தன்னை (ஜனக சமிந்த) எடுத்துக் கொள்ளுமாறும், 20 சதவீ தத்தை தனக்கு (லிட்றோ சமையல் எரிவாயு நிறுவன முன்னாள் தலைவர்) தருமா றும் கூறியதாகத் தெரிவித் துள்ளார்.

கொழும்பிலுள்ள பிரபல ஐந்து நட்சத்திர விடுதியில் வைத்து, இரு இந்தியர்க ளுக்கு லிட்றோ சமையல் எரிவாயு நிறுவன முன்னாள் தலைவர் பணம் வழங்கி யுள்ளார். இந்தியர்கள் இருவ ரும் அந்தப் பணத்துடன் நாட்டைவிட்டுத் தப்பிச் சென் றுள்ளனர். இதேவேளை லிட்றோ நிறுவன முன்னாள் தலைவருக்கு 300 லட்சம் ரூபா பணம் கிடைத்துள்ள நிலையில், 20 லட்சமே தன் னிடம் இருப்பதாக அவர் வாக்குமூலம் வழங்கியுள் ளார். எஞ்சிய பணம் அர சின் பெரும் புள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் சந்தேகம் எழுந் துள்ளதாக, குற்றப் புலனாய் வுப் பிரிவினர் மேலும் தெரி வித்தனர். (5.31)



## உள்ளூராட்சிமன்ற கட்டளை திருத்த சட்டத்தில் சபாநாயகர் இன்று கையெழுத்து

கொழும்பு, ஒக். 12

நாடாளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்ட மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகள் கட்டளை திருத் தச் சட்டத்துக்கு இன்று வியாழக் கிழமை சபாநாயகர் கரு ஜயசூ ரிய கைச்சாத்திடவுள்ளார். இந் தச் சட்டவரைவு கடந்த திங்கட் கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது. (5.31)

## விசாரணை முடியும் வரை பொறுத்திருங்கள்

*லிட்றோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு அரசு பதில்*

கொழும்பு, ஒக். 12

லிட்றோ சமையல் எரி வாயு நிறுவனத்தின் முன் னாள் தலைவர் உண்மை யிலேயே குற்றம் செய்த வரா என்பதை விசாரணை யிலேயே கண்டுபிடிக்க வேண்டும். அவர் குற்ற மற்றவராகக் கூட இருக்க லாம். எதுவாக இருந்தா லும் விசாரணையின் முடிவிலேயே கூறமுடியும். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சரு மான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்க ளத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

லிட்றோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மீது சுமத்தப்பட் டுள்ள குற்றச் சாட்டில் அவர் உண்மையி லேயே குற்றம் செய்தவரா என் பதை விசார ணையி லேயே கண்டுபி டிக்கவேண்டும். ஒரு வேளை அவர் குற்றமற்ற வரா கக்கூட இருக்கலாம். அவருடைய வங்கிக் கணக்குக்கு யாராவது பணத்தை மோசடி செய்து வைப்புச்செய்திருக்கலாம். இவர் நண்பர் என்ற அடிப் படையில் யாருக்காவது



உதவி செய்திருக்கலாம். அவ்வாறு ஏதாவது இடம் பெற்றிருக்கலாம் என்று நான் கருதுகிறேன். உண் மையில் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரி யாது. எதுவாக இருந்தா லும் விசாரணையின் முடி விலேயே கூறமுடியும் - என்றார். (5.31)

## பிணைமுறி ஊடாக நிதி திரட்ட மகேந்திரனுக்கு எந்தவொரு ஆலோசனையும் வழங்கவில்லை

*அமைச்சர்கள் இருவரும் ஆணைக்குழு முன்னிலையில் திட்டவட்டம்*

பிணை முறி ஊடாக அரசுக் குத் தேவைப்பட்ட நிதியை திரட்ட, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர் ஜுன் மகேந்திரனுக்கு தாம் எந்தவொரு ஆலோசனை யும் வழங்கவில்லை என்று அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம மற்றும் கபீர் ஹாசிம் ஆகியோர் அரச தலைவர் ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித் துள்ளனர்.

பிணைமுறி விசாரணை முன்னெடுக்கும் அரச தலை வர் ஆணைக்குழு முன்னி லையில் நேற்று விசார ணைகள் ஆரம்பமானது. அமைச்சர்கள் இருவரும் தலா 10 நிமிடங்களே சாட்சி யமளித்தனர்.

ஐ.தே.கட்சிக்கு அர்ஜுன் அலோசியசிடமிருந்தோ பேப் பர்சுவல் நிறுவனத்திடமி ருந்தோ நிதி பெற்றுக் கொள் ளப்படவில்லை என்று இருவ ரும் ஆணைக்குழுவின் கேள்விகளுக்குப் பதிலளிக் கையில் தெரிவித்துள்ளனர்.

15 பில்லியன் ரூபா நிதித் தேவையை பிணை முறி கொடுக்கல் வாங்கல் ஊடாக நிவர்த்தி செய்ய ஒருபோதும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திர னுக்கு ஆலோசனை வழங் கவில்லை என்று அமைச்சர் கள் குறிப்பிட்டனர். (5.31)

## ரவி, அர்ஜுன் மகேந்திரன் தொடர்பில் பேணிய ஆவணங்களை ஒப்படைக்க அரச தலைவர் ஆணைக்குழு பணிப்பு

கொழும்பு, ஒக். 12

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற் றும் மத்திய வங்கியின் முன் னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் இருவரும் முன்னெடுக்கவேண்டிய வேலைகள் என்ன என்ப தைத் தெளிவுபடுத்தும் வித மாக பேப்பசுவல் ட்ரசீஸ் நிறுவனம் வைத்திருந்ததாகக் கூறப்படும் இரு கோவைக ளையும் உடனடியாக விசா ரணைக் குழுவில் சமர்ப் பிக்குமாறு அரச தலைவர் ஆணைக்குழு நேற்றுப் பணித்துள்ளது.

பிணைமுறி மோசடி தொடர் பில் விசாரணை முன்னெ டுக்கும் அரச தலைவர் ஆணைக்குழுவில் நேற் றைய தினமும் விசாரணை கள் தொடர்ந்தது.

பேப்பசுவல் ட்ரசீஸ் நிறுவ னத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியசிடமிருந்து குற் றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றிய அலைபேசிக ளிலிருந்து பரிமாறப்பட்ட குறுஞ்செய்திகளுக்கு அமை வாக நேற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போதே மேற்படி பணிப்புரையை ஆணைக் குழு விடுத்துள்ளது. (5.31)

## கள்ளுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஒக். 12

சட்டவிரோத கள் உற்பத்திக ளைத் தடுப்பதற்காக மதுவரி கட்டளைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அரசு நடவ டிக்கை எடுத்துள்ளது.

உள்நாட்டுக் கள் உற்பத் தியை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாக அமைச்சரவையின் இணைப்பேச்சாளரும் காணி அமைச்சருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

கித்துள் கள் தவிர்ந்த ஏனைய கள் வகைகளை இறக்குவதற்குப் பயன்படுத் தப்படுகின்ற தென்னை மற்றும் பனை மரங்களிலி ருந்து கள் இறக்குவதற்கு வ தற்கு அனுமதிப் பத்திரத் தைப் பெறவேண்டும் என்று விடயத்தை உட்படுத்தி மதுவரி கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் நிதி அமைச்சரால் முன் வைக்கப் பட்டது - என் றார். (5)

# யாழ். மாவட்டச் செயலாளர் குழு நெடுந்தீவுக்கு திடீர் பயணம்

## தேவைகள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.12
யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் நெடுந்தீவுக்கு நேற்று திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அவருடன் மாவட்டச் செயலக அதிகாரிகள் குழுவினரும் சென்றிருந்தனர். அத்துடன் திணைக்களங்களின் அதிகாரிகளும் சென்றிருந்தனர்.
பிரதேசத்தில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கே மாவட்டச் செயலாளர் அங்கு நேரடியாகச் சென்றிருந்திருந்தார்.
நெடுந்தீவுப் பகுதியில் உள்ள குறைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் பலரும் மாவட்டச் செயலாளருக்குச் சுட்டிக்காட்டியிருந்தனர்.
அவரது இந்தத் திடீர் பயணம் குறித்து அவரிடம் கேட்டபோது ,
யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள சில பிரதேச செயலகங்களில் நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரிவும் ஒன்று.
அந்தப் பிரதேசத்தில் இருந்து தொடர்ச்சியாகத் தேவைகள், குறைகள் எனப் பலதரப்பட்ட விடயங்களை எமது பிரதேச செயலாளர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.
இதனால் அவற்றைப் பட்டியலிட்டோம். அது ஒருபெரிய பட்டியலாகவே இருந்தது.
தீவின் தேவைகளில் நிவர்த்தி செய்ய வேண்டியதை முன்னுரிமைப்படுத்தும் பணியை மேற்கொண்டோம்.
ஆனாலும் ஒரு சந்தேகம் இருந்தது. இதில் எதனை முன்னுரிமைப்படுத்துவது என்பதே அது. அதனை நாம் தீர்மானிப்பதைவிடவும் அந்த மக்களே தீர்மானிக்க வேண்டும்.
அல்லது குறைந்த பட்சம் அந்தப் பணியைச் செய்யும் நாம் அவற்றை தேவைகளை நேரில் பார்யிைட வேண்டும் என முடிவெடுத்தோம்.
அதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தில் இருந்து ஓர் அணியும், சகல திணைகளங்கள் சார் அதிகாரிகளையும் ஒன்றிணைத்து நேரில் செல்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.
இதற்கமைய நாம் அங்கு சென்றோம். பிரச்சினைகள் - தேவைகள் தொடர்பில் ஆராய்ந்தோம்.
பிரதேச செயலாளரிடமிருந்தும் அதற்கான தரவுகளையும் விவரங்களையும் பெற்றோம்.
2017ஆம் ஆண்டின் திட்ட முன்னேற்றங்கள் தொடர்பிலும், 2018ஆம் ஆண்டில் மேற்கொள்ளவுள்ள கைத்தொழில், விவசாயம் , கடல்வளம் ஆகிய திட்டங்கள் நவம்பர் மாதமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார். (ய-101)



## சிறப்புத் தேவையுடையோர் விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி, ஒக்.12
தென்மராட்சி பிரதேச சிறப்புத் தேவையுடையோர் விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.
பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினத்தையொட்டி பிரதேச சமூக சேவைகள் பிரிவினரால் போட்டிகள் நடத்தப்பட்டன.
நடமாட முடியாதவர்க ளுக்கான முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகளும், விழிப்புலன் அற்றவர்களுக்கு பலூன் ஊதி உடைத்தல், செயற்கைக் கால் பொருத்தப்பட்டவர்களுக்கு வேக நடை, கேட்கும் திறனற்ற, வாய்பேச முடியாதவர்க ளுக்கு 100 மீற்றர் ஓட்டப்போட்டிகளும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போத்தலில் நீர் நிரப்புதல் போட்டிகளும் நடத்தப்பட்டன. (ய-9)

## வலந்தலைப் பாடசாலையில் ஏழு மாணவர் புலமைச் சித்தி

காரைநகர், ஒக்.12
கடந்தவாரம் வெளியான தரம் 5 புலமைப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி தீவக வலயத்தில் காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை மாணவி பரமேஸ்வரன் துவாகரா 181 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளார்.
மேலும் சித்தியடைந்த மாணவர்களின் விவரம் வருமாறு
பரமேஸ்வரன் துவாரகா 181, கம்சன் அபிஷாலி 172, சரவணபவன் அபிசாயினி 170,
சிவராசா ரஜீபன் 170, திருநீலகண்டசிவம் றஜீவன் 169,
பூபாலசிங்கம் கபிலன் 157.
இருபது வருடங்களுக்குப் பின்னர் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டபோதும் முதல்தடவையாக கடந்த ஆண்டே புலமைப் பரீட்சையில் இரு மாணவர்கள் சித்தியடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-250)

## வீதிகளில் குப்பை போட்ட 348 பேருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஒக்.12
வீதிகளில் குப்பை கொட்டும் விவகாரத்தில் இதுவரை 348 பேரிடம் தண்டம் அறவிடப்பட்டதாக மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் வீதிகளில் குப்பை போடுபவர்களுக்கு எதிராக சம்பவ இடத்திலேயே தண்டம் விதிக்கும் நடைமுறை இருந்துவருகின்றது. இதற்கமைய இந்த வருடத்தில் இதுவரை 348 பேருக்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை இதில் பாரதூரமானவை என இனம் காணப்படும் சம்பவங்கள் நீதிமன்றில் பாரப்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் இதுவரைக்கும் 13 பேருக்கு எதிரான வழக்குகளை நாம் நீதிமன்றில் பாரப்படுத்தியுள்ளோம் எனத் தெரிவித்தார். (ய-101)



உலக அஞ்சல் தினம் கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் அண்மையில் கடைப்பிடிக்கப்பட்டது . கரவெட்டி பதில் அஞ்சல்அதிபர் திருமதி யோகராணி தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (422)

## மருதங்கேணியில் நாளை இடர் எச்சரிக்கை நிகழ்வு

திடீர் இயற்கை இடர் முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் 2மணி வரை மருதங்கேணி பகுதியில் இடம்பெறவுள்ளது என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ந.வேதநாயகன் அறிவித்துள்ளார்.
இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் கிராம, பிரதேச, மாவட்ட ரீதியான இடர் முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் எமது மாவட்டத்தில் மருதங்கேணிப் பிரதேசத்தில் நாளையதினம் முன்னெச்சரிக்கை ஒத்திகை இடம்பெறவுள்ளது. எனவே இதன் முக்கியத்து வத்தை அறிந்து பொதுமக்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ய-8)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுத்தப்பட்ட படகும் இயந்திரமும் அரசுடமையாகியது

### ஊர்காவற்றுறை நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12
அல்லைப்பிட்டியில் சட்டவிரோதமாகத் தங்கூசி வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டவர்களின் படகு மற்றும் இயந்திரங்களை அரச உடமையாக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
அல்லைப் பிட்டியைச் சேர்ந்த 4 மீனவர்கள் படகில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டி மாவட்ட நீரியல்வளத் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.
நீதிமன்றில் குற்றச்சாட்டை மீனவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அது பற்றிய விசாரணை இடம் பெற்றுவந்தது.
விசாரணையின்போது அவர்கள்மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது.
சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட 4 மீனவர்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டது. குறித்த மீனவர்களின் படகு மற்றும் இயந்திரத்தையும் அரசுடமையாக்குமாறும், தடைசெய்யப்பட்ட வலைகளை அழிக்குமாறும் திணைக்களத்துக்கு நீதிமன்று உத்தரவிட்டது. (4-101)

## யாழ். ரத்னா விருதுக்கு விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.12
யாழ்.ரத்னா விருது மற்றும் கலைத்துறைச் சான்றிதழுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் விருது வழங்கப்படுகின்றது.
இலக்கியம், எழுத்துறை, நாடகம், இசை நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டியம், சங்கீதம், ஓவியம், இசை, சிற்பம், உலோகக் கலை ஆகிய துறைகளில் கலைப்பணியாற்றிய எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
60 வயது முழுமையடைந்த இதுவரை யாழ். ரத்னா விருதைப் பெற்றுக்கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட கலைஞர்கள். இதற்கு விண்ணப்பிக்க முடியும்.
அத்துடன் கலைத்துறைச் சான்றிதழுக்கான விண்ணப்பங்களும் மேற்படி துறைகளில் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பதாரி 18 வயதுக்கு உட்பட்டவராகவும், 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்கவேண்டும். கலைஞர்கள் யாழ்ப்பாணப் பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் விண்ணப்பங்களைப் பெற்று, கோரப்பட்ட ஆவணங்களுடன், கலைத்துறை சார்ந்த ஆவணப் பிரதிகளுடனும் எதிர்வரும் 17ஆம் திக திக்கு முன்னர் வி ண்ணப் பிக்க முடியும் என யாழ்ப்பாண பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவரு மான பொன்னம்பலம் தயானந்தன் தெரிவித்துள்ளார். (ய)

## சிறப்புத் தேவையுடையோர் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.12
பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் ஓவியப் போட்டிகள் நடைபெறவுள்ளன என கருவி சமூகவள நிலையத்தின் செயலாளர் ஜசிந்தன் தெரிவித்தார்.
மாறிவரும் உலகில் மாற்றுத்திறனாளிகள் எனும் தலைப்பில் முறையே 250-300 சொற்களில் மாணவர்களும், 300-400 சொற்களில் பொதுமக்களும், கட்டுரை மற்றும் சிறுகதை அமைக்கவேண்டும்.
கவிதை 10-20 வரிகளில் மாணவர்களும், 30-40 வரிகளில் பொதுமக்களும் எழுத வேண்டும். ஓவியம் ஏ4 தாளில் வரையப்படுதல் வேண்டும். அனைத்தும் சுயமான படைப்பாக அமைதல்வேண்டும். போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களின் சுயவிவரங்களைக் குறிப்பிட்டு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்க வேண்டும்.
இதுதொடர்பான மேலதிக விவரங்களைப் பெற அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள கருவி நிலையத்துக்கு நேரடியாக வரலாம். அல்லது 021 205 4224, 0766385563 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (ய-8)

## உணவகத்தை திறக்க நீதிமன்று அனுமதி

சாவகச்சேரி, ஒக்.12
கைதடியில் தற்காலிகமாக மூடப்பட்ட உணவகத்தை திறப்பதற்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதி வழங்கியது. யாழ்ப்பாண மாவட்ட உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகரால் மேற்படி உணவகம் திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.
உணவகத்தில் 11 குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதிகாரிகள் மன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். உணவகத்திற்கு சீல் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.
இப்போது உணவகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.
இதனையடுத்து நேற்று திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. 11 குறைபாடுகளுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் 11ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ய-9)

## அம்பிகைபாகனின் சிலை திறப்பு நேற்று

சாவகச்சேரி, ஒக்.12
மருத்துவ வள்ளல் அமரர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகனின் 253 ஆவது நினைவு நாளை முன்னிட்டு முழங்காவில், அக்கராயன் குளம், பளை, தென்மராட்சி பிரதேச மக்களின் பங்களிப்புடன் சாவகச்சேரி மருத்துவமனை முன்பாக அமைக்கப்பட்ட உருவச் சிலை நேற்றுத் திறக்கப்படடது.



சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பொறுப்பதிகாரி மருத்துவர் சி.குமரவேள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மந்திகை ஆதார மருத்துவமனை பொறுப்பதிகாரி மருத்துவர் த.குகதாசன் திருவுருவச் சிலையைத் திறந்தார்.
கலாநிதி வை.சிவராசாவின் எற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலர் திருமதி தே.பாபு, சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு. ஏ. விக்கிரமசிங்க, வட மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம், பளைப் பிரதேச சபையின் ஓய்வுநிலை செயலாளர் கு.ந.பாலசந்திரன், ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் மற்றும் முழங்காவில் அக்கராயன்குளம் பளை மற்றும் தென்மராட்சி பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவு மக்களும் கலந்து கொண்டனர். (ற-ரி2,9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | கன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 100 | 80 | 60 |
| கத்தரி | 130 | 120 | 100 | 100 | 100 |
| மரவள்ளி | 80 | 80 | 60 | 60 | 50 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 80 | 120 |
| பாகல் | 140 | 300 | 200 | 300 | 160 |
| க.கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 110 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 240 | 250 | 200 | 260 | 260 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 | 40 |
| தக்காளி | 120 | 140 | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 80 | 80 | 90 | 80 | 80 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 30 |
| ப.மிளகாய் | 380 | 280 | 400 | 450 | 360 |
| புடோல் | 80 | 80 | 100 | 120 | 100 |
| கோவா | 140 | 120 | 120 | 140 | 140 |
| வெண்டி | 80 | 80 | 100 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 180 | 140 | 200 | 200 | 200 |
| தேங்காய் | 75 | 75 | 80 | 90 | 60 |
| உ.கிழங்கு | .90 | 120 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 300 | 100 | 280 | 220 | 300 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 140 | 280 | 200 | 260 |
| கரட் | 120 | 140 | 130 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 140 | 150 | 200 | 120 | 160 |

## சமாதான நீதவான்



யாழ்ப்பாணம், ஒக்.12
அல்வாய் மேற்கு திக்கத்தை பிறப்பிடமாக கொண்ட இரத்தினம் சிவரூபன் அகில இலங்கை சமாதான நீதவானாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி பி. சிவகுமார் முன்னிலை யில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.
இவர் 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2011வரை யாழ். மாநகரசபையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றினார். 2011தொடக்கம் 2017வரை பருத்தித்துறை நகரசபையிலும் 2017இல் இருந்து இன்றுவரை தென்மராட்சி கல்விவலயத்திலும் கடமையாற்றி வருகின்றார்.
பிரத்தியேக கணிதபாட ஆசிரியரான இவர் வடமராட்சி வடக்கு மகாத்மா காந்தி நற்பணிமன்றத்தின் செயலாளருமாவார். (ய-173)

## தரவட்டம் பின்போடல்

சாவகச்சேரி, ஒக்.12
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நாளை டிறிபேக் கல்லூரியில் நடைபெறவிருந்த தரவட்டம் நிகழ்வு பின்போடப்பட்டுள்ளது.
எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இது நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ய)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 600 | 300 |
| கணவாய் | 800 | 600 | 900 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 800 |
| சுறா | 400 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 450 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | – |
| ஓரா | 350 | 300 | 450 | 300 |
| திரளி | 250 | 200 | 300 | 150 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 100 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | 400 |
| மதனம் | 200 | 150 | 300 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 500 | 300 |
| வாளை | 150 | 200 | 400 | 300 |

### கல்லுண்டாய் பிரதேசத்தில்

# விவசாய நிலங்களை பாதுகாப்பதற்கு மழைநீரைத் தேக்கிவைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.12
நவாலி கல்லுண்டாய் கடற்கரையோரப் பிரதேசத்தில் விவசாய நிலங்கள் உவராகி வருகின்றன. குடிநீர்க்கிணறுகளும் உவர்த்தன்மை அடைகின்றன. இதனைத் தடுப்பதற்கு மழைநீர் தேக்கிவைக்கப்படவுள்ளது. சுமார் 60 ஏக்கர் பரப்பளவிலான காணியில் இந்தத் திட்டம் முன்னெடுக் கப்படவுள்ளது. தற்போது நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மண் அணை கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:
வலி.வடக்குப் பிரதேசத்தில் தெல்லிப்பழையிலிருந்து வலி.தெற்கு, வலி.தென்மேற்கு ஆகிய பிரதேசங்களுடாக சுமார் 15கி.மீ.நீளமான வழுக்கையாறு கல்லுண்டாய் பாலம் வரை சென்றடைகின்றது. இந்த வாய்க்கால் மூலமாகவரும் மழை வெள்ளத்தைத் தேக்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தநீர் கல்லுண்டாய் பாலம்ஊடாக கடலைச் சென்றடைகின்றது. கல்லுண்டாய்ப் பிரதேசத்தை அண்டியுள்ள நவாலிப் பகுதியிலுள்ள நெற்காணிகள் நாளுக்கு நாள் உவர்நிலமாகமாறிவருகின்றன. நெற்செய்கையும் நிறுத்தப்பட்டுள்ளது இதேபோல் இந்தப் பிரதேசத்திலுள்ள கிணறுகளும் உவர் நீராகமாறி வருகின்றன. இப்பிரதேசத்தில் வாழும் நூற்றுக்கணக்கான குடும்பத்த வர்கள் குடிநீரைத் தேடித் தூர இடங்களுக்கு அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.
இந்நிலையில் விவசாய சம்மேளனங்களின் கோரிக்கையைத் தொடர்ந்து மழைகாலங்களில் வீணாகக்கடலுக்குச்செல்லும் மழைநீரை த் தடுத்து வைப்பதற்கான முயற்சியில் நீர்ப்பாசனத்திணைக்களம் ஈடுபட்டுள்ளது.
கல்லுண்டாய் ,காத்துக்கட்டி, நவாலி ஊரியோடை மயானத்தை அண்டிய பகுதியில் 90 ஏக்கர் நிலப்பரப்பில் மழைநீர்தேக்கிவைக்கப்படவுள் ளது. இதற்கு வசதியாக மழைக்காலத்தை கருத்திற் கொண்டு முதற்கட்டமாக மண் அணை கட்டும் வேலைஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மழைநீரைத் தேக்கி வைப்பதனால் இப்பகுதியில் உவர்நிலமாக மாறிவரும் 300 ஏக்கர்காணியையும் பாதுகாக்க முடியும் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. (ய)

## உதவிப் பொருள் கையளிப்பு

சாவகச்சேரி, ஒக்.12
மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான உதவிப் பொருட்கள் நேற்று தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டன. வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான உதவிப் பொருள்கள் பிரதேச செயலகத்துக்கு கட்டம் கட்டமாக வந்த பின்னர் அவை பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டன. (ற-9)



## புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

சாவகச்சேரி, ஒக்.12
சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் 30 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள உளநலப் பிரிவின் குணமாக்கல் அலகுக் கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.
மருத்துவமனைப் பொறுப்பதிகாரி சி.குமரவேள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தே.பாபு ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்
நிகழ்வில் மந்திகைஆதார மருத்துவ மனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் த.குகதாசன் மருத்துவமனை நோயாளர்நலன்புரிச் சங்கப்பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-9)



ஆண்களுக்கான 'ரீசேட்' வகைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# அரசியல் கைதிகளின் விடயத்தில் ஆக்கபூர்வ நடவடிக்கை இல்லை

## வடக்கு சுகாதார அமைச்சர் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக்.12

தமிழ் அரசியல் கைதிகளின் அகிம்சைப் போராட்டங்கள் முடிவுக்கு கொண்டு வரப்படுகின்றன. தவிர அவர்களின் விடுதலை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் நிலை தொடர்பாக மன்னாரில் வைத்து அவர் நேற்றுக் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனுராதபுரம் சிறைச்சாலையில் எமது தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து போராடுகிறார்கள். சிலரது உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீர் ஆகாரம் கூட உண்ணாமல் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இதனால் சிறு நீரகங்கள் கூட பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு வந்தார்கள். எனினும் அவை வாக்குறுதிகளினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனவே தவிர ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை அரசும், ஏனைய அரசியல்வாதிகளும் கூட எடுக்கவில்லை.

இதில் எங்களுடைய பங்களிப்பு குறைவானதாக உள்ளதா என்கின்ற சந்தேகமும் எழுகின்றது.

நாட்டில் போர் முடிவடைந்து பல ஆண்டுகளாகிவிட்டன. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை திட்டமிட்ட வகையில் தாமதப்படுத்தப்படுவதாகவே நாங்கள் கருதுகின்றோம். இதுதொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைவரும் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (ய-56)



## அக்கராயன் கரும்புத்தோட்டக்காணி:

# இறுதிமுடிவு எட்டப்படும்வரை பணிகள் இடம்பெறக்கூடாது

### மாவட்டச் செயலர் அறிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.12

அக்கராயன் கரும்புத் தோட்ட விவகாரம் தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படும். அதுவரை எவரும் அப்பகுதிக்குள் எந்தவிதமான பணிகளிலும் ஈடுபடக்கூடாது என கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விவசாயிகள் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் இணைத் தலைமைகள் மற்றும் காணித் திணைக்கள அதிகாரிகளால் விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படும். அந்தமுடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அக்கராயன் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தையும் விவசாயிகளுக்கே வழங்குவதற்கு மாவட்டச் செயலாளர் ஆவணசெய்ய வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்தனர். இதுதொடர்பில் மேலும் தெரிவித்தாவது:

அக்கராயன் பகுதியில் தற்போதும் பல நூறு விவசாயிகள் நிலமற்று வாழ்கின்றனர். ஆனால் கரும்புத் தோட்டக் காணியை முன்பு குத்தகைக்குப் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் தனவந்தர்களுக்கு வழங்குவதனால் பயன் ஏதும் கிட்டப் போவதில்லை என விவசாயிகள் குறிப்பிட்டனர். (ய-101)

## தேசிய உற்பத்திவார நிகழ்வில் விவசாயிகளுக்கு உதவித்திட்டம்

வடக்கு மாகாணத்தின் தேசிய உற்பத்தி வார நிகழ்வில் கிராம மட்டத்தில் விவசாயத்தை உயர்த்தும் நோக்கில் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கப்படும் என்று மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய உற்பத்திவார நிகழ்வுகளை யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் விவசாயிகளுக்கு பல உதவித் திட்டங்கள் வழங்கப்படவுள்ளது. விவசாயம் என்பது எமது மாகாணத்தின் முதன்மை வாழ்வாதாரம். ஆகவே அவர்களைத் தட்டிக்கொடுக்க வேண்டும். விவசாய உற்பத்தி சார்ந்த இந்த நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன. மாவட்ட ரீதியில் ஒரு பயனாளிக்கு 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான சூரிய சக்தியில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரம் மானியமுறையில் வழங்கப்படும். இதற்கு அரைவாசிப் பணம் செலுத்த வேண்டும். 15பேருக்கு மரமுந்திரிகை மரங்கள் வழங்கப்படும். இதற்காக வீட்டுத் தோட்டம், மற்றும் பெருந்தோட்டப் பயனாளிகள் 15 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். 5 பேருக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படும் இவை தவிர விவசாயக் கிணறுகளை சீரமைப்புச் செய்தவர்களுக்கான காலோசைகளும், நவீன விவ சாயத்திற்கான 5வகை இயந்திரங்களும் வழங்கப்படும். இதற்காக அரச தலைவரின் செயலகம் 25 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது என்றார். (ய-ரி)

# விதைநெல்லுக்குத் தட்டுப்பாடு கிளி. விவசாயிகள் திண்டாட்டம்

### மாவட்டச் செயலரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.12

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக விதைப்பு நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்பட வேண்டும் என மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் விவசாயிகள் விதை நெல்லைப் பெற்றுக் கொள்வதில் பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். தமக்கு விதை நெல்லைப் பெற்றுத் தருமாறு மாவட்டச் செயலாளரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். விவசாயக் குழு கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மாவட்டச்செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே விவசாயிகள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இரணைமடுக்குளம், அக்கராயன்குளம், வன்னேரிக்குளம், கரியாலைநாகபடுவான்குளம், குட முருட்டிக் குளம், கல்மடுக்குளம் மற்றும் புதுமுறிப்புக்குளம் ஆகிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் பெரும்போக விதைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட திகதிக்குள் விதைப்பு நிறைவு செய்யப்பட வேண்டும். குளங்களின் நீர்மட்ட உயர்வுக்கு ஏற்ப நீர் விநியோகம் இடம்பெறும். இரணை மடுக்குளத்தில் பத்தடிக்கு நீர் உயர்ந்த பின்னரே முதலாவது விநியோகத்தை ஆரம்பிப்பது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதேவேளை மாவட்டத்தில் விதை நெல்லுக்கு நெருக்கடி இருப்பதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது. கடந்த சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை விதை நெல்லாகப் பயன்படுத்த முடியாது.

சிறுபோகச் செய்கையின் இறுதிநேரத்தில் குளங்களில் நீர்மட்டம் குறைவடைந்ததன் காரணமாக நெற் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டது. அவை அறுவடையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதனால் அதிகளவான விவசாயிகள் தமது நெல்லை விதை நெல்லுக்குப் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளாக கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக நெற் செய்கை முழுமையாக வெற்றியளிக்கவில்லை என சுட்டிக் காட்டப்பட்டது.

எனவே, விதை நெல்லைப் பெற்றுத் தருவதற்கு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரினர்.

அதேநேரம் இங்கு கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான கால அட்டவணையும் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 28.02.2018 வரை கால்நடைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர், கரைச்சி, பளைப் பிரதேச செயலாளர்கள், நீர்ப்பாசன பிரதிப்பணிப்பாளர், கமநல உதவி ஆணையாளர், கமக்கார அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ய-21)

## மீனவர்கள் விவகாரம் குறித்து புதுடில்லியில் இருநாள் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக்.12

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இரு நாள் பேச்சு புதுடில்லியில் எதிர்வரும் 14, 15 ஆகிய இரு தினங்களில் இடம்பெறவுள்ளது.

இலங்கை மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையிலான இலங்கை அமைச்சர்கள் மற்றும் இந்திய நீரியல் வளத்துறை அமைச்சர்கள் மட்டத்திலான குழுவினர் இதில் பங்கேற்க உள்ளனர்.

இதற்கான இலங்கைக்குழுவினர் நாளை மாலை இந்தியா பயணமாகின்றனர்.

இலங்கைக் கடலுக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து இங்கு முக்கியமாக ஆராயப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ய-101)

# முதியவர்கள் எமது பொக்கிசங்கள் அவர்களைப் போற்றிப் பாதுகாப்போம்

### வவுனியா தெற்கு பிரதேசசபைச் செயலாளர் தெரிவிப்பு

வவுனியா, ஒக்.12

ஒரு சமூகத்தின் பொக்கிசங்கள் சிறுவர்களும் முதியவர்களுமே. அவர்கள் போற்றப்படவேண்டியவர்கள் இவ்வாறு வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேசசபைச் செயலாளர் திருமதி சுகந்தி கிஸோர் தெரிவித்துள்ளார்.

சிதம்பரபுரம் கற்குளம் படிவம் 4இல் இடம்பெற்ற பன்னாட்டு சிறுவர், முதியோர் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதியவர்களை பாதுகாக்க வேண்டியது கட்டாயமாகும். அவர்கள் எங்களுடைய பொக்கிசங்கள் என்பதை மறக்கக்கூடாது. நாங்களும் நாளை முதியவர்களாக மாறுவோம். இப்பொழுதிருந்தே எங்கள் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்கவேண்டும். எம்மைப் பார்த்து அவர்களும் முதியோரைப் பேணும் பண்பை வளர்த்துக் கொள்ளவேண்டும். இதுதான் நடைமுறைவிதி -என்றார்.

இதன்போது 101 மற்றும் 88 வயதுடைய இரு முதியவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது. இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தானின் இணைப்புச் செயலாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ய -21)



## மகளிர் விவகாரத்துக்கு இரு திணைக்களங்களை புதிதாக ஆரம்பிக்கத் திட்டம்

### அந்த அமைச்சின் செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.12

வடக்கு மாகாணத்தில் மகளிர் விவகார அமைச்சின் 2 திணைக்களங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது அமைச்சின் கீழ் கூட்டுறவு, சமூக சேவைகள் மற்றும் தொழிற்துறை ஆகிய 3 திணைக்களங்கள் உள்ளன. ஆனால் எமது அமைச்சு மகளிர் விவகார அமைச்சு என்று சொல்லப்படுகின்றது.

மகளிர் விவகாரம் மற்றும் மறுவாழ்வு சார்ந்த வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு எம்மிடம் தனியான திணைக்களம் மற்றும் ஆளணி இல்லை. ஏனைய 3 திணைக்களங்களையும் உள்வாங்கியே வேலைகளைச் செய்கிறோம்.

ஆகவே எமக்கு மறுவாழ்வு, மகளிர் விவகாரம் ஆகிய 2திணைக்களங்களை ஆரம்பிக்கவேண்டும். திணைக்களங்களை ஆரம்பிப்பதற்கான அனுமதியை பெறுவதற்காக பிரதி தலைமைச் செயலாளருக்கு கடந்தவாரம் அறிக்கையை சமர்பித்துள்ளோம்.

அந்த அனுமதி கிடைத்த பின்னர் கொழும்பு ஊடான செயற்பாடுகள் நடைபெறும். அனுமதி வழங்கப்பட்டால் இந்த 2 திணைக்களங்களை ஆரம்பிக்கலாம்.இதற்காக 20 உத்தியோகத்தர்கள் வரை நியமிக்கவேண்டும்.அதன் பின்னரே மகளிர் விவகார அமைச்சின் பெயருக்கு அமைவாக வினைத்திறனான செயற்பாடுகள் நடைபெறும் என்றார். (ய -ரி)

## சிவில் பாதுகாப்பு ஆசிரியர்கள் இருவருக்கு தொண்டராசிரியர் பெயர்ப் பட்டியலில் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக்.12

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் நியமன விவகாரம் பல்வேறு பிரச்சினை களைத் தோற்றுவித்துள்ளது. நீண்டகாலம் பாடசாலைகளில் தொண்டர்களாகச் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் இழுபறி நிலையில் இருந்து தற்போது நியமனப் யெர்ப் பட்டியல் வரை சென்றுள்ளது. எனினும் தொண்டராசியர்களாகக் கடமையாற்றிய பலர் சம்பவத் திரட்டுப் புத்தகத்தைக் காரணம் கூறி கொழும்பு அரசால் நியமனத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளனர். சிலரது பெயர்களே நிரந்தரநியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் தொண்டராசிரியர்களாக தேர்வு செய்யப்பட்டவர்கள் பட்டியலில் இராணுவத்தினரின் சிவில் பாதுகாப்பு முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயரும் இருப்பதாக முறையிடப்பட் டுள்ளது.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தொண்டரடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்களை நிரந்தர மாக்கும் நோக்கில் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. இறுதி செய்யப்பட்ட 182 தொண்டராசிரியர்களின் பெயர்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு கடந்தவாரம் அனுப்பி வைக்கப்பட்டன. இவ்வாறு அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் தற்போது சுட்டிக்காட்டப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர்களுடைய நியமனத்தையும் வடக்கு கமாகாண கல்வி அமைச்சு இடைநிறுத்தியுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் படையினரால் நடத்தப்படும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் இருவரின் பெயர் விபரங்கள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழான பணி என்பதும் ஓர் நிரந்தர அரச உத்தியோகமாகவே கணிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ஒரு திணைக்களத்தில் இருந்து பிறிதொரு திணைக்களத்துக்கு நேர்முகத் தேர்விற்குச் செல்வதானால் திணைக்களத் தலைவரின் சிபாரிசுடனேயே செல்லவேண்டும் என்பதே விதிமுறையாகும். அவ்வாறு இருக்கும் போது இவர்களுடைய பெயர்கள் தொண்டராசிரியர்களுடைய நியமப் பெயர்ப்பட்டியலில் உள்ள வாங்கப்பட்டுள்ளது அனைவரிடத்திலும் கேள்வியெழுப்பியுள்ளது. இது தொடர்பில் உரியவர்கள் கவனமெடுக்க வேண்டும் என சு டிக்காட்டப்படுகின்றது. (ய-101)

## உள்ளூராட்சி சபை உருவாக்கம்; ஆய்வுகள் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஒக்.12

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் புதிய உள்ளூராட்சி சபைகள் உருவாக்கம் மற்றும் தரமுயர்த்தல் தொடர்பான ஆய்வுகளின் முடிவுகள் விரைவில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

மாவட்டங்கள் தோறும் இயங்கிய ஆய்வுக்குழுக்கள் தற்தபோது மது முடிவுகளை வடக்கு மாகாண தலைமைச் செயலருக்கு அனுப்பி வைக்கின்றன. இதுதொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் 6 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு புதிய சபைகளை உருவாக்குவதற்கும், 6 சபைகளை தரமுயர்த்துவதற்குமாக மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இவ்வாறு நியமிக்கப்பட்ட குழுக்களுக்கு அந்தந்த மாவட்டத்தின் செயலாளர்களே தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் , தலைமைச் செயலாளர் சார்பில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் , மாவட்ட புள்ளி விவர உத்தியோகத்தர் மற்றும் நில அளவைத் திணைக்கள அதிகாரி என தலா ஆறுபேர் அதில் அங்கம் வகித்தனர்.

இந்தக் குழுவினர் தமது ஆய்வுகளை தற்போது சமர்ப்பித்து வருகின்றனர். இதன் முடிவுகளை அமைச்சின் செயலாளருக்கு அனுப்புவதற்கு முன்னர் உள்ளூராட்சி சபைகளில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் மருதங்கேணி, கிளிநொச்சியில் கண்டாவளை, முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் , முல்லைத்தீவு நகரம், மன்னார் மாவட்டத்தில் மடு போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளில் புதிய சபைகளும்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலி. தெற்கு, கரவெட்டி மற்றும் மானிப்பாய், நல்லூர் ஆகியவற்றுடன் காங்கேசன் துறைசபைகளோடு வவுனியா நகர சபை ஆகியவற்றை தரமுயர்த்துவது தொடர்பிலும் ஆய்வுகள் இடம்பெற்றன - என்றார். (ய-101)

## பளை – முகமாலைப் பகுதியில் தொடருந்து வருகின்ற நேரம் கடவையை மூடாத காப்பாளர்

கிளிநொச்சி, ஒக.12

பளை-முகமாலை பகுதிக் தொடருந்துக் கடவை காலை நேரங்களில் மூடப்படுவதில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்

அங்கு கடவைக் காப்பாளர் இருக்கிறார்.

எனினும், தொடருந்து வரும் வேளைகளில் கடவை மூடப்படுவதில்லை.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கடவை மூடப்படாத காரணத்தால் அங்கு ஒரு விபத்து ஏற்படும் ஏதுநிலை தோன்றியது. இருப்பினும் விரைந்து செயற்பட்ட அந்த நபர் விபத்தில் இருந்து தப்பித்தார் என மக்கள்தெரிவிக்கின்றனர்.

மாதாந்தச் சம்பளம் பெறும் காப்பாளர் தனது பணியை சரிவரச் செய்யவேண்டும்.

காலை நேரங்களில் அதிக கவனத்துடன் கடவைகளை மூடி மக்களைப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறில்லாமல் உதாசீனமாக செயற்படக்கூடாது. இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேணடும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-6)





## தென்னைச் சபையினால் சமூகம்சார் வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.12

வடக்கு மாகாணத்தில் முதல்கட்டமாக 3 மாவட்டங்களில் சமூகம் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படும் என்று யாழ்ப்பாண பிராந்திய தென்னைப்பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே:வைகுந்தன் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

தென்னைப் பயிர்ச்செய்கை சார்ந்த விடயங்களில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் மக்களுக்குப் பயனுள்ள விதத்தில் விழிப்புணர்வுநிகழ்வுகளை நடத்த வேண்டும். இதுபற்றி கடந்த ஆண்டுகளில் சிந்தித்திருந்தாலும் இந்த வருடமே அது சாத்தியமாகியுள்ளது. மாகாணத்தில் சிறுநீரக நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றது. சிறுநீரக நோய் சார்ந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை நடத்த தீர்மானித்துள்ளோம்.

முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் 26ஆம் திகதியும், கிளிநொச்சி மாவட்டத்தில் நவம்பர் மாதம் 9ஆம் திகதியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 16ஆம் திகதியும் நடத்த தீர்மானித்துள்ளோம் - என்றார். (ய-ரி)

## களிமண் சிற்பப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.12

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் களிமண் சிற்பப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வகுப்புகள் எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறும். இதில் இணைந்துகொள்ள விரும்புவோர் இந்தமாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அழகியல் கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

## வடக்கு மாகானத்தின் மக்கள் நல்லொழுக்கம் நிறைந்தவர்கள்

### மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பெருமிதம்

கிளிநொச்சி, ஒக்.12

வடக்கு மாகாண மக்களில் 99 வீதமானவர்கள் நல்லொழுக்கப் பண்புகளைக் கொண்டவர்கள். ஒரு சிலரின் செயற்பாடுகளை வைத்து ஒட்டுமொத்த மக்களையும் மதிப்பிட முடியாது என்று வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் பல்வேறு இடங்களில் வாள்வெட்டுச் சம்பவங்கள் நடக்கின்றன. சம்பவங்கள் தொடர்பில் இளைஞர்கள் பலர் கைதுசெய்யப்படுன்றனர். இவ்வாறு கைது செய்யப்படும் இளைஞர்கள் தொடர்பில் அவரிடம் வினவப்பட்டது. அவர்களின் பின்னணியில் ஆயுதக் குழுக்கள் உள்ளனவா என்றும் கேட்கப்பட்டது.

அப்போது அவர், ஆயுதக் குழுக்களின் பின்னணி ஏதும் இல்லை. வடக்கு மக்கள் நல்லொழுக்கம் கொண்டவர்கள் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் ஆயிரம் பேருக்கான வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. 18 தொடக்கம் 28 வயதுடைய ஆண் பெண் இருபாலாரும் சேவையில் இணையமுடியும். பொலிஸாருக்கு பற்றாக்குறை நிலவுகிறது. இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் சேவைகளை வழங்குவதில் இடர்கள் காணப்படுகின்றன என்றுகுறிப்பிட்டார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு பொலிஸ் நிலையத்தில் சேவைபுரிய ஏற்பாடுகள் உள்ளனவா என அவரிடம் வினவப்பட்டது.

அதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும், பட்டதாரிகளுக்கு பொருத்தமான பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ய)

# கூட்டமைப்பின் நிலைப்பாட்டுடன் ஒருபோதும் உடன்படவே முடியாது

## ஹெல உறுமய தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் நிலைப்பாட்டோடு ஒருபோதும் உடன்பட முடியாது. அவ்வாறு உடன்பட்டால் இனங்களிடையே பிளவு ஏற்படும். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிசாந்த வர்ணசிங்க தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் அரசியல் கட்சிகள் பல முன்வைக்கும் நிலைப்பாடுகளுடன் ஓரளவேனும் ஒத்துப்போக முடியும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் நிலைப்பாடுதான் பிரச்சினையாக உள்ளது. அதனது ஒரு கோரிக்கையையேனும் எம்மால் ஏற்க முடியாமல் உள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பு, அதிகாரப்பகிர்வு தொடர்பில் மங்கள முனசிங்கவின் அறிக்கையை ஏற்க வேண்டும் மற்றும் திஸ்ஸவிதாரணவின் சர்வ கட்சி குழு அறிக்கையை ஏற்க வேண்டும் போன்ற நாட்டுக்கு விரோதமான கொள்கைகளையே கூட்டமைப்பு கொண்டுள்ளது.

இந்தக் கட்சியுடன் நாம் எப்படி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது?

வடக்கு- கிழக்கு மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அதிகாரப் பகிர்வு கோரப்படுகின்றது. பிரச்சினை என்னவோ அதற்குத்தான் தீர்வை வழங்க வேண்டும். நாட்டுக்கு விரோதமான முறையில் தேவையற்ற கோரிக்கைகளை ஏன் முன்வைக்க வேண்டும்?

கூட்டமைப்பின் கோரிக்கையை- நிலைப்பாட்டை நாம் ஏற்றுக் கொண்டால் இனங்களிடையே நிச்சயம் பிளவு ஏற்படும். இது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல. பிரச்சினைகள் என்னவோ அவை மட்டுமே ஆராயப்பட வேண்டும். அவற்றுக்கு மாத்திரமே தீர்வு வழங்கப்பட வேண்டும். அதற்கு அப்பால் செல்லக்கூடாது - என்றார். (5,3)

# நாடு பிரிபடக்கூடாது அதிகாரம் பகிரலாம்

## மக்கள் விடுதலை முன்னணி அதற்கு ஆதரவு

கொழும்பு, ஒக். 12

நாட்டைப் பிரிக்காமல் வடக்கு - கிழக்குக்கு அதிகாரப் பகிர்வை வழங்கும் யோசனையை மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் எதிர்க்காது என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்ததாவது:

எமது நாடாளுமன்றத்துக்கு வயது 70. இந்த 70 வருடங்களில் நாம் மூன்று அரசமைப்பைக் கண்டு விட்டோம். இந்த அரசமைப்புக்கள் எவற்றாலும் நாட்டின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை. இந்த நிலையில்தான் நான்காவது அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரையும் ஒன்றிணைத்து வழிநடத்தல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு 73 தடவைகள் கூடி இடைக்கால அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை, புதிய தேர்தல் மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற மூன்று விடயங்களை இந்தக் குழு கையாண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஆறு உப குழுக்களின் அறிக்கையும் இதற்கு முன் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எந்தவோர் அரசமைப்பாலும் இதுவரை எந்தவோர் பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை. அந்த அரசமைப்புகளால் பிரச்சினைகள் அதிகரித்துத்தான் உள்ளன. 2015ஆம் ஆண்டு மக்கள் ஆணை, எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலைமை போன்றவற்றால் ஓரளவேனும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். சனநாயகத்தை வெல்ல முடியும் என்று நாம் நம்புகிறோம்.

இதனால்தான் நாம் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை ஒழிப்பதற்காகப் போராடுகிறோம். புதிய தேர்தல் முறைமையை நாம் ஆதரிக்கின்றோம். சனநாயகத்தைப் பலப்படுத்தும் வியூகத்தை நாம் ஆதரிக்கின்றோம்.

நாட்டைப் பிரிக்காமல் அதிகாரப் பகிர்வை வழங்கும் யோசனையை மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் எதிர்க்காது. எல்லாவற்றையும் விட 2015இல் வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்கு ஏற்ப நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாம் விட்டுக் கொடுக்கமாட்டோம்.

மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டதே நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை நீக்குவதற்காகத்தான். அவரால் விலக முடியாது. ஆனால், அதற்கு உடன்படப்போவதில்லை என்று சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. அவர்கள் 2015ஆம் ஆண்டு மக்கள் ஆணைக்கு ஏற்பவே செயற்பட வேண்டும் - என்றார். (5,3)

# ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரும் அரசமைப்புத் தொடர்பில் ஆராய்வார்

## சுமந்திரன், ஜயம்பதியுடன் 20ஆம் திகதி பேச்சு

கொழும்பு, ஒக். 12

புதிய அரசமைப்பு முயற்சி தொடர்பாக, இலங்கை வந்துள்ள ஐ.நாவின் சிறப்பு நிபுணர் பப்லோ டி கிறிப்பும் ஆராயவுள்ளார். எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் முக்கிய சந்திப்பை அவர் நடத்தவுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிக்கும் முக்கிய உறுப்பினர்களான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரிடம் இடைக்கால அறிக்கையிலுள்ள விடயங்கள் தொடர்பில் கேட்டறியவுள்ளார்.

இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிறிப் கொழும்பில் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். (5)



# அதிகாரப் பகிர்வினால் நாடாளுமன்று பலவீனமாகும்

## இந்த நிலை வேண்டாம் என்கின்றது மகிந்த அணி

கொழும்பு, ஒக். 12

வடக்கு - கிழக்குக்கு வழங்கப்படவுள்ள அதிகாரப் பகிர்வால் நாடாளுமன்றம் பலவீனமடையும். நாட்டின் எல்லாத் துறையும் குழப்பம் அடையும். இவ்வாறு மகிந்த அணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்ததாவது:

உலகில் பல நாடுகளில் கூட்டாட்சி முறைமை உள்ளது. இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் கூட்டாட்சி முறைமை ஆட்சி முறைமையைக் கொண்ட நாடுகள்தான். ஆனால், அந்த நாடுகள் பிரிந்து செல்லவில்லை. ஆனால், வடக்கு - கிழக்குக்கு வழங்கப்படவுள்ள கூட்டாட்சி முறைமை பாரதூரமானது. நாட்டை இரண்டாகப் பிரிக்கக்கூடியது. அரசமைப்பை உருவாக்கும் வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையைப் பார்க்கும்போது இந்த ஆபத்து தெளிவாகத் தெரிகிறது. எமது யோசனைகள் கூட உள்வாங்கப்படவில்லை. அவ்வாறு உள்வாங்கப்பட்டிருந்தால் நாம் பயப்பட வேண்டிய தேவை இல்லை.

ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு முதலமைச்சரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. இந்த நிலைமை ஏகாதிபத்தியத்துக்கு இட்டுச் செல்லும். முதலமைச்சரின் செயலாளரைக்கூட முதலமைச்சர்தான் நியமிப்பார். காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டு வடக்கு - கிழக்கும் இணைக்கப்படும். வடக்கு- கிழக்குக்கு வழங்கப்படவுள்ள இவ்வாறான அதிகாரப் பகிர்வால் நாடாளுமன்றம் பலவீனமடையும். இதனால் நாட்டின் எல்லாத் துறையும் குழப்பம் அடையும். அரசு இந்த முயற்சியைக் கைவிட வேண்டும் - என்றார். (5,3)

# காதலனைக் கரம்பிடிக்க மாந்திரீகவாதியை நாடிய பெண்

## மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக். 12

காதலனை மந்திரத்தால் வசப்படுத்தும் முயற்சிக்காகத் திருடிய பெண் மற்றும் பெண் மாந்திரீகவாதி உள்ளிட்ட 3பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிவித்ததாவது:

'நினைப்பதெல்லாம் கிடைக்கும்' என்று பத்திரிகைகளில் விளம்பரம் வந்துள்ளது. இந்த விளம்பரத்தைப் பார்த்த பெண், எனது காதலன் எனக்குக் கிடைக்க வேண்டும். அதனைச் செய்து தரமுடியுமா?' என்று விளம்பரத்திலிருந்த அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு கேட்டுள்ளார்.

செய்யமுடியும் என்றும் தனது கணக்குக்கு 5 ஆயிரம் ரூபா பணத்தை வைப்பிலிடுமாறும் தொடர்பு கொண்ட பெண்ணிடம் கூறியுள்ளார்.

பணம் வைப்பிலிட்ட பின்னர் காதலனைப் பெற்றுக் கொள்வதற்காகக் காளிஅம்மனுக்குப் பூசை செய்ய வேண்டும் என்று கூறி அதற்கும் மேலதிகமாக விளம்பரம் பிரசுரித்த பெண் பணம் கோரியுள்ளார்.

மேலதிக பணம் இல்லாத நிலையில் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக விளம்பரத்தைப் பார்த்து தொடர்பு கொண்ட பெண் தான் வேலைசெய்த வீட்டில் தங்க நகைகளைத்திருடியுள்ளார். நகைத் திருட்டுத் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்தது. அது தொடர்பில் விசாரணையை முன்னெடுத்தபோதே, விளம்பரத்தைப் பிரசுரித்த பெண், அவருக்கு உதவிய இளைஞன், விளம்பரத்தைப் பார்த்துத் தொடர்பு கொண்ட பெண் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

விளம்பரத்தைப் பிரசுரித்த பெண், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து தமிழ்மக்களின் பணத்தை மோசடி செய்துள்ளதாகவும், அவரது கணக்கில் 4 லட்சம் ரூபா பணம் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (5,3)

# கொள்ளையடிப்பதில் மகிந்த, மைத்திரி அரசுகளிடையில் எந்த வேறுபாடுமில்லை

## மக்கள் விடுதலை முன்னணி சாடல்



கொழும்பு, ஒக். 12

முன்னைய அரசு இலங்கையில் பணத்தைக் கொள்ளையடித்துப் பன்னாட்டு வங்கிகளில் வைப்பிலிட்டதாகக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்த அரசு பன்னாட்டு வங்கிகளில் இருந்து பணத்தைக் கொள்ளையடித்து இங்கு சேர்க்கின்றது. இரண்டு அரசுகளும் இந்த விடயத்தில் ஒற்றுமையாக உள்ளனர். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாய்வான் வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பில், அந்த நாட்டின் சட்டத்துக்கும் நாம் கட்டுப்பட வேண்டும். இப்போது கைது செய்யப்பட்டுள்ள சமையல் எரிவாயுநிறுவனத்தின் தலைவர் சலீல முனசிங்ஹ முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் நெருங்கிய நண்பர். இவரை லிட்றோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவராக்கியது யார் என்பதைக் கண்டறியவேண்டும். அதேபோல் இவ்வளவு தொகையை விசாரணையின்றி வங்கிப் பரிமாற்ற அனுமதி கொடுத்தது யார்? இதில் ஒரு சிலர் மட்டுமே தொடர்புபட்டவர்கள் அல்ல. இதன் பின்னணியில் பெரிய குற்றவாளிகள் உள்ளனர். அவர்களைக் கண்டறிய வேண்டும்.

இது தொடர்பில் தெளிவான உறுதியான சாட்சியங்கள் எம்மிடம் இல்லை. ஆனால் நேரடி சாட்சிகளைப் போலவே நேரடியற்ற சாட்சியங்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும். அவ்வாறான சாட்சியங்களைக் கவனித்தால் அவரை யார் லிட்றோ சமையல் எரிவாயுநிறுவனத்தின் தலைவராக நியமித்தது என்பது தெரியும். கடந்த தேர்தலின் போது சில செய்தியாளர் சந்திப்புகளில், அரசியல் மேடைகளில் அவர் உள்ளார். அதற்கான ஆதாரங்கள் உள்ளன. சில அரசியல் கட்சிகளுடன் அவர் தொடர்பில் உள்ளார். இந்தச் சாட்சியங்களைக் கவனித்தால் அவர் யாருடன் தொடர்பு கொண்டுள்ளார் என்பதை இலகுவாக அடையாளம் காணமுடியும். இந்தச் சாட்சியங்களின்படி பிரபல்யமான அரசியல்வாதி ஒருவரின் தொடர்பு உள்ளது என்பது தெரிவிக்கப்படுமாயின் சந்தேகத்துக்கு இடமில்லாது அவர் ரவி கருணாநாயக்க என்பதை உறுதிப்படுத்த முடியும்- என்றார். (5,3)

## இலங்கையில்
# நம்பிக்கையூட்டக்கூடிய பொருளாதார வளர்ச்சி
### பன்னாட்டு நாணய நிதியம் மதிப்பீடு

2017-2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி நம்பிக்கையூட்டக் கூடிய வகையில், இருக்கும் என்று பன்னாட்டு நாணய நிதியம் மதிப்பீடு செய்துள்ளது.

உலகப் பொருளாதார கண்ணோட்டம் என்ற நாணய நிதியத்தின் அறிக்கை வொசிங்டனில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.7 சதவீதமாக நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் இருக்கும் என்று பன்னாட்டு நாணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது.

2018ஆம் ஆண்டில், 4.8 சதவீதமாக அதிகரிக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அழிவுகள் மற்றும் பின்தங்கிய சீர்திருத்தங்களால், இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 4.5 சதவீதத்துக்குக் குறைவாகவே இருக்கும் என்ற மத்திய வங்கியின் கணிப்புக்கு மாறாக இந்தக் கணிப்பு அமைந்துள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பீடு செய்யும் போது, இலங்கை பின்தங்கிய நிலையில் உள்ளது. (5)



## கடல் அலை எரிசக்தி உற்பத்திப் பணிகள் 2018இல் இலங்கையில்
### பின்லாந்து எரிசக்தி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் கடல் அலை எரிசக்தியை உற்பத்தி செய்யும் பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகப் பின்லாந்தின் ஏ.டபிள்யு.எரிசக்தி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜோன் லியெலெயுன்ட் தெரிவித்தார்.

உலகின் நவீன புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி ஊடகமான கடல் அலை மூலமான சக்தி உற்பத்தி தொடர்பாக அறிந்து கொள்வதற்காக தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான தூதுக் குழுவினர் பின்லாந்தின் ஹெல்சிங்கி நகர ஏடப்ள்யு எரிசக்தி நிறுவனத்திற்குச் சென்றிருந்தனர். இதன்போது இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**கடல் அலைகள் ஊடாக எரிசக்தியை உற்பத்தி செய்வது தொடர்பாக எம்மிடம் காணப்படும் அனுபவங்கள் மற்றும் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையின் கடற்கரைப் பிரதேசத்தில் கடல் அலை எரிசக்தி உற்பத்திக்கு உதவி வழங்கத் தயாராக இருக்கின்றோம்.**

இலங்கைக் கடற்கரைப் பிரதேசங்களில் ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் வருடத்தில் இலங்கையில் கடல் அலை எரிசக்தியை உற்பத்தி செய்யும் பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்பார்த்துள்ளோம் - என்றார். (5.31)


## 31 ஆவது நாள் நினைவஞ்சலி

திருமதி
**கத்தரின் நமலேஸ்வரி (நமலம்) சூசைப்பிள்ளை**



மண்மகிழ 18.12.1930
கண்ணெகிழ 13.09.2017

அவர்களின் 31 ஆம் நாளை நினைவு கொள்ளுகின்றோம். இவர் இவ்வுலகில் வாழும் வரை வாழ்க்கைத் துணைவியாகவும் ஈன்றெடுத்த பிள்ளைகளுக்கு அன்புத் தாயாகவும் இறை வாழ்வோடு ஒன்றித்தவராகவும் என்றும் இறைவன் மீது நம்பிக்கை தளராத மனத்தோடும் இறைவனுக்கு ஊழியம் புரிபவர்கள் மீது அன்பு மிகுந்த ஓர் தாயாகவும் சூராவத்தை கிராமத்தின் மூத்த மூதாதையோரில் ஒருவராக எங்களுடன் வாழ்ந்து காட்டியவர். எங்கள் தாயாரின் பிரிவில் எம்மோடு தோள்கொடுத்தும் அன்பும், ஆறுதலும் தந்துதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் தங்களின் இரங்கலை எம்மோடு பகிர்ந்து கொண்ட உள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இன்று (12.10.2017) வியாழக்கிழமை அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சூராவத்தை திரேசம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். நாளை (13.10.2017) வெள்ளிக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்போடு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மகன் : ஜோசப் தவராஜா

"நமலவாசா"
சூராவத்தை,
சுன்னாகம்.

தொடர்புகளுக்கு:
ஜெயா (House) + 021 224 2567
தவா - 077 442 4335



## மரண அறிவித்தல்



**திருமதி மனோன்மணி வைத்திலிங்கம்**

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி வைத்திலிங்கம் கடந்த (09.10.2017) திங்கட்கிழமை காமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான சங்கரப்பிள்ளை வைத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெயவீர் (MRICS, PQS, CBuildE கனடா), மனோகரி (லண்டன்), சுமதி (கனடா), சுகந்தி, சங்கர்ராஜ் (ஆசிரியர் யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், ஊரெழு கணேசா வித்தியாலயம் பகுதி நேரம்) காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுஜாத்தா, இந்துவர்மன், சபேசன், விஜயவதனி ஆகியோரின் அன்பு மாமியும் ஷசாந், தர்சி, சுதர்மன், கேர்மன், பிரவீனா, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2017) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

077 800 9661



## மரண அறிவித்தல்

**கந்தசாமி மனோகரலிங்கம் (முருகன்)**



தோற்றம் 18.05.1967
மறைவு 08.10.2017

யாழ்/ வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மனோகரலிங்கம் 08.10.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி - தவமணி தம்பதியரின் கனிஸ்டபுத்திரனும் கனகலிங்கம்(ஜேர்மனி), மகாலிங்கம் (ஜேர்மனி), யமுனாராணி - நவரத்தினம், கமலராணி - மோகன்தாஸ், கலாராணி - ராஜசேகர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேல்நாயகம் (கனடா), தங்கராசாத்தி - குமரையா (கனடா) காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், வல்லிபுரம், நடராசா ஆகியோரின் அன்புப் பெறாமகனும் மற்றும் தவமணி தம்பிராசா (பிரான்ஸ்), முருகையா காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், தர்மராசா ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஜெலக்சனா ஜினோ (ஜேர்மனி), தர்சனா யசிந்தன் (பிரித்தானியா), ஜோசுவா (ஜேர்மனி), சேயோன் (சிங்கப்பூர்), சேந்தன் (பிரித்தானியா), செங்கோடன் (கனடா), செவவேற்குமரன் (கனடா), செந்தமிழ்க்குமரன் (கனடா), அமரகாந்தன் (கனடா), கேத்சுதமரன் (கனடா), பிரதீப்குமார் (கனடா), தபோதினி - ராஜகுமார்(கனடா), சிவரூபி - சுரேஸ் (பிரித்தானியா), ஜனனி - மனோராஜ் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனுசியா (சிங்கப்பூர்), நிரோசா (பிரித்தானியா), யசிந்தா(கனடா), நிர்மதா (கனடா), பிரஷா (கனடா), மயூரன் (ஜேர்மனி), மதுசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் டியா, சயினா, அபிஷேக், கீசானி, அனிஸ்கா, ஆதூஷ், சாதனா, ஏகன், மாருதி, ஆராதனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2017) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு Murtensrt 51, 3008 Bern Switzerland இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

கனகலிங்கம் - 447453923970 / மகாலிங்கம் - 4915217123191
யமுனராணி - 0771149398 / கலாராணி - 9144 4230 5226



## மரண அறிவித்தல்

**திருமதி புஸ்பராணி தர்மலிங்கம்**



சிலம்புப் புளியடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி தர்மலிங்கம் 10.10.2017 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் காந்தி, வவா(லண்டன்), வேணி, ஜீவா, சாந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் சிறி (சிட்டிசன் ரவல்ஸ்), சிவகனிதா (லண்டன்), ஜெய்பாலன், ராசன், றங்கன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சயந்தா (பிரான்ஸ்), துயாளன் (பிரான்ஸ்), சயந்தா, விஜிந்தன், தபின் (லண்டன்), சங்கீதன், சுபைதா, ஜினிஷா, ஜீவிதா, ஷபிதா, சஞ்சய் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2017) வியாழக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிலம்புப் புளியடி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

077 968 3909 / 077 922 0807

## சந்திப்பு



பின்லாந்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் ஜூஹா சிபிலாவை சந்தித்துப் பேச்சு நடத்தினார். ஹெல்சிங்கி நகரிலுள்ள பின்லாந்துத் தலைமை அமைச்சரின் கெசரன்தா இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (5)

# பாலியல் தொழிலாளிகள் தொடர்பில் கணக்கெடுப்பு

## எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிசிர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

பாலியல்த் தொழிலாளிகள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்கள் தொடர்பில் ஆய்வு நடத்தப்பட உள்ளதாக, தேசிய பால் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் போது இலங்கையில் சுமார் 15 ஆயிரம் பாலியல்த் தொழிலாளிகளும், 10 ஆயிரம் ஓரினச் சேர்க்கையாளர்களும் உள்ளதாகக் கண்டறியப்பட்டது.

எச்.ஐ.வி. தடுப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இந்தப் புள்ளி விபரத் தகவல்கள் மிகவும் அவசியமானது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எயிட்ஸ் நோயை ஐந்து ஆண்டுகளில் இல்லாதொழிக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும்

# கைது செய்துவிட்டார்கள்!

## பதறியடித்து ஐ.நா., அமெரிக்காவிடம் முறையிட்ட நாமல் ராஜபக்ச

கொழும்பு, ஒக். 12

அமைதியாகப் போராட்டம் நடத்திய எம்மைப் பொலிஸார் கைது செய்திருப்பதாக, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடமும், அமெரிக்காவிடமும் முறையிட்டுள்ளார்.

இதுதொடர்பாக நேற்றுமுன்தினம் கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

'தேசிய சொத்துக்களை விற்பதற்கு எதிராக அமைதியாகப் போராட்டம் நடத்திய எம்மில் 4 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். எதிர்ப்புக் குரல்களை ஒடுக்குகின்றனர்' என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே ஆகியோரை நோக்கி முறையீடு செய்து கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா., அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு எதிராகக் கடுமையாகக் குரல் கொடுத்து வந்த மகிந்த ராஜபக்ச அணியினர், தம்மீதான நடவடிக்கைக்கு எதிராக ஐ.நா. மற்றும் அமெரிக்காவின் காலில் தஞ்சமடையத் தொடங்கியுள்ளனர். (5)

# சீனாவுடனான உறவு எச்சரிக்கையாக கையாளப்படவேண்டும்

## அமெரிக்க அதிகாரி இலங்கைக்கு புத்திமதி



கொழும்பு, ஒக். 12

சீனாவுடன் இணைந்து செயற்படும் போது ஒவ்வொரு நாடும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவ்வாறு அமெரிக்கக் கடற்படையின் உயர்மட்ட அதிகாரியான றியர் அட்மிரல் டொனால்ட் டி கப்ரியேல்சன் தெரிவித்தார்.

இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தைப் பற்றி அமெரிக்கா கவலை கொண்டுள்ளதா என்று இலங்கை வந்துள்ள றியர் அட்மிரல் மொனால்ட் டி கப்ரியேல்சனிடம் கொழும்பு ஆங்கில ஊடகம் கேள்வி எழுப்பியிருந்தது.

சில விடயங்களில் சீனா வெளிப்படைத்தன்மையுடன் செயற்படாததால், சீனாவுடன் இணைந்து செயற்படும் போது ஒவ்வொரு நாடும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சீனா தற்போது நன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் அமைப்பு முறையை மறுசீரமைக்க முயல்கிறது. இது கவலையளிக்கிறது - என்றார். (5)

### தேவை

யாழ்நகரில் உள்ள வீட்டிற்கு வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு :- 076 564 6282

### வீடு காணி விற்பனைக்கு

கிணற்றுடன் வீடு காணி விற்பனைக்குண்டு.
இடம் : நவரட்ணராஜா வீதி, ஸ்ரேசனடி, கோண்டாவில் மேற்கு.

077 717 8279

### சந்தோஷப்பெருவிழா

இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். யோவான்: 14:6

இடம்: மு/யோகபுரம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் - மல்லாவி

நாள்: 13.10.2017 (வெள்ளிக்கிழமை)

நேரம் மாலை 6:00 மணி

சமாதானம்
மன அமைதி
நோயிலிருந்து சுகம்
குடும்பத்தில் மகிழ்ச்சி
பாவ பழக்கத்தில் விடுதலை
கட்டுக்களில் இருந்து விடுதலை

பெற்றுக் கொள்வதற்கு ஓர் அருமையான சந்தர்ப்பம்!

சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0772292408

### அறிவித்தல்

**ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை**
**தரம் - 6 அனுமதி (2018)**

எமது கல்லூரியில் தரம் - 06 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 11.10.2017 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

**விண்ணப்ப முடிவு திகதி : 08.11.2017**

விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்.

### குப்பிழான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலயம் வில்லு மண்டப வேலைக்கான கூலிக் கேள்விகோரல்

மேற்படி ஆலயத்தின் தம்ப மண்டபம், வசந்த மண்டப நேர் இணைப்பு கோபுரம் வரையும் வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் மூன்று வளைவு கொண்ட வில்லு மண்டபம் இணைக்கப்படவுள்ளது. உத்தேசிக்கப்பட்ட நிர்மாண வேலையானது தரமுள்ள கொங்கிறிற் வேலையாக நீர் உட்புகாதவாறு இணைப்பு கொண்டதாக அமைதல் வேண்டும்.

**நிர்மாணக் காலம்: 03 மாதங்களையுடையதாகும்.**

துறைசார் கட்டட செயற்பாட்டை மேற்கொண்டவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பவிவரங்கள் அளவுத்திட்டம் யாவும் பரிபாலன சபைக் காரியாலயத்தில் மாலை 05 மணியின் பின்பு பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுதிகதி 23.10.2017 ஆம் திகதி

ஏ.நிர்மலன்
செயலாளர்

க. சின்னராசா
தலைவர்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். சுன்னாகம் உப அலுவலகம், வட்டாரம் - 03 , டாக்டர் சுப்ரமணியம் வீதி, இல.60/22

வலிகாமம் தெற்கு, பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற் குட்பட்ட வட்டாரம் 03 டாக்டர் சுப்ரமணியம் வீதி, 60/22 ஆம் இலக்க ஆதனம் திருமதி A. மரியாம்பிள்ளை எனும் பெயரில் எமது சபையின் ஆதனவரி பதிவேட்டில் உள்ளது.

மேற்படி ஆதனமானது வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தெற்கு, உடுவில் கோவிப்பற்று, சுன்னாகம் இறை, தலையாட்டி என அழைக்கப்படும் உடுவில் பிரதேச செயலர் பிரிவு J/198, கிராம சேவகர் பிரிவில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. இவ் ஆதனத்தை நன்கொடை உறுதி இலக்கம் 3467 இன் மூலம் 14.05.2011 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் C. விஸ்வலிங்கம் மூலம் மரியான் ஞானப்பிரகாசம் தனது மாதாவிற்கு சொந்தமானது என வெளிப்படுத்தி தனது மருமகள் யோசெவ் மனைவி திரேஸ் அன்ரனிற்றாவிற்கு நன்கொடை, உறுதி மூலம் பதிவுசெய்துள்ளார். நில அளவையாளர் N. கேதீஸ்வரன் அவர்களால் 1432 இலக்க 08.02.2011 திகதிய வரைபடத்தின் துண்டு 1 என குறித்து காட்டப்பட்டுள்ளது. இவ் ஆதனம் நிலப்பரப்பு 0 குழி 17.50, விஸ்தீரணம் கொண்டது இதற்கான எல்லைகள் கிழக்கு நல்லதம்பி சிவஞானலிங்கத்தினதும் வழிவாய்க்கால் முகப்பு போல் பெண் இராஜேஸ்வரியினதும், வடக்கு ஒழுங்கை, மேற்கு ஜேசு ஜெயசீலன் பெண் மரியகமலம், தெற்கு வரப்பிரகாசம் ஜோசெப்க்கு உரிய ஆதனம், கிழக்கு காணியில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் ஆகும். இவ் ஆதனத்தை யோசெவ் பெண் திரேஸ் அன்ரனிற்றா என்ற பெயரிற்கு சுன்னாகம் உப அலுவலக ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்.

எனவே மேற்குறித்த ஆதனத்தை யோசெவ் பெண் திரேஸ் அன்ரனிற்றா எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 31 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோரதவிடத்து குறித்த ஆதனமானது யோசெவ் பெண் திரேஸ் அன்ரனிற்றா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடிவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

மேலும் இப்பெயர்மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு, பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

### பதவி வெற்றிடம்

யாழில் பிரசித்தி பெற்ற நிறுவனம் ஒன்றில் முகாமையாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

**தகைமைகள்**

**1.க.பொ உயர்தரம் சித்தியடைந்தவர்கள் 2.25 வயதிற்குட்பட்டவர்கள் 3.அடிப்படைக் கணினி அறிவுடையவர்கள். 4.அடிப்படை ஆங்கில அறிவு**

தகுதியுடையவர்கள் உடனடியாகத் நேரில் சமுகம் தரவும்.

Winstar Job Bank, 106, Palaly road Thirunalvely, Jaffna.
0213004641

### குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயம் அலுவலக உதவியாளர் தேவை

ஆலயத்தின் கணக்குப் பதிவேடுகளை மேற் கொள்ளக் கூடியவரும் ஆலய கருமங்களில் சேவை செய்யக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
விண்ணப்பதாரி குறைந்தது இரண்டு மையில் சுற்றாடலில் வசிப்பவரும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சைவசமயம், தமிழ் மொழியில் சித்தியடைந்தவரும் ஆலயத்துக்கு காலை, மாலை சமுகம் தரக் கூடிய ஆண், பெண்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. பொருத்தமான ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து 25.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்
க.சின்னராசா

### வேலையாள்கள் தேவை

ஶ்ரீராம் கஜன் மிக்ஷர் உற்பத்தி நிலையத்திற்கு வேலையாள்கள் தேவை.
வேலை தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
(ஆண்கள், பெண்கள் இருபாலாரும் தேவை)
(21 -35 வயதுக்குட்பட்டவர்கள்)

தொடர்பு :- 077 631 6273

### வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் Samsung Singhagiri (Pvt) Ltd இற்கு

- Field Assistant (Light Vehicle Licence)
- Showroom Assistant
- Sales Assistant

வயது :- 18-26 (ஆண்கள் மட்டும்)

077 706 4368

# இந்தியாவிலிருந்து 12,500 மெற்றிக்தொன் அரிசி

இந்தியாவிலிருந்து 12 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் பச்சை நாட்டரிசி கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று வந்துசேர்ந்துள்ளது.

அரிசித் தட்டுப்பாட்டையடுத்து அமைச்சரவையின் வாழ்க்கைச் செலவு உபகுழு மேற்கொண்ட முடிவுக்கமைய இலங்கை அரசு, இந்தியத் தனியார் துறையினரிடமிருந்து 72 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

முதலாவது தொகுதி கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று வந்து சேர்ந்துள்ளது. கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள அரிசித் தொகுதியைக் கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழான கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பொறுப்பேற்று லங்கா சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு விற்பனை செய்யவுள்ளது. (5)

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்**

**விலைமனு கேள்விக்கான அழைப்பு**

**அலுவலகப் பொருள்கள், மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பெறுகைகள்**

HSDP – 2017

பிராந்திய பெறுகைகள்குழு தகுதியான, தகைமைவாய்ந்தவர்களிடம் கீழ்வரும் பொருள்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| Reference No | Item | Qty | Bid Security | Reference No | Item | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| NP/RDHS/HSDP/2017-02 | Air Conditioner (24000BTU) | 06 | 20,000.00 | NP/RDHS/ME/2017-09 | BP Apparatus LCD | 38 | 5,000.00 |
| | Air Conditioner (18000BTU) | 06 | | | | | |
| | Air Conditioner (48000BTU) | 02 | | | Infusion Pump | 01 | |
| | Air Conditioner (60000BTU) | 03 | | | | | |

* ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கமுடியாத கேள்விபத்திர பணம் ரூபா 500/=

01. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2222278/4557, ext 20) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

02. ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

03. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 16.10.2017 தொடக்கம் 01.11.2017 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.30 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைக்கேள்விகள் 01.11.2017 திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப்பணிப்பாளர்(நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 01.11.2017ம் திகதி காலை 10.00மணிக்கு திறக்கப்படும் இதற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சமூகமளிக்கலாம

வைத்திய கலாநிதி.க.நந்தகுமாரன்
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



பொன்மனப் பேராளன் கல்விக்கொடையாளர்
**உயர்திரு. இராசையா குவேந்திரநாதன்**
Congratulations Congratulations
(உரிமையாளர் ராஜா பிளாசா)

கோண்டாவில் மேற்கு மக்கள் நலன்பேணும் அமைப்பினால் 08.10.2017 அன்று நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு நிகழ்வில் கோண்டாவில் வாழ் சமூக சேவையாளர்கள் **உயர்திரு இராசையா குவேந்திரநாதன், குவேந்திரநாதன் றஞ்சினி தேவி தம்பதியினருக்கு "இல்லக ஜோதி"** எனும் கௌரவ பட்டத்தினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் **மாவை சேனாதிராஜா** அவர்களும் பேராசிரியர் க.தேவராஜா அவர்களும் இணைந்து வழங்கி கௌரவித்தமையை பாராட்டி தாமும் வாழ்த்துவதோடு மேலும் பல்லாண்டு காலம் வாழ ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

*"நல்லார் ஒருவர் உளமேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யுமாம் மழை"*

**தங்கள் சமூகப் பணி தொடர வாழ்த்துவோர்:**
**கோண்டாவில் கிழக்கு,**
**ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும்,**
**குமரன் விளையாட்டுக் கழகமும்.**

SK
**தித்திக்கும் தீபாவளிக்கு**
**சிறிகுமரன் நியூஸ்ரைல்**
# சிறிகுமரன் ரெக்ஸ்

தீபாவளியின் உற்சாகம் சிறிகுமரனின் ஆரம்பம்



புத்தம் புது ரகங்கள் ஏராளமாய்
உங்கள் அனைவருக்காகவும்
காத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த தீபாவளியை
உள்ளம் தித்திக்கும்
சிறிகுமரன் நியூஸ்ரைல்ஸ்
உடன் கொண்டாடுங்கள்.

சிறிகுமரன் ரெக்ஸ்
770, K.K.S றோட், தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
**021 221 6845**

**யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்**
**திருமண பட்டுப் புடவைகளின் பூங்காவனம்**

# இந்தியன் செலக்ஷன்

**தீபாவளி விசேட தள்ளுபடி**
**15% - 50%**



**இலவசம்** 15,000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய இந்தியன் செலக்ஷன் வர்ணக்குடை ஒன்று இலவசம்

**இலவசம்** 10,000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அழகிய இந்தியன் செலக்ஷன் கப் ஒன்று இலவசம்

**அனைத்துவிதமான பட்டுச் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும்**



| | விலை | கழிவு விலை |
|---|---|---|
| டொப் | 1500/= | 750/= |
| சாரி | 2400/= | 1200/= |
| கொட்டன் சல்வார் | 5000/= | 2500/= |
| கலக்ஷி சல்வார் (New) | 8500/= | 4000/= |
| சல்வார் துணி | 1500/= | 750/= |

1ம் பரிசு குளிர்சாதனப் பெட்டி
2ம் பரிசு தையல் இயந்திரம்
05 ஆறுதல் பரிசுகள்



**5000.00 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்கின்ற அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அதிஷ்ட சீட்டிழுப்பில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு.**

**ஒக்டோபர் 04 – 19 2017**

\# ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

# சுகாதாரத் தொண்டர்கள் நேற்று நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், ஒக்.12

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களால் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக கவன வீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.

"1994ஆம் ஆண்டு முதல் வேதனமின்றித் தொண்டர் அடிப்படையில் கடமையாற்றி வருகின்றோம். 118 நாள்களாக நிரந்தர நியமனம் கோரிக் கவனவீர்ப்பு போராட் டத்தில் ஈடுபட்டோம்.

31.05.2017 அன்று திகதியிடப்பட்ட கடிதத்தில் மத்திய சுகாதார அமைச்சர் முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்துடனும் கலந்துரையாடியதற்கு அமைய சுகாதார அமைச்சில் நிலவும் மற்றும் காலக்கிரமத்தில் ஏற்படுகின்ற வெற்றிடங்களுக்குச் சுகாதாரத் தொண்டர்களை உள்வாங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் சுகாதாரத் தொண்டர்கள் உள்வாங்கப்படும் வரை வெளிநியமனங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பணித்திருந்தார்.

தற்போது சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றியவர்களைக் கவனத்தில் எடுக்காமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக டெங்குக் கட்டுப்பாட்டு உதவியாளர் என்ற பதவி நிலைக்குப் புதியவர்களை உள்வாங்கப்பட்டு தற்போது பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நாடாளுள் உறுப்பினர்களுக்கும் மத்திய அரசுக்கும் சுகாதாரத் தொண்டர்களைத் தெரியவில்லையா? என்று தெரிவித்தனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அவர்கள் ஆளுநர் அலுவலகத்தில் கையளித்தனர். (ற-101)

# பேருந்து விபத்தில் இருவருக்கு காயம்

கிளிநொச்சி, ஒக்.12

கிளிநொச்சி ஆனையிறவுப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்தனர். பேருந்து வேகக் கட்டுபாட்டை இழந்து பாலத்துடன் மோதி விபத்து நடந்துள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சொகுசுப் பேருந்தே விபத்தில் சிக்கியது. பேருந்தில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர்.



சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ற-ரி4)

## முதியோர் தினத்தை முன்னிட்டு வினாடி வினாப் போட்டி

வவுனியா, ஒக்.11

வவுனியா பாடசாலை மாணவர்கள் மத்தியில் முதியோர் விழுமியப்பண்புகளை உணர்த்தவும் பொது அறிவுத்தேடலை அதிகப்படுத்த மாவட்ட சமூகசேவை அலுவலகம் வருடாந்தம் முதியோர் தினத்தை முன்னிட்டு மாணவர்கள் மத்தியில் நடத்தும் பொது அறிவு வினாடி வினாப் போட்டி நேற்று ஆரம்பமானது.

வவுனியா மாவட்ட சமூகசேவை அலுவலகத்தில் முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா மத்திய மகா வித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, விபுலானந்தாக்கல்லூரி, நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம், பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயம், பூவரசங்குளம் மகாவித்தியாலயம், புதுக்குளம் மகாவித்தியாலயம் ஆகியன தெரிவாகி கால் இறுதிச்சுற்றில் போட்டியிடவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை இரண்டாம் சுற்று இடம்பெறவுள்ளது. (ற)

## சித்திபெற்ற மாணவருக்கு பரிசில்கள்

கிளிநொச்சி, ஒக்.12

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 35 மாணவர்களுக்கு பொலிஸாரால் பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்ன, வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி4)






Seasonal Offers

டெபிட் காட்களுக்கு 25% வரையான விலைக்கழிவு

COMBANK
கிரெடிட், டெபிட் கார்ட் ஊடாக தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் விரும்பியபடி கொள்வனவு செய்யுங்கள்

கிரெடிட் காட்களுக்கு 25% விலைக்கழிவு

யாழ்ப்பாணம்

ஞானம் பெயின்ட்ஸ்
கிரெடிட் & டெபிட் - 25% **
021 2 225 577

கபிலா காலணியகம்
கிரெடிட் - 25%
டெபிட் - 15%
021 2 223 097

த.குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ்
கிரெடிட் - 25%
டெபிட் - 15%
021 2 228 847

மெகா மார்ட்
கிரெடிட் - 25%
டெபிட் - 15%
021 2 229 798

வாணி ரெக்ஸ்
கிரெடிட் - 25%
டெபிட் - 15%
021 2 225 578

வவுனியா

நியூ லக்கி ரெக்ஸ்
கிரெடிட் - 25%
டெபிட் - 15%
024 2 222 441

ஸ்ரார் பெஷன்
கிரெடிட் - 25%
டெபிட் - 15%
024 2 226 525

** குறிப்பிட்ட பொருட்களுக்கு மட்டும்

இச் சலுகை 2017 அக்டோபர் 13 தொடக்கம் 15 வரை மாத்திரமே

COMBANK MAX LOYALTY REWARDS

COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது Fitch Rating - AA (lka) +94 112 353 353 www.combank.lk

# 4 வடகொரியக் கப்பல்களுக்கு விதிக்கப்பட்டது அதிரடித் தடை

வொஷிங்டன், ஒக். 12
வடகொரியாவுக்கு பொருள்கள் ஏற்றிச் சென்ற 4 சரக்குக் கப்பல்களை எந்தவொரு நாடும் தங்களது துறைமுகங்களில் நுழைய அனுமதிக்கக்கூடாது என்று ஐ.நா. சபை உத்தரவிட்டுள்ளது.
பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது. உச்சக்கட்டமாக ஐதரசன், அணுகுண்டுச் சோதனைகளை அண்மையில் நடத்தியது. ஜப்பானுக்கு மேலாக ஏவுகணைச் சோதனைகளையும் நடத்தியது.
இதனால் வடகொரியா மீது ஏகப்பட்ட தடைகளை விதித்துள்ளது ஐ.நா. சபை.
இந்த நிலையில் வடகொரியாவுக்கு பொருள்கள் ஏற்றிச் சென்றதாக நான்கு கப்பல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
பெட்ரோல் 8, ஹோ பேன் 6, டாங் சன், ஜி சைன் ஆகிய 4 கப்பல்களே அவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளன.
இதையடுத்து இந்த நான்கு கப்பல்களையும் எந்த நாடும் தத்தமது துறைமுகங்களில் நுழையவோ அல்லது தங்கவோ அனுமதிக்கக் கூடாது என்று ஐ.நா. சபை உத்தரவிட்டுள்ளது. (ம)



## இரண்டு போ…
## வடகொரியா…

கொரியத் தீபகற்பத்தில் போ…
எச்சரிக்கை விடுத்துள்ள நி…
வடகொரியாவை எச்சரித்த…
மூன்று அமெரிக்கப் போர் …
வடகொரியாவுக்கு பதிலடி …
2 போர் வானூர்திகள் ஜப்…
தென் கொரியாவில் சென்…
வானூர்திகளும் சென்றன…
பயிற்சியில் ஈடுபட்டபோது…
கொண்டன என்று பன்னா…

## சிலியில் நிலநடுக்கம்

சான் தியாகோ, ஒக். 12
தென்னமெரிக்கக் கண்டத்தில் உள்ள சிலியில் நேற்று நிலஅதிர்வு ஏற்பட்டது.
பூமிக்கு அடியில் 82 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. (ம)



## மெக்சிக்கோ சிறையில் கலவரம்: 13 பேர் சாவு

மெக்சிக்கோவின் நுவா லியோன் மாகாணச் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் கைதிகள் 13 பேர் உயிரிழுந்தனர்.
இதுகுறித்து பாதுகாப்பு அதிகாரி ஒருவர் 'மெக்சிக்கோவின் நுவா லியோன் மாகாணத்திலுள்ள சிறையில் நேற்று (நேற்றுமுன் தினம்) செவ்வாய்க்கிழமை கைதிகளுக்கு இடையே கலவரம் ஏற்பட்டது.
பொலிஸார் இந்தக் கலவரத்தைக் கட்டுப்படுத்த முயன்ற போதிலும் பயனளிக்கவில்லை. இந்த மோதலில் கைதிகள் 13 பேர் உயிரிழந்தனர்-என்றார். (ம)





## ஐ.எஸ்ஸுடன் போரிடுவதுபோல் பாசாங்கு செய்கிறது அமெரிக்கா

### ரஷ்யா கடும் காட்டம்

மொஸ்கோ, ஒக். 12
"அமெரிக்கா ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுடன் போரிடாமல், போரிடுவது போல் பாசாங்கு செய்கிறது" என்று ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது.
ரஷ்ய இராணுவ செய்தித் தொடர்பாளர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
"அமெரிக்கா ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிராக வான்வழித் தாக்குதலை குறைத்துக் கொண்டு, சிரியாவில் ரஷ்யா மற்றும் சிரிய படைகளுக்கு எதிராக போரிட அனுமதிக்கிறது. அமெரிக்கா ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுடன் போரிடுவதுபோல் பாசாங்கு செய்கிறது. ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளை சிரியாவுக்கு எதிராகத் தூண்டுகிறது.
ஈராக்கிலிருந்து வரும் தொடர்ச்சியான தீவிரவாத அச்சுறுத்தல் அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு கொள்கையை கேள்விக்குள்ளாக்குகின்றன" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



## ஐ.எஸ். ஆயுததாரிகள் குர்திஷிடம் சரணடைவு

பக்தாத், ஒக். 12
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் நூற்றுக் கணக்கானோர் தம்மிடத்தில் சரணடைந்துள்ளனர் என்று குர்திஷ்தான் அமைப்பு தெரிவித்துள்ளது.
ஈராக், சிரிய நாடுகளின் சில நகர்களைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்த ஈராக்கின் முக்கிய நகரங்கள் இந்த வருடத்தின் மத்திய பகுதியில் மீட்கப்பட்டிருந்தன. ஈராக்கின் ஹவியா நகரம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்தது. இந்த நகரை மீட்கும் போரை கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் கடும் முனைப்புடன் ஆரம்பித்தது ஈராக். இந்த நிலையில் ஹவியா கடந்த வாரம் முற்றுமுழுதுமாக ஈராக் படையின் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.
ஹவியா மீட்கப்பட்டதை அடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ளது. இந்த நிலையில் ஈராக்கில் நிலைகொண்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் நூற்றுக் கணக்கானோர் குர்திஷ்தான் அமைப்பிடம் சரணடைந்துள்ளனர் என்று குர்திஷ்தான் தெரிவித்துள்ளது. அது தொடர்பான ஒளிப்படங்களையும் வெளியிட்டுள்ளது. (ம)

# அமெரிக்காவு…
# ஜப்பான் விரை…

### வடகொரிய ஊடகம் பரபரப்புத் தகவல்

பியாங்யாங், ஒக். 12
"அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு மூன்றாம் உலகப்போருக்குத் தயாரானால் ஜப்பான் விரைவில் சாம்பராகும் என்று வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் எச்சரித்தார்" என அந்த நாட்டின் அரச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
வடகொரியாவின் எல்லையற்ற சோதனைகளை அடுத்து, அதன்மீது ஐக்கிய நாடுகள் சபை கடும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட தடைகள் போதாது என்றும் கூடுதல் தடைகளை விதிக்க வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார் ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே. அபே, அமெரிக்காவுடன் இணைந்துகொண்டே இவ்வாறு செயற்பட்டு வருகிறார் என்று கடும் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் கிம் ஜோங் உன்.
ஜப்பானுக்கு மேலாக ஏவுகணைச் சோதனைகளை நடத்தி அந்த நாட்டை சீண்டிய அவர் தற்போது "மூன்றாம் உலகப்போர் ஏற்பட்டால், ஜப்பான் சாம்பராகும்" என்று எச்சரித்துள்ளா…
இந்த விடயம் தொடர்பில் வடகொரிய …
செய்தி நிறுவனமொன்று நேற்றுமுன்…
வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'அமெரிக்…
போர்த் திட்டங்களை ஜப்பான் சாதகப்…
கொள்ள முயற்சித்தால் இதில் ஜப்பான் …
பெற முடியாது. வடகொரியப் படைகளின்…
தல்களை ஜப்பானால் எதிர்கொள்ள மு…
கொரிய தீபகற்பத்தில் போர் வெடித்தால்…
னால் ஒருபோதும் பாதுகாப்பாக இருக்…
யாது.
போருக்காக அங்கு நிலைநிறுத்தப்படும் (…
தீவில் உள்ள அமெரிக்க இராணுவ முகா…
பட) அனைத்தும் தவிடுபொடியாகி விடும்…
ரிக்காவின் ஆதரவு என்ற பலத்துடன் …
கான ஆயத்தத்தில் ஜப்பான் ஆட்சியாளர்கள்…
னால் மீளமுடியாத துரதிர்ஷ்டத்தை …
நேரிடும் என்பதை கடுமையாக எச்சரிக்…
புகிறோம் என்று கிம் ஜோங் உன் தெரி…
என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள…



மியன்மார் அரசின் இனச் சுத்திகரிப்பில் இருந்து பங்களாதேஷுக்குள் படையெடுக்கும் றொ…
ளாக மீண்டும் உச்சம் தொட்டுள்ளது. இதன்படி இந்த மாதத்துக்குள் பங்களாதேஷுக்குச் செ…
தைத் தொடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவுக்கு அருகில் பாகிஸ்தானி…

புதுடெல்லி, ஒக். 12
பாகிஸ்தான், மிகப்பெரும் ஆயுதக் கிடங்கொன்றை அமைக்கவுள்ளது. இந்தக் கிடங்கு இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் இருந்து 750 கிலோ மீற்றர் தொலைவில் அமைக்கப்படுகிறது.
பாகிஸ்தான் நாட்டில் உள்ள 140 அணு ஆயுதங்களையும் சேமித்து வைப்பதற்காக பூமிக்கடியில் இந்த புதிய அணுஆயுதக் கிடங்கை அமைக்க உள்ளதாகத் தெரிகிறது.
மூன்று சுரங்கப்பாதைகள் கொண்டதாக இந்தக் கிடங்கு அமைக்கப்படவுள்ளது.
சுரங்கப்பாதைகளிலிருந்து ஆயுதங்களை

## டு போர் வானூர்திகளை அனுப்பி
## ாரியாவை எச்சரித்தது அமெரிக்கா

கற்பத்தில் போர் ஏற்பட்டால் ஜப்பான் சாம்பராகும் என்று வடகொரியா
விடுத்துள்ள நிலையில், அங்கு தனது போர் வானூர்திகளை அனுப்பி
வை எச்சரித்தது அமெரிக்கா.
ரிக்கப் போர் வானூர்திகள் கொரியத் தீபகற்பப் பகுதியில் வட்டமடித்து
வுக்கு பதிலடி கொடுத்துள்ளன. குவாம் தளத்திலிருந்து அமெரிக்காவின்
னூர்திகள் ஜப்பான் மற்றும் தென்கொரிய வான்பகுதியில் பறந்தன.
யாவில் சென்றபோது அவற்றுடன் தென்கொரியாவின் 2 போர்
நம் சென்றன. இதேபோல் ஜப்பான் பகுதியில் அமெரிக்க வானூர்தி
டுபட்டபோது ஜப்பான் நாட்டின் போர் வானூர்திகளும் இணைந்து
ன்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# வுடன் இணைந்தால்
# ரைவில் சாம்பராகும்

)

ச்சரித்துள்ளார்.
வடகொரிய அரசின்
நேற்றுமுன்தினம்
ல், 'அமெரிக்காவின்
ான் சாதகப்படுத்திக்
ல் ஜப்பான் வெற்றி
படைகளின் தாக்கு
கொள்ள முடியாது.
வெடித்தால் ஜப்பா
ப்பாக இருக்க முடி

றுத்தப்படும் (குவாம்
ணுவ முகாம் உள்
டியாகி விடும். அமெ
பலத்துடன் போருக்
ட்சியாளர்கள் இறங்கி
ஷ்டத்தை சந்திக்க
ாக எச்சரிக்க விரும்
உன் தெரிவித்தார்'
ிடப்பட்டுள்ளது. (ம)



# விரிசல் விழும் பாலம் சீனாவில் சுவாரஷ்யம்

சீனாவின் ஹிபெய் மாகாணத்தில் தாய்ஹெங் மலை உள்ளது. அங்கு கிழக்கு தாய்ஹெங் பகுதியில் 3 ஆயிரத்து 871 அடி உயரத்தில் மலையின் பக்கவாட்டில் கண்ணாடிப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. 872 அடி நீளம், 6.6 அடி அகலம் கொண்ட இந்த கண்ணாடிப் பாலத்தில் இருந்து மலையின் அழகை ரசிக்க நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்தப் பாலத்துக்கு ஒரு நபர் முதலாவது தடவையாக வரும்போது அவருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருக்கிறது. அண்மையில் சுற்றுலா வழிகாட்டி ஒருவர் முதல்முறையாக கண்ணாடி பாலத்துக்குச் சென்றார். அவர் சில அடிகளை எடுத்து வைத்ததும் பயங்கரச் சத்தத்துடன் பாலத்தில் விரிசல்கள் ஏற்பட்டன. அதிர்ச்சியில் உறைந்த அவர் நிலை தடுமாறி கீழே விழுந்தார். கைகளை ஊன்றி பாலத்தில் ஊர்ந்தார். அவர் கை வைத்த இடத்திலும் விரிசல்கள் விரிந்து கொண்டே சென்றதால் பயத்தில் பதறினார். இந்தக் காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி காண்போரையும் அதிர்ச்சியில் உறைய வைக்கிறது. உண்மை என்னவென்றால், கண்ணாடிப் பாலம் வலுவாக உள்ளது. அதில் விரிசல்கள் விழுவது கிராபிக்ஸின் கைவண்ணம். இதற்காகப் பாலத்தில் சென்சர்கள் பொருத்தப்பட்டுள்ளன. காலடி அதிர்வை உணர்ந்தவுடன் பாலத்தில் செயற்கையாக விரிசல்கள் தென்படுகின்றன. அப்போது உண்மையான விரிசல் போன்று சத்தமும் எழுகிறது. (ம)





க்கும் ரொஹிங்ய அகதிகளின் எண்ணிக்கை சமீப நாள்க
க்குச் சென்ற ரொஹிங்யர்களின் எண்ணிக்கை 6 லட்சத்
(ம)

## ானின் ஆயுதக்கிடங்கு

பதற்காக
ஆயுதக்
த் தெரிகி

ண்டதாக
ளது.
ங்களை

கொண்டு செல்வதற்கு அகலமான சாலைகள் அமைக்கப்பட உள்ளன. உள்ளே செல்வதற்கு மற்றும் வெளியே வருவதற்கு என தனித்தனித் வாசல்கள் அமைக்கப்படும். விபத்துகள் எதுவும் ஏற்படாமல் இருக்க மொத்தப் பகுதியும் முழுமையாக பாதுகாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டள்ளது. (ம)

# கட்டுக்குள் அடங்கவில்லை கலிபோர்னியக் காட்டுத் தீ

வொஷிங்டன், ஒக். 12

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 8 நகரங்களில் எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆக உயர்ந்துள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் காட்டுத்தீ பரவி வருகிறது. அங்குள்ள நபா, சோனோமா, யுபா, மென்டோசினோ உள்ளிட்ட 8 நகரங்களில் நிலைமை மோசமாகியுள்ளது.

பலத்த காற்றுக் காரணமாகத் தீ அதிவிரைவாகப் பரவி வருகிறது. எனவே வனப்பகுதிகளில் தங்கியிருக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு லட்சத்து 75ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இதுவரை 2 ஆயிரம் கட்டடங்கள் மற்றும் வீடுகள் தீயில் எரிந்து சேதம் அடைந்துள்ளன. தீக் காயங்களுக்கு உள்ளாகிய சுமார் ஆயிரம் பேர் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த இரு தினங்களில் சுமார் 20ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி அழிவடைந்துள்ளது. இந்த பெரும் அசம்பாவிதத்தை அடுத்து கலிபோர்னியாவில் அவசர நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



“

சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் மக்கள் வெளியேற்றப் பட்டுள்ளனர். இதுவரை 2 ஆயிரம் கட்டடங்கள் மற்றும் வீடுகள் தீயில் எரிந்து சேதம் அடைந்துள்ளன.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முழு ஆதரவு அளிப்போம்

அரசியல் கைதிகளின் பிரச்சினை மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது. அனுராதபுரம் சிறைச்சாலையில் மூன்று கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருவதை அடுத்து அவர்களின் நிலை மோசமாகியுள்ள நிலையில் இந்தப் பிரச்சினை மீண்டும் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. வடக்கு முழுவதும் நாளையதினம் முழுமையானகடையடைப்புக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன, நாளைமறுதினம்யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளநிலையில், அரசியல்கைதிகள் தொடர்பில்தமிழ்ச்சமூகத்தின்உறுதியானசெய்தியைச்சொல்லும்வகையில்இந்தக்கடை யடைப்புக்குஅழைப்புவிடுக்கப்பட்டுள்ளது . இந்தக் கைதிகள் மூவர் தொடர்பிலும் அரசதலைவர் ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றவில்லை என்கிறபோது இந்தப் போராட்டம் முக்கியமானதுதான்.

இந்தவாக்குறுதிஎன்றுமட்டுமல்லஇதுபோன்றபலவாக்குறுதிகளை அரசதலைவர் தமிழ் மக்களுக்கு வழங்கிவிட்டு மறந்துபோய்விட்டார். அதில்புகழ்பெற்றது, வலி. வடக்கு மக்களை 6 மாதங்களில்சொந்தஇடங்களில்குடியமர்த்துவேன் என்றுஅவர் வழங்கியவாக்குறுதி. அவர்களில்ஒருபகுதியினர் இன்னமும் கூட சொந்த இடங்களுக்குத்திரும்பாமலேயே இருக்கின்றனர்.

இந்த மூன்று அரசியல் கைதிகளினதும் தற்போதைய கோரிக்கை பாரதூரமானதன்று. தமது வழக்குகளைத்தமக்குத் தெரிந்தமொழியில்நடத்துவதற்குவசதியாகஅவை ஏற்கனவே விசாரிக்கப்பட்டுவந்தவவுனியாநீதிமன்றத்திலேயேதொடர்ந்தும் விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்கிறார்கள்.

அந்த வழக்கின் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்ற காரணத்தைக்கூறியே இந்த வழக்கை சட்ட மா அதிபர் திணைக்களம் வவுனியாவில் இருந்து அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றியுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள்போராளிகளேசாட்சிகள்என்பதனால்அவர்கள்தமிழ்ப் பகுதி நீதிமன்றங்களுக்கு வந்து சாட்சி சொல்வதற்கு அச்சப்படுகிறார்கள்என்று பொலிஸ்தரப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க் காலங்களில் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தஅரசபடையினரைபோரின்இறுதி நாள்களில் கொன்று எரித்தார்கள் என்பதே இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு. அதனை அவர்கள் செய்தார்கள் என்பதற்கானசாட்சிகளாகமுன்னாள்புலிகள்இருவரேபொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களிலும் ஒருவர் வெளிநாடு சென்றுவிட்டார். எஞ்சியுள்ள ஒருவருக்கே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் இப்போது கூறுகின்றனர்.

சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளைக் கொன்றார்கள் என்று அரச படையினர் மீது சுமத்தப்படும் போர்க்குற்றத்திற்குநிகரான ஒரு குற்றச்சாட்டே, இந்தக் கைதிகள் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. அரச படையினர் மீதான அத்தகைய குற்றச்சாட்டை விசாரிப்பதற்கான நீதிப் பொறிமுறையைக்கூட உருவாக்குவதற்கு முன்வராத இந்த அரசு, அதிகாரம் தன்வசம்இருப்பதை'பயன்படுத்திக்கொண்டுபுலிகள்தரப்பில் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் அதேபோன்ற குற்றத்தை விசாரணை செய்ய முற்பட்டிருப்பதும், அதனையும் தமக்குச் சாதகமான வகையில் விசாரணை செய்ய முற்பட்டிருப்பதும் ஏற்புடையதன்று.

இந்தவழக்கில்சாட்சிகளாக இருக்கக்கூடியவர்கள், தடுப்பில் இருந்து அவர்களை விடுவிப்பதற்கான நிபந்தனையாகவே அரசசாட்சிகளாக மாற இணங்கினார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இது உறுதிப்படுத்தப்பட்ட ஒரு தகவல் இல்லையாயினும், இலங்கையின் பொலிஸ் மற்றும் விசாரணைப் பொறிமுறையில் அப்படியொன்று நடக்கவே முடியாது என்று நிராகரித்துவிடவும் முடியாது.

எப்படிப் பார்த்தாலும், இலங்கையின் அரச நீதி சிங்களத் தரப்பின் பக்கமாகவே சாய்ந்து நிற்கின்றமையை இந்த வழக்கு உறுதிப்படுத்துகின்றது. அப்படிப்பட்ட சிங்கள நீதியையே தமிழ்ச்சமூகம் எதிர்க்கின்றது. அதேநேரம், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள்புலிகளை மறுவாழ்வு வழங்கி விடுவித்ததாகக் கூறிக்கொள்ளும் இந்த அரசு, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் உள்ளிட்ட சிலநூறு பேரைமட்டும்தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பதும் நீதியான செயல் அல்ல.

எனவே, பட்டினிப்போராட்டத்தில்ஈடுபட்டுள்ளகைதிகளின் வழக்குகளை உடன் வவுனியாவுக்கு மாற்ற வலியுறுத்தியும், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவிக்க வலியுறுத்தியும் நாளை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அடைப்புக்கு ஆதரவு வழங்குவதும் ஆளுநர் அலுவலகம் முன்பாக நடக்க இருக்கும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதும் தமிழர்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமை.

நாம் போராட மறுத்தால் இன்று அவர்களுக்குநடப்பது நாளை எமக்கும் நடக்கும் என்பதை நினைவில் வைத்திருப்போம். கடையடைப்புக்கள்எமது பொருளாதாரத்தையேபாதிப்பவை என்பதால், ஆர்ப்பாட்டம் நடக்கக்கூடிய அரை நாளுக்கு மட்டும் கடைகளை மூடி மாலையில் அவற்றைத் திறப்பதற்கு அனுமதிப்பது குறித்துப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர்களும் சிந்திப்பது சிறந்தது.





# ஐ. நா. கூட்டத் தொடர் இலங்கை நாட்டுக்கு நித்திய கண்டம் தானா?

இந்துமதி

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் இன்று பன்னாட்டளவில் பேசப்படுகின்ற ஒரு விடயமாக மாறிவிட்டுள்ளது.

இந்த நாடு சுதந்திரம் அடைந்தபோது இனங்களுக்கிடையில் கசப்புணர்வு இருந்ததில்லை. சேர். பொன். இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள், சிங்கள மக்களாலும் போற்றி மதிக்கப்பட்டனர். அன்றைய தமிழ்த் தலைமைகள் தாம் சார்ந்த இனமக்களது நலன்கள் குறித்த அக்கறையை விட ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக இருப்பதிலும், பெரும்பான்மையின மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதிலும் அதிக அக்கறைகாட்டினார்கள். தமிழர்களுக்குத் தனி நாடு வேண்டுமென அன்றைய தமிழ்த் தலைமைகள் கேட்டிருந்தால், நாடு சுதந்திரம் அடைந்தபோது வெள்ளையர்கள் அதை நிறைவேற்றியிருப்பார்கள். ஆனால் எம்மவர்கள் அதைக் கேட்கவில்லை. தலைநகர் கொழும்பில் சொத்துச்சுகங்களுடன்வாழ்வதையே அவர்கள் விரும்பினார்கள்.

### இனவாதத்தை கையில் எடுத்த சிங்கள அரசியல் தரப்புக்கள்

பெரும்பான்மையின அரசியல்வாதிகள் தம்மிடையே கட்சி பிரிந்து எந்த வகையிலேனும் ஆட்சியைப் பிடிப்பதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இனவாதத்தைக் கையில் எடுத்தால், அதிக பயன் கிடைக்குமென்பதை இவர்கள் புரிந்து கொண்ட தால், அதையேதமதுமுதன்மை ஆயுதமாகக் கொண்டார்கள். இதற்குப் பலனும் கிடைத்தது. ஆனால் இதன் எதிர்விளைவுகள் அவர்களைமிரட்டிநிற்கின்றன.

**தமது நாட்டுக் குடி மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கே உரித்தானது. முன்னைய இலங்கை அரசு அந்தப் பொறுப்பிலிருந்து விலகியே நின்றது. இன்றைய கூட்டு அரசும் செய்வதறியாத நிலையில் திகைத்து நிற்பதை உணர முடிகிறது.**

கடந்த 2009 ஆம் ஆண்டு புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டதாகக் கொக்கரித்த தென்பகுதி அரசியல் தலைமைகள் தம்மைத் தாமே வெற்றியின் நாயகர்களாகவும் உருவகித்துக் கொண்டனர். ஆனால் மறுபுறத்தில் இன்னொரு மக்கள் கூட்டத்தினர் அனுபவித்த வேதனைகளை அவர்கள் உணருவதற்கு மறந்துவிட்டனர். இனரீதியில் இந்த மக்கள் வேறுபட்டுக்காணப்பட்டதால் இவர்கள் மீது அக்கறை காட்டுவதற்கு அவர்கள் விரும்பவில்லை.

போக்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள்தொடர்பாகஐ.நாமனித உரிமைச்செயற்பாட்டாளர்கள் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்ததோடுமனித உரிமைகள்சபையிலும் அதனைக் குற்றச்சாட்டாகமுன்வைத்தனர். ஆனால். கடந்த எட்டு ஆண்டுகளாக பன்னாட்டுச் சமூகத்தை யும், ஐ.நா. சபையையும் இலங்கை ஏமாற்றி வருகின்றது. பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதை விடுத்துக்காலத்தைக்கடத்துவதிலேயேஇலங்கை அரசு குறியாக நிற்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள்ஆணையாளர் ஹுசைன் இலங்கை விவகாரத்தை உன்னிப்பாகஅவதானித்துவருகின்றார். மனித உரிமைகள் விவகாரத்தைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கையின் அரசதலைவரிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்.

### இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஒத்ததே மியன்மார் முஸ்லிம்கள் பிரச்சினையும்

இலங்கையைப் போன்றே மியன்மாரிலும் இனப்பிரச்சினை உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது. பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற அந்த நாட்டில், முஸ்லிம் இனத்தவர் சிறுபான்மையினராக உள்ளனர். இந்த மக்கள் தொடர்ந்தும் பாதிப்புக்களைஎதிர்கொண்டு வந்ததால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தவேண்டிய நிர்ப்பந்தத்தினுள் தள்ளப்பட்டனர். இதன் விளைவாக அப்பாவிகளான பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர். பெண்கள் பாலியல் ரீதியில் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

மியன்மாரில் இனியும் வாழமுடியாது என்ற நிலையில் சுமார் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் அயல்நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். ஈழத்தமிழர்களுக்கும் இவ்வாறானதொரு நிலைதான் காணப்பட்டது. தமது நாட்டுக் குடிமக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அந்தந்த நாடுகளின் அரசுகளுக்கே உரித்தானது. முன்னைய இலங்கை அரசு அந்தப் பொறுப்பிலிருந்து விலகியே நின்றது.

இன்றைய கூட்டு அரசும் செய்வதறியாத நிலையில் திகைத்து நிற்பதை உணர முடிகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதையாவது செய்வதற்கு முயற்சி செய்தாலும், இனவாதிகள் அதற்கு இடம்கொடுப்பதாக இல்லை. ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஐ.நா. மற்றும் பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்கள் அதிகரித்துச் செல்வதை சமீபகாலமாக அவதானிக்க முடிகின்றது.

### ஐ.நா.கூட்டத்தொடரில் இலங்கை அரசின் திருகுதாளங்கள் அம்பலப்படுத்தப்பட்டன

அண்மைய ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் அரச தரப்புப் பிரதிநிதிகள் அரசின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் தொடர்பாக முன்வைத்த கருத்து வெளிப்பாடுகளை மறுதலித்து உண்மை நிலையை தக்க ஆதாரங்களுடன் வெளிப்படுத்துவதில். இங்கிருந்து ஜெனீவா சென்றிருந்த தமிழ்த் தரப்புக்களும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தன.

# ஹக்கீம், சம்பந்தன் யதார்த்த நிலையை வெளிப்படுத்துகின்றனர்

சேரலாதன்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அண்மையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்த கருத்துக்கள் இன்றைய சூழ்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

"தமிழர்களின் விருப்பத்துக்குக் குறுக்கே முஸ்லிம்கள் நிற்கக் கூடாது. அரசியல்வாதிகள் இணைப்பைத்தடுப்பதிலும்பிரிப்பைக்கேட்பதிலும் தான் தமது காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பராயின், அது அவர்களின் அரசியல் வங்குரோத்தின் உச்சக்கட்டம் என்றே கூற வேண்டும்" இவ்வாறு ஹக்கீம் தெரிவித்துள்ளமை அவரது தெளிந்த அரசியல் ஞானத்தை எடுத்துக் காட்டுகின்றது. அவர் வடக்குக் கிழக்கு மாகா ணங்களை மனதில் கொண்டே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் என நம்பலாம்.

**இணைந்திருந்த மாகாணங்கள் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்ட பரிதாபம்**


நாட்டின் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஒன்றிணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒருநீதிமன்றத்தீர்ப்பின் மூலமாகப் பிரிக்கப்பட்டன. இந்திய இலங்கை ஒப்பந்தமும் இதன் மூலமாகத் தூக்கியெறியப்பட்டது. ஆனால் இது தொடர்பாக இந்திய இலங்கை அரசுகள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பிரிப்புக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.


வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தமது பூர்வீக இடங்களாக இன்றளவும் தமிழ்மக்கள் நினைத்துக் கொண்டிருந்கின்றனர். இணைந்த இவ்விரண்டு மாகாணங்களில் அவர்களே பெரும்பான்மையினர் என்ற அந்தஸ்தையும் பெற்றுள்ளனர். ஆனால் இரண்டு மாகாணங்களும்பிரிக்கப்பட்டதன் பின்னர் அந்த நிலை மாறி விட்டது. இதைத் தொடர்ந்து பராமரித்து வருவதைத்தான் கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்கள் விரும்புகின்றனர். போராடவும் செய்கின்றனர்.

ஆனால் கிழக்கில் துரிதமாக இடம் பெற்று வருகின்ற சிங்களக்குடியேற்றங்களால் தமிழர்களின் காணிகள் மட்டும் பறிபோகவில்லை. முஸ்லிம் மக்களின் காணிகளும் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இந்த நிலை தொடருமானால், அந்த மக்களின் இருப்பே கேள்விக் குறியாக மாறிவிடும். இதைச் சுயநலம் மிக்க சில முஸ்லிம் அரசியல் தலைமைகள் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. அரசியலில் பதவிகளைப் பெறுவது மட்டுமே இவர்களின் நோக்கமாகக் காணப்படுகின்றது. தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்திருக்கும் போதுதான் பெரும்பான்மையின இனவாதிகளின் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ரவூப் ஹக்கீம் இதை நன்கு உணர்ந்து கொண்டதால் தற்போது சரியான கருத்தைத் தெரிவித்துள்ளார். இதேவேளை கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்த கருத்துக்களும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.

**சம்பந்தனின் கருத்து வெளிப்பாடு சிங்கள தலைமைத்துவங்களுக்கு ஒரு எச்சரிக்கை**

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் பிரிவினையைத்தடுக்கின்ற உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதால் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைவதால் நாடு பிளவுபட்டு விடுமென சிங்கள மக்கள் அச்சமடையத்தேவையில்லையெனவும், உரிய தீர்வு கிடைக்காதுவிட்டால் தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிடுவார்கள் எனவும் சம்பந்தன்கூறியகருத்துக்களைப்பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள்சிங்களமக்களிடம்தெளிவுபடுத்த வேண்டும். இனவாதிகள்வழக்கம் போன்று புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டுவிட்டால் நாடு இரண்டாகப் பிளவுபட்டுவிடும் எனவும், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்து விட்டால் நாடு பிளவுபடுவதற்குச் சமம் எனவும் தவறான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களும் இதை நம்புகின்றனர் என்றேதெரிகின்றது. முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படு வதைத் தடுத்தே தீருவேன் எனச் சூளுரைத்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.






**தமிழர்- முஸ்லிம்கள் ஒற்றுமை இன்மையை வாய்ப்பாகப் பயன்படுத்தும் சிங்களத் தலைமைகள்**

சிறுபான்மையினர் எனக் குறிப்பிடப்படும்போது தமிழர்களும், முஸ்லிம்களும் அதில் உள்ளடக்கப்படுகின்றனர். பாதிப்புக்களை அடிக்கடி எதிர்கொள்ளபவர்களும் இவர்கள்தான். இவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிளவுபட்டு நிற்பதால் இவர்களைத்துன்புறுத்துவது இனவாதிகளுக்கு எளிதாகப் போய்விட்டது. தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக இணைந்து செயற்படுவார்களாயின் அவர்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற சவால்களைச் சமாளிப்பது எளிதாகவே இருக்கும். இனவாதிகளும் இவர்களது ஒற்றுமையைக் கண்டு மிரண்டு போய் விடுவார்கள்.

முஸ்லிம் தலைமைகள் தமிழ்த் தலைமையுடன்ஒன்றாகஅமர்ந்து மனம் விட்டுப் பேசுவதால் தமக்கிடையே உள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வைக் காண முடியும். ஆற அமர இருந்து பேசும்போது முரண்பாடுகளுக்கான தீர்வும் சுலபமாகக் கிடைத்துவிடும்.

இன்றைய நிலையில் முஸ்லிம் தலைமைகள் கூறுபட்டுக்கிடக்கின்றன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள்ளேயே முரண்பாடுகள் வலுத்துவருகின்றன. அதன்தலைமைக்குஎதிராகப்போர்க்கொடிதூக்குபவர்கள் அங்கு இல்லாமலில்லை. இதைவிட அதாவுல்லா, றிசாட் பதியுதீன், பஷீர் சேரு தாவூத் ஆகியோரும் தம்மை முஸ்லிம் தலைமைகளாக உருவகப்படுத்திச் செயற்படுகின்றனர். இதனால் தமிழ் முஸ்லிம் தலைவர்களின் பேச்சு இலகுவாக இருக்கப் போவதில்லை. இழுபறிகள் ஏற்படத்தான் செய்யும்.

தற்போது ஹக்கீம் காட்டியள்ள நல்லெண்ணச் சமிக்ஞையைத் தமிழ்த்தலைமைகள்பயன்படுத்துவதற்கு முன்வர வேண்டும். கடந்த கால கசப்பான அனுபவங்களை இனிப்பானவையாக மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இன்றுஓர்உறுதியான,தீர்க்கமான கட்டத்தில் தமிழர்கள் உள்ளனர். வாழ்வா? சாவா? என்றநிலைதான் தற்போது காணப்படுகின்றது. வாழ்வையும் சாவையும் நிச்சயிக்கப் போவது எமது எதிர்கால நடவடிக்கைகள்தான். இதில் கவனமாகவும் உறுதியாகவும் இருப்பதுதான் வெற்றிக்கு வழிவகுக்கும். தமிழ் முஸ்லிம் தலைமைகள் இதை உணர்ந்த செயற்பட்டால் போதுமானது.



## ஆசிரியருக்கான கடிதம்

### அரசியல் என்பது ஒரு சாக்கடையே

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை; நிரந்தர எதிரிகளும் இல்லை என்பது யதார்த்தமானதொரு முதுமொழியே. இதனை முற்றுமுழுதாக நிரூபிப்பது போன்று இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரங்கள் அமைந்து வருகின்றன.

கொழும்பு அரசியலில் கீரியும் பாம்பும் நிலையில் தொடர்ந்து பல தசாப்தங்களாக அரசியல் செய்து வந்த ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், கடந்த அரச தலைவர் தேர்தலில் மகிந்தவின் தலைமைத்துவத்துக்கு எதிராக சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரையே பொது வேட்பாளராக்கி மகிந்தவைப் பதவி கவிழ்த்த வரலாற்றுத் திருப்புமுனை மூலம் மேற்சொன்ன 'அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை' என்பதை நிரூபித்திருந்தன.

அந்த வகையில் அண்மைக்கால அரசியல் மாற்றங்களை அவதானிக்கும்போது, சில சமயம் வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருக்கிறது. 2009 மே மாதம் இறுதிப் போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதையடுத்து, அந்த வேளையில் வெளிநாட்டிலிருந்த அப்போதைய அரச தலைவர் மகிந்த நாடு திரும்பியவேளை வானூர்தி நிலையத்தில் அவரை வரவேற்கச் சென்றிருந்த அப்போதைய சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன முகத்தில் பூரிப்போடு மகிந்தவைக் கட்டித் தழுவி வரவேற்ற காட்சியை மனப் பொருமலுடன் கண்ணுற்றோம். எவராலும் தோற்கடிக்க இயலாதெனப் பெருமையாகப் பேசப்பட்ட மகிந்த அரச தலைவர் தேர்தலில் தோல்வியுற்று, அலரி மாளிகையிலிருந்து வெளியேற தமது சொந்த ஊருக்குச் செல்ல அஞ்சி, ரணில் விக்கிரம சிங்கவைத் தொடர்பு கொண்டு பாதுகாப்புப் படையினரது உதவி பெற்று அலரி மாளிகையினின்றும் வெளியேறிச் சென்ற காட்சியையும் கண்டு மன ஆறுதலுற்றோம்.


தேர்தலில் தோல்வியுற்றால் மகிந்தவால் பழி வாங்கப்படுவேன் என்ற அச்சத்தில் தேர்தல் தினத்தன்று மறைவிடமொன்றில் தாம் ஒளிந்திருந்ததை மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததைக் கேட்டு நாமும் அனுதாபப்பட்டோம்.

இன்று மகிந்த அணியினருடனான சமரச முயற்சிகளில் ஈடுபடும் தரப்பினரிடம் 'எந்தக் காரணம் கொண்டும் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த எவரையும் தலைமை அமைச்சராக ஆக்கும் யோசனைக்கு ஒரு போதுமே நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் எனக் கர்ச்சிக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ஆச்சரியத்தோடு பார்க்கிறோம்.

அந்த வகையில் அரசியல் என்பது ஒரு சாக்கடை என்று எவரோ ஒரு அனுபவசாலி சொல்லி வைத்த கருத்து, சொல்லிவைத்தாற்போன்று இன்றைய எமது இலங்கை அரசியலுக்கு முற்றுமுழுதாகப் பொருந்துகிறது எனக் கொள்ள முடிகிறதல்லவா?

ப.வாகீசன், ஊரெழு.

## ஏற்றுமதி இறக்குமதிச் செயலாற்றுகை




தகவல் மூலம்: இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம்

நடப்பாண்டின் ஜூலை மாத காலப்பகுதி வரையான ஏற்றுமதி இறக்குமதிச் செயலாற்றுகை பின்வருமாறு அமைந்துள்ள தகவலை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு மையம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை வெளியார்ந்த ஆய்வு அறிக்கையிடலாக மத்திய வங்கி தந்துள்ளது. (ஓ)

## சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு அதிகரிப்பு

“ பிராந்திய சந்தைகளுடன் ஒப்பிடுகையில் கவர்ச்சிகரமான ஓர் விலை உழைப்பு பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் அதிகரித்த இலாபம் மற்றும் ஓப்பீட்டளவில் விலைச்சுட்டிகளின் அசைவு, அவற்றின் உறுதியான செயலாற்றுகைகள் என்பன வெளிநாட்டு முதலீடுகள் இலங்கை நோக்கி வருவதற்கான அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.



கடந்த இரு நிதியாண்டுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மொத்தச்சந்தைப் புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது.
2016 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே 42.0 வீதமாகவும், 34.4 வீதமாகவும் காணப்பட்ட மொத்தச் சந்தை புரள்வில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பானது நடப்பாண்டில் 47.2 வீத வளர்ச்சியினை வழங்கியுள்ளது. அத்துடன் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நடப்பாண்டின் இன்று வரையான காலப்பகுதிகளில் கடந்தஏப்ரல் மாதப் புரள்வானது 50 வீதத்தினைத் தாண்டியுள்ளது. (ஓ)

# ஏற்றுமதிச் செயலாற்றுகை 6.5 வீதமாக அதிகரிப்பு

### நடப்பாண்டின் ஜூலை மாத காலப்பகுதி வரையான வருமானப் பெறுகையாக அமைவு

நடப்பாண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரையான காலப்பகுதி, கடந்த ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரையான காலப்பகுதி மற்றும் தனித்து கடந்த ஆண்டின் ஜூலை மாத காலப்பகுதி நடப்பாண்டின் ஜூலை மாத காலப்பகுதி வரையான ஏற்றுமதிச் செயலாற்றுகை மூலமான வருமான உள்வருகைகள் அதிகரித்துள்ளது என்ற தகவலை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வு மையம் வெளிப்படுத்தியுள்ளது. இதனை வெளியார்ந்த ஆய்வு அறிக்கையிடலாக மத்திய வங்கி தந்துள்ளது.
தேயிலை, மசாலா, பெற்றோலியம் பொருள்கள் மற்றும் கடல் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியால் அதிக வருவாய் கிடைத்துள்ளது. நடப்பாண்டின் முதல் ஏழு மாதங்களில் ஏற்றுமதி மூலமான வருவாய் ஆண்டு அடிப்படையில் 6.5 வீதமாக அமைந்துள்ளது. வருமான ஈட்டமானது 6 ஆயிரத்து 413.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.




இவற்றுள் தனித்து கைத்தொழில் பொருள்களின் ஏற்றுமதி மூலமான வருவாய் ஆண்டு அடிப்படையில் 3 வீதமாக அமைந்துள்ளதுடன் வருமான ஈட்டமானது 4 ஆயிரத்து 823.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது. அதேவேளை விவசாய உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதிச் செயற்பாடு மூலமான வருவாய் ஆண்டு ரீதியில் 18.8 வீதமாக அமைந்துள்ளது. வருமான ஈட்டம் ஆயிரத்து 559.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளன. எனினும் புடவை மற்றும் ஆடைகள், இரத்தினக் கற்கள், வைரம் மற்றும் நகைகள் அதேபோன்று உணவு, பானங்கள் மற்றும் புகையிலை ஆகியவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய் கணிசமாகக் குறைந்துள்ளது.
தகவல் மூலம் : இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம், தேசிய ஆபரணக் கற்கள் அதிகார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள். ( a- தற்காலிக மதிப்பீடு, b - திருத்திய மதிப்பீடு) (ஓ)

# தேறிய முதலீட்டு உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு முதலீட்டாளரைக் கவர்ந்துள்ளது

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தேறிய முதலீட்டு உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்துள்ளது என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
குறிப்பாக இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தின் முதலாம் வாரம் தொடக்கம் தொடர்ச்சியான 24 வாரங்களுக்கு தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலின் வழி சந்தை, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் முதலீட்டுக்கான ஆர்வத்தினை ஏற்படுத்திக்கொண்டுள்ளது.
நடப்பாண்டின் முதல் அரையாண்டுக்கான குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாக வெளிநாட்டுக் கொள்வனவுகள் 62.6 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகிறது. 2016 ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்குரிய கொள்வனவுப் பதிவிடலான 31.5 பில்லியன் ரூபாக்களை விடவும் இரண்டு மடங்காகப் பதிவு செய்து நிதியாண்டுகளின் அரையாண்டுக்குரிய உச்சவரம்பாக இது அமைந்துள்ளது.
நடப்பாண்டில் இன்று வரையான தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் என்பது 22.2 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிகரித்த அடைவாக அமைந்துள்ளது. கடந்த ஆண்டினை எடுத்து நோக்கும் போது 383.5 மில்லியன் ரூபா முதலீட்டு உட்பாய்ச்சலினைப் பங்குச் சந்தை பதிவு செய்திருந்தது.
மாறாக 2015 ஆம் ஆண்டு 5.3 பில்லியன் ரூபாக்கள் வெளிப்பாய்ச்சலாக அமைந்திருந்தது. தவிர 2012 ஆம் ஆண்டு வரலாற்றில் அதிகூடிய தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் ஆண்டாக அமைந்திருந்தமையும் நிதியாண்டின் முடிவில் உட்பாய்ச்சலாக 38.6 பில்லியன் ரூபா பதிவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிட்டு நோக்கத்தக்கது. (ஓ)

CSE COLOMBO STOCK EXCHANGE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455
11/10/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↑ 35.93 | 6,559.61 | 6,523.68 |
| S&P SL20 | ↑ 36.46 | 3,870.42 | 3,833.96 |
| வியாபாரப்புரள்வு | | 1,931,162,750 | 2,157,105,410 |
| உள்நாடு:- கொள்வனவு | | 1,641,107,460 | 394,074,368 |
| விற்பனை | | 1,508,278,530 | 893,366,210 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 290,055,232 | 1,763,020,160 |
| விற்பனை | | 422,884,256 | 1,263,739,260 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| சம்பத் வங்கி | SAMP.N | 352.2 | 2,653,453 | 924,690,938 |
| நேஷனல் டெவலப்மென்ட் வங்கி | NDB.N | 136.5 | 1,711,792 | 226,311,683 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 163 | 1,245,153 | 203,027,538 |
| சிலோன் ஹோல் ஸ்ரோஸ் | CCS.N | 900 | 84,202 | 75,778,432 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 25.8 | 2,326,022 | 60,392,361 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 265 | 184,863 | 48,181,734 |
| ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் | JINS.N | 15.5 | 3,039,196 | 47,059,960 |
| லங்கா ஓரிக்ஸ் லீசிங் | LOLC.N | 141.5 | 246,755 | 34,633,697 |
| லங்கா ஓரிக்ஸ் பைனான்ஸ் | LOFC.N | 4.2 | 7,311,715 | 30,695,190 |
| லங்கெம் டெவெலப்மென்ட்ஸ் | LDEV.N | 13.2 | 1,866,776 | 25,027,966 |

அறிவித்தல்கள் -
பங்குலாபம்
மெர்க்கன்டைல் முதலீடுகள் (MERC)- Rs. 7.00
பி.ஆர்ஏசி லங்கா பினான்ஸ் (NIFL)- Rs. 0.04

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 249 |
| விலை உழைப்பு | ↓ | 10.9 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 2.9 |

உடுவிலூர்கலா

# இளையவர்களை நல்வழிப்படுத்தல்

இறைவனின் படைப்பிலக்கணம் தனித்துவமானது. அங்கு பிறப்பு என்கின்ற உயிரின் முதன்மைப் பரிணாமமும் இறப்பு என்கின்ற ஆயுளின் வரையறை உடைய தீர்மானங்க ளும் நோக்குதற்குரியது. இவற்றினிடை உயிரின் வளர்ச்சி, பண்பியல் கூறுகளின் வளர்ச்சி, அறிவூட்டம், குடும்ப அமைவு, தனிமனித ஆளுமை விருத்தி, கலை கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் இவை அனைத்தும் சார்ந்து ஒழுங்கமைவு பெறுகின்ற சமூகம் என்ற விதமாக மனிதம் தழைத்தோங்குகிறது. உயிர்ப்புள்ள மனிதங்கள் ஊசடித் திரிகின்றன. இனத்துவமாக பரிமாணம் கொள்கின்றன.

### சமூக நிலைத்திருப்பு

உண்மையில் தனித்துவமான சமூக ஒழுங்குடைய இனமே நீடித்த நிலைத்திருப்பை பெறுகின்றது. மேற்போந்த வளர்ச்சி கூறுகளின் நிலைபேறான படிமங்களின் வழியே சிறப்புற இயங்குநிலை பெறுகின்றது. ஆனாலும் இடைவிலகலாக உட் செலுத்தப்படுகின்ற அழிவின் பொருள் நிலைகள் சீரான இனத்துவக் கட்டமைப்பில் இயல்பாகவே உடைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. இவற்றுள் இனக்குழுமங்களிடையே கட்டமைக்கப்படுகின்ற உரிமை சார்ந்த பிணக்குகளைத் தாண்டி அதிக சமூகத் தாக்கவன்மையுடைய காரண காரிய செயல்நிலைகளாக முன்னிலை பெறுபவை சமூகச் சீர்குலைவுகளே. அவை அன்றாடம் உருப்பெருக்கம் கொண்டு சமூகத் தனிமங்களின் இருப்பினை அழித்துவிடுகின்றன. குறிப்பாக பாலியல் வன்கொடுமைகள், குடும்ப வன்முறைகள், கொலை, கொள்ளை இவை தாண்டி எதிர்வினையற்று சம்பவிக்கின்ற விபத்து அசம்பாவிதங்களை சொல்லிவிடமுடியும்.

### சமூகத் தனிமங்களின் அழிவு

அந்தவகையிலே தனித்துவக் கட்டுமானங்களை இழந்து சாவுகள் சாதாரணமாகி சரித்திரம் படைக்கின்ற சமூகமாக நாம் மாற்றங் கண்டுள்ளோம். எங்கு திரும்பினும் அவலக் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. ஒருசாவின் அவலக் குரல்கள் ஓயும் முன்னர் அடுத்தடுத்த மரணங்கள் இடம்பெறுகின்றன. அதிலும் இளம் சமூகத்தினரின் உயிர்ப்பலிகள் தரும் சோகங்கள் தாங்கொணாதவை. தொடருந்து மோதிச் சாவு. யானை தாக்கிச் சாவு. வாள் வெட்டில் சாவு. துப்பாக்கிச் சூட்டில் சாவு. வன்புணர்வில் சாவு. சீதனக் கொடுமையால் தற்கொலை எனத் தொடரும் அவலங்களுள் இப்போது கடலில் படகுகவிழ்ந்து சாவு என்ற பரிமாணங்களும் தங்களது இடத்தை பதிவிட்டுள்ளன. அருமந்த உயிர்களைக் காவு கொடுக்கும் பழக்க தோஷமுடையவர்களாக நாம் மாற்றங்கண்டுள்ளோம். இன ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களாக, உரிமை மறுக்கப்பட்டவர்களாக மிகப்பெரிய மனிதப் படுகொலைகளைக் கடந்த 2009 ஆம் ஆண்டுகளில் கண்டுகொண்டவர்களாக இத்தகு துயர மிகுதிகளை ஏற்றிருக்கவும், அபிவிருத்தியின் நாமக் களிப்பில் ஏற்றுக்கொண்டு இயங்குநிலை பெற்றிருக்கவும் இயைபாக்கமடைந்துள்ளோம்.

அண்மையில் மண்டைதீவு கடற்பரப்பில் பிறந்த நாளை கொண்டாடி மகிழச் சென்று உயிர்நீத்த அறுவருடைய இழப்பு இதற்கு உரித்துடைய பாங்கினை கொண்டு இடம்





## உயிர்ப்புள்ள மனிதங்களை உருவகிக்கும் பணி

பெற்றதை யாரும் மறுத்துவிடமுடியாது. பிறப்பின் உன்னதத்தை ஞாபகம் கொள்கின்ற பிறந்தநாளின் சிறப்பினை பெற்றோரின் ஆசீர்வாதத்தோடும், மன அமைதியோடும், இறை பக்தியோடும், ஆலய தரிசனங்களோடும், உற்றார் உறவினரின் ஒன்றுகூடல் களிப்போடும் சுருக்கமுறக் கடந்திருக்கும் காலங்கள் வழக்கொழிந்துவிட்டன. நவீனத்தின் ஆட்சி அதிகாரம் உச்சம் பெறத் தொடங்கிவிட்டது. இப்போது அமைதி 'அகதி' நிலையை அடைந்துவிட்டது. கடற்கரையிலும், உணவு விடுதிகளிலும் பிறப்பின் தனித்துவம் மலினப்படுத்தப்படுகிறது.



### பொறுப்புக் கூறல்

இங்கு சமூகத்தின் பொறுப்பும் பெற்றோரின் கண்டிப்பும் கேள்வி நிலைக்குட்பட்டுள்ளது. தமிழினம் அறிவுசால் சமூகத்தின் கட்டமைவை உடையது என்ற பொருள்கோடலில் உராய்வுகளை ஏற்படுத்தியுள்ளது. படித்த பிள்ளைகளின் வாழ்வியல் நிலை இப்படி ஆகலாமா..? முன்னுதாரணமாக இருக்க வேண்டியவர்களே தலை கீழாய் நடக்கலாமா..? என்ற கேள்விநிலைகள் இயல்பாக எழுந்து அதிகரித்த சமூகப் பிறழ்வின் புதைகுழியினுள் அமிழ்ந்து மறைந்து போகின்றன. அடுத்த அழிவு தருவிகளை எதிர்பார்த்தும். அவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலையுடைய கரம்கூப்பல்களையும் தந்து வாய்பிளந்து நிற்கின்றன. இது குறித்து அறிவுடைய தமிழினச் சமூக ஆளுமைகள் சிந்திக்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் நடத்தையோடும். அவர்களின் செயற்பாடுகளோடும் அதிக கரிசனையும் ஆர்வமும் பெற வேண்டும்.

மாணவர்கள் தமது இலட்சியத்தை தூக்கியெறிந்து நட்புவட்டத்தோடு மகிழ்ச்சியை தக்கவைக்கவும். கொண்டாடவும் முனைவது தவறுகளும் நவீனத்தின் ஆளுகைகள் தந்த சாதகமற்ற பாதகம் என்றே இவற்றைக் கூற வேண்டும். கவலையீனங்களும். அக்கறையீனங்களும் இளையோர் வாழ்வில் தாராளமயப்பட்டுள்ளன. இவர்களை கட்டுப்படுத்த முடியாத நிலையில் பெற்றோர் திண்டாடுகின்றனர். பண்பாடு, கலாசாரம் போன்றவற்றின் முக்கியத்துவம் பங்களிப்பு போன்றவற்றை சொல்லித்தரத் தவறியதன் பின்னூட்டங்களாகவே இவை நோக்கப்படுகின்றன. தவிர பெற்றோர் பிள்ளைக் கண்டு அச்சப்படுபவர்களாக மாறிவிட்டனர்.

வாழ்வாதாரம் என்ற பிடிமானங்களுள இறுக்கமாகி நாளாந்தம் அவசரமாக ஓடுகின்றனர். பெற்றோரின் அன்பு, அரவணைப்பு, வாழ்தல் எல்லாமே பெறுமதி இழந்துவிட்டன. கட்டுப்பாடுகளை பிள்ளைகள் மறந்துவிட்டனர். அதனைச் சொல்லிக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டினை பெற்றோர் மறந்துவிட்டனர். அது குறித்து ஆக்கபூர்வமாகச் சிந்திப்பதில்லை. இதன் விளைவாகவே இளையோர் சமூகம் 'மேய்ப்பன் இல்லாத மந்தைகள்' என்ற நிலைக்கு உருமாற்றம் கண்டுகொண்டுள்ளது.

### சமூக இயங்குநிலையின் வழி பெற்றொரின் பங்கு

ஆக, பெற்றோர் தங்கள் பிள்ளைகள் சார்ந்து தர்க்க ரீதியான அறிவு நிலையில் அதிகம் புத்தொளி பெற வேண்டும். ஒரு நாட்டின் பொருளாதாரம் இளையவர்களின் கரங்களில் தங்கியுள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளத் தலைப்பட வேண்டும். பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணிப்பாதுகாத்து கல்வியில் முன்னேறும்போது அவர்களது வாழ்வு மடுமல்ல சமூகமும் மேன்மை அடையும் என்பதை சிந்தனைபூர்வமாக ஏற்று நடந்துகொள்ள வேண்டும். இளையவர்களை வழிநடத்தத் தலைப்பட வேண்டும்.

தவிர கல்வி அறிவே இல்லாது சாதிக்க வேண்டும் என்கிற உள்ளுணர்வோடும் நேர்கொண்ட சிந்தனையோடும் சுயதொழிலாளராக ஏராளமான இளைஞர்கள் உள்ளனர். அவர்கள் முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கின்றனர். இந்த நிலைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வசதிவாய்ப்புகளோடு வெளிநாட்டு பணபலமும் அதிகம் உடையவர்களே இவ்வாறு பொருளற்ற பொருத்தமற்ற வாழ்க்கையை வாழ்கின்றனர். பெற்றோர் இதனை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். எந்த வயதிலும் பிள்ளையை குழந்தையாக பார்க்கும் மனோபாவத்தைக் கொண்டிருக்க வேண்டும். பிள்ளைகளின் நலனிலும் அவர்களின் நாளாந்த நடவடிக்கைகளிலும் நட்புநிலைகளிலும். போக்குவரத்திலும் கூடிய கவனம் எடுக்க வேண்டும். அன்புடன் அரவணைத்து கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கச் சொல்லித் தர வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். வாழ்வின் யதார்த்தங்களை நல்வழியில் எடுத்துரைக்க வேண்டும். அறம் சார்ந்த மரபு சார்ந்த வாழ்க்கையை கற்றுக்கொடுக்க வேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமும் வேண்டுதலும். தெரிந்தும் புரிந்தும் நடந்து கொள்வோம்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகள் சார்ந்து தர்க்க ரீதியான அறிவு நிலையில் அதிகம் புத்தொளி பெற வேண்டும். ஒரு நாட்டின் பொருளாதாரம் இளையவர்களின் கரங்களில் தங்கியுள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளத் தலைப்பட வேண்டும். பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாத்து கல்வியில் முன்னேறும்போது அவர்களது வாழ்வு மடுமல்ல சமூகமும் மேன்மை அடையும் என்பதை சிந்தனைப் பூர்வமாக ஏற்று நடந்துகொள்ள வேண்டும். இளையவர்களை வழிநடத்தத் தலைப்பட வேண்டும்.

# குறைகள் நீங்க நாம் வணங்க வேண்டிய தெய்வங்கள்

எமக்கு மன அமைதி குறைந்து, அல்லற்படும் போது, 'எதை உண்டால் பித்தம் தெளியும்' என்று யாராவது ஏதாவது பரிகாரம் செய்யச் சொன்னால் உடனே செய்து விடுவோம். ஆனால் அதை முறைப்படி தெரிந்த பெரியவர்களிடம் கேட்டு செய்யும்போது பண விரயம் மற்றும் மன அமைதியை காத்துக் கொள்ளலாம். எந்தத் தெய்வத்தை எந்தக் காரியம் நிறைவேற, அல்லது பிரச்சினை தீர வணங்க வேண்டும் என்று எமது முன்னோர் குறித்து வைத்துள்ளனரோ, அதன் படி எந்தத் தெய்வத்தை வணங்கினால் என்ன குறை தீரும் என்பதை பார்ப்போம்.



| | |
|---|---|
| எடுத்த காரியத்தில் ஏற்படும் இடையூறுகள் நீங்க | - விநாயகர் |
| வீட்டில் அஷ்ட ஐஸ்வர்யம் பெருக | - ஸ்ரீ மகாலட்சுமி, ஸ்ரீ நாராயணர் |
| குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படும் நோய் தீர | - ஸ்ரீ தன்வந்தரி, தட்சிணா மூர்த்தி |
| வீடும், நிலமும் மற்றும் சொத்துக்கள் வாங்க, பெற | - ஸ்ரீ சுப்ரமண்யர், செவ்வாய் பகவான் |
| தீர்க்க ஆயுள், மற்றும் ஆரோக்கியம் பெற | - ருத்திரன் |
| மனவலிமை, உடல் வலிமை பெற | - ராஜராஜேஸ்வரி, ஸ்ரீ ஆஞ்சநேயர் |
| கல்வியில் சிறந்து விளங்க | - ஸ்ரீ சரஸ்வதி |
| திருமணம் நடைபெற | - ஸ்ரீகாமாட்சி அம்மன், துர்க்கை |
| மாங்கல்ய பாக்கியம் நிலைக்க | - மங்கள கௌரி |
| புத்திர பாக்கியம் பெற | - சந்தான கிருஷ்ணன், சந்தான லட்சுமி |
| புதிய தொழில் துவங்க | - கஜலட்சுமி |
| விவசாயம் தழைக்க | - தான்யலட்சுமி |
| வீட்டில் உணவுக் கஷ்டம் நீங்க | - அன்னபூரணி |
| வழக்கு விசாரணைகளில் வெற்றி பெற | - விநாயகர் |
| சனி தோஷம் நீங்க ஸ்ரீ ஐயப்பன், | - ஆஞ்சநேயர் |
| பகைவர் தொல்லை நீங்க | - திருச்செந்தூர் முருகன் |
| கண் பார்வைக் கோளாறுகள் நீங்க | - சிவபிரான், சுப்ரமண்யர், விநாயகர் |
| காது, மூக்கு, தொண்டை நோய்கள் அகல | - முருகன் |
| ஆஸ்துமா, சளி, காசம், சுவாசக் கோளாறுகள் | - மகாவிஷ்ணு |
| மாரடைப்பு, இதயக் கோளாறுகள் | - சக்தி, கருமாரி, துர்க்கை |
| அம்மை நோய்கள் | - மாரியம்மன் |



## வரலாற்றில் இன்றைய தினம் 12.10.2017



1901 - அமெரிக்க அதிபரின் தங்குமிடத்துக்கு 'வெள்ளை மாளிகை' என அரச தலைவர் தியோடர் ரூஸ்வெல்டினால் பெயரிடப்பட்டது.

1915 - பெல்ஜியத்திலிருந்து கூட்டுப் படைச் சிப்பாய்கள் தப்பிச் செல்ல உதவினார் என்ற குற்றச்சாட்டில் பிரிட்டனின் தாதி எடித், சாவுத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்.

1960 - ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தின்போது கிழக்கு ஐரோப்பியாவில் சோவியத் யூனியன் காலனித்துவக் கொள்கையுடன் செயற்படுகிறது என்று பிலிப்பைன்ஸ் பிரதிநிதி உரையாற்றியபோது நிகிடா குருஷேவ் தனது சப்பாத்தினால் மேசையில் தட்டி அந்த உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

1970 - வியட்நாம் போர் அமெரிக்க அரச தலைவர் ரிட்டச்சட்டால் கிறிஸ்மஸ்ஸுக்கு முன்னதாக மேலும் 40 ஆயிரம் சிப்பாய்கள் வியட்நாமில் இருந்து திரும்பப் பெறப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

1983 - ஜப்பானிய முன்னாள் தலைமை அமைச்சர் தனாகா காகுயி, 2 மில்லியன் அமெரிக்க டொலர் லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

1994 - நாசாவின் மகெல்லன் விண்கலம் வளிமண்டலத்துள் புகுந்தபோது எரிந்தழிந்தது.

1999 - ஜோர்ஜியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது அப்காஷியா.

1992 - எகிப்தில் 5.8 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 510 பேர் வரை உயிரிழந்தனர்.

## நாளை
**13.10.2017**
வெள்ளிக்கிழமை
**புரட்டாதி 27**

திதி: அட்டமி மு.ப. 08.16 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் மு.ப. 11.29 வரை
சுபநேரம்: 06.02–07.32 வரை
ராகுகாலம்: 10.32–12.02 வரை


## பத்தி எழுத்து

# தொடர வேண்டும் தேசிய வெற்றிகள்

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் வடக்கு மாகாணத்துக்கு இம்முறை கணிசமான பதக்கங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. மிகச் சிறப்பான பிரதிநிதித்துவத்தை இம்முறை வடக்கு வீரர், வீராங்கனைகள் வழங்கியுள்ளனர். கொண்டாடப்பட வேண்டியவர்களாக வடக்கு வீரர்களும் வீராங்கனைகளும் கொண்டாடப்படத் தக்கவையாக அவர்களின் வெற்றிகளும் அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது. குறிப்பாக, தேசியமட்டக் கபடித் தொடரில் 20 வயது பெண்கள் பிரிவில் அத்தனை பதக்கங்களும் வடக்குக்குக் கிடைத்தன..இதன்படி தங்கப்பதக்கத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், வெள்ளிப் பதக்கத்தை இளவாலை கன்னியர் மடம், வெண்கலப் பதக்கத்தை கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியும் தமதாக்கின. பளுதூக்கல் போட்டியில் பாசையூர் சென். அன்ரனிஸ் மகா வித்தியாலயமும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் தேசிய மட்டத்தில் சம்பியனாகின. இவற்றை விட கடற்கரை கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம், உடற்பயிற்சி ஆகியவற்றிலும் கணிசமான அளவு பதக்கங்கள் கிடைத்தன. ஒட்டுமொத்தத்தில் பெருவிளையாட்டுக்களிலும் உள்ளக விளையாட்டுக்களிலும் வடக்கு மாகாணம் தொடர்பில் நாம் திருப்தி அடையக்கூடிய பெறுபேறுகள் வெளிப்பட்டுக் கொண்டுள்ளன. எனவே இதிலிருந்து வீரர்கள், வீராங்கனைகள் தகுதி அற்றவர்கள் என்றோ அல்லது அவர்களிடத்தில் உடற்தகுதி இல்லை என்றோ சொல்லிவிட முடியாது என்பது வெளிப்படுகிறது.

ஆனால் குறுந்தூர ஓட்டம் உள்ளிட்ட தடகளப் போட்டிகளில் வடக்கு மாகாணம் தேசியத்தில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியதாக இல்லை. தகுதியான வீரர்கள் எம்மிடத்தில் உள்ளனர். அவர்களிடத்தில் சிறந்த உடற்தகுதி (பளுதூக்கல், கால்பந்தாட்டத்தில் தேசியச் சம்பியனாக வருமளவுக்கு உடற்தகுதி) உள்ளது. எனின் அவர்களிடம் இல்லாதது நுட்பங்களே. அது அவர்களின் தவறு இல்லை. அவர்களைப் பயிற்றுவிப்பவர்களினதும் அதிகாரிகளினதும் தவறேயாகும். இந்த நிலைமை சரிசெய்யப்பட வேண்டும். அப்போதுதான் புள்ளிப்பட்டியலில் வடக்கு மாகாணம் மென்மேலும் முன்னேற்றத்தைக் காணமுடியும்.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டப் போட்டிகளில் கிடைக்கும் பதக்கங்கள் பாடசாலையில் இருந்து வீரர்கள் வெளியேறிய பின்னர் திறந்த மட்டப் போட்டிகளில் பெரியளவில் (அனித்தா போன்ற ஒருசிலரைத் தவிர) கிடைப்பதில்லை. எனின் தவறு எங்குள்ளது? நிச்சயம் அது வீரர்கள் வீராங்கனைகளிடத்தில் இல்லை. பாடசாலைகளில் பெற்ற பதக்கங்களை அப்படியே திறந்தமட்டப் போட்டிகளுக்கு மாற்றக்கூடிய திட்டங்களும் கட்டங்களும் எம்மிடத்தில் இல்லை. அதிகாரிகளிடத்தில் ஆளுமை இருந்தால் வீரர்களின் ஆளுமை தக்கவைக்கப்படும்.













# தந்தையுடன் முதல்முறையாக இணையும் கௌதம் கார்த்திக்

நடிகர் கார்த்திக் தனது மகன் கவுதம் கார்த்திக்குடன் இணைந்து புதிய படம் ஒன்றில் நடிக்க உள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தப் படத்தில் நகைச்சுவை நடிகர் சதிஷ், ரெஜினாகேசண்ட்ரா ஆகியோரும் நடிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும், நடிகை வரலட்சுமியும் இந்த படத்தில் புதிதாக இணைந்துள்ளார். தற்போது இந்தப் படத்தின் தலைப்பு வெளியிடப்பட்டுள்ளது. நடிகர் சிவகார்த்திகேயன் தனது கீச்சகப் பக்கத்தில் இதனை வெளியிட்டுள்ளார். இதன்படி கார்த்திக் கவுதம் கார்த்திக் இணைந்து நடிக்கும் இந்தப் படத்திற்கு 'மிஸ்டர் சந்திரமௌலி' எனப் பெயரிட்டுள்ளனர்.

மௌன ராகம் படத்தில் நடிகர் கார்த்திக் பேசிய "மிஸ்டர் சந்திர மௌலி" வசனம் நிச்சயம் எம் அனைவரின் ஞாபகத்திற்கு வந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தற்போது இதனையே படத்தின் தலைப்பாக வைத்துள்ளனர்.

விஷாலை வைத்து 'தீராத விளையாட்டுப் பிள்ளை', 'சமர்', 'நான் சிகப்பு மனிதன்' உள்ளிட்ட படங்களை எடுத்த இயக்குநர் 'திரு' இயக்கும் இந்தப் படத்தை தனன்ஜெயன் கோவிந்த் தயாரிக்கிறார்.






**மேடம்:** உயர்ந்த செயல்களால் நற்பெயர் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்வு உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும்.

**இடபம்:** சிலரது அவசியமற்ற பேச்சு சங்கடம் தரும். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அளவான இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** திறமையை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாகும்.

**கடகம்:** பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற அக்கறையுடன் செயல்பட வேண்டும். சேமிப்புப்பணம் கரைய வாய்ப்புண்டு.

**சிங்கம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய தகுந்த பணவசதி கிடைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கன்னி:** முக்கிய திட்டங்களை பொறுப்புடன் நிறைவேற்றுவது நல்லது. கடனைத் திரும்பப் பெறுவதில் இதமான அணுகுமுறை அவசியம். நண்பர்களால் அனுகூலம் உண்டு.

**துலாம்:** பொறுமையுடன் செயல்படுவது அவசியம். தொழில் சார்ந்த குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** வீண் பேச்சு பேசுபவர்களிடம் இருந்து விலகுவது நல்லது. குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில் வியாபாரத்தில் அளவான இலாபம் கிடைக்கும்.

**தனுசு:** செயல்களை நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். மனதில் நிம்மதியும், பெருமிதமும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**மகரம்:** பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு சிறப்பான முறையில் நிறைவேறும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** பிறரிடம் அதிகம் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவே இலாபம் எதிர்பார்க்கலாம். வீட்டில் கூடுதல் செலவு ஏற்படலாம். மருத்துவச்செலவு ஏற்படலாம்.

**மீனம்:** பணிகளில் பொறுப்புடன் ஈடுபட வேண்டும். தொழில் வியாபாரம் வளர அனுபவசாலியின் ஆலோசனை உதவும். சேமிப்புப் பணம் கரைய வாய்ப்புண்டு.



எமக்கான
தேடலை எம்மால்
மட்டுமே கண்டறிய'
இயலும்.
எமக்கான மாற்றங்களை
'எம்மால் மட்டுமே
விதைக்க இயலும்.



இனிமையான
இதயம் படைத்த
மனிதர்கள்
எல்லோரும் தவறாக
புரிந்துகொள்ளப்
பட்டவர்கள் அல்லது
தவறாக
நடத்தப்பட்டவர்கள்.
**சாப்ளின்**



பல இடங்களில்
வயிறு பட்டினி கிடக்கிறது!
சில இடங்களில்
சோறு பட்டினி கிடக்கிறது!!

## என் தாய்மொழி

வலிக்கையில் : அ, ஆ...
சிரிக்கையில்: இ.ஈ....
காரத்தில் - உ, ஊ....
கோபத்தில் - எ, ஏ...
வெட்கத்தில் - ஐ...
ஆச்சரியத்தில் - ஒ, ஓ...
விக்கலில் -ஃ

## சுடோக்கு
### என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 7 | | | 6 |
| | | | | | | | 2 | 5 |
| 2 | 1 | | | 9 | | | | 8 |
| | | 9 | 4 | | | | | |
| | 4 | | 6 | 7 | 8 | | 5 | |
| | | | | | 1 | 4 | | |
| 7 | | | | 8 | | | 3 | 2 |
| 5 | 3 | | | | | | | |
| 6 | | | 7 | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 9 | 5 | 3 | 8 | 4 | 6 | 1 |
| 8 | 5 | 1 | 6 | 4 | 2 | 3 | 9 | 7 |
| 6 | 4 | 3 | 7 | 9 | 1 | 5 | 8 | 2 |
| 4 | 3 | 5 | 2 | 6 | 9 | 7 | 1 | 8 |
| 9 | 1 | 6 | 8 | 7 | 3 | 2 | 4 | 5 |
| 2 | 8 | 7 | 4 | 1 | 5 | 6 | 3 | 9 |
| 3 | 7 | 8 | 9 | 2 | 4 | 1 | 5 | 6 |
| 1 | 9 | 2 | 3 | 5 | 6 | 8 | 7 | 4 |
| 5 | 6 | 4 | 1 | 8 | 7 | 9 | 2 | 3 |

# பொதுப் பணி



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனது நாட்டு மக்கள், நாட்டின் பொதுப் பணி எதனிலும் ஈடுபட மாட்டார்கள். ஆனால் எதற்கெடுத்தாலும் அரசனை அல்லது அவனது அரசைக் குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த மக்களை எப்படித் திருத்துவது என அரசன் யோசித்தான். ஒருநாள் அனைவரும் நடமாடும் கடைவீதியில் இரவோடு இரவாக ஒரு பெரிய பாறாங் கல்லை தன் சேவர்களைக் கொண்டு வைப்பித்தான். அந்தக் கல் ஒருவரே தூக்கிச் செல்லக் கூடிய பருமன் உடையது.

கல் அங்கே வைக்கப்பட்ட மறுநாள் காலை அந்த வழியாக வந்த பலரும் நடுவீதியில் கிடந்த அந்தக் கல்லைக் கண்டும் காணாததுமாக தாண்டிச் சென்றார்கள். "என்ன கொடுமை இது. நடு வீதியில் இவ்வளவு பெரிய கல் கிடக்கிறதே. எந்த முட்டாள் இதனை இங்கே வைத்து விட்டுச் சென்றான். இதை எடுத்து அப்புறப்படுத்த வேண்டும் என்று இந்த அரசனுக்குக் கூடத் தெரியவில்லையே". "அரசுக்கும் கூடவா தெரியவில்லை? இப்படி இருந்தால் நாடு எப்படி முன்னேறும்?" என்று முணுமுணுத்துக் கொண்டு சென்றார்கள். இப்படியே ஒரு வாரம் கடந்து போயிற்று அந்தக் கல் மட்டும் அகற்றப்படலாம் அந்த இடத்திலேயே இருந்தது.

அரசன் அந்த நகரத்து மக்களை எல்லாம் கடை வீதியில் கூடச் சொன்னான். என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய மக்களும் அங்கே கூடினார்கள்.

அரசன் அங்கு நின்ற ஒரு சேவகனைப் பார்த்து நடு வீதியில் கிடக்கும் அந்தக் கல்லைத் தூக்கி வீதி ஓரமாகப் போடு" என்று கட்டளையிட்டான்.

அப்படியே அந்த சேவகன் அந்தக் கல்லைத் தூக்கினான். அதனடியில் ஒரு பெரிய பெட்டி ஒன்று இருந்தது. அந்தப் பெட்டியின் மேற்பகுதியில், "இந்தக் கல்லை எடுத்து ஓரமாகப் போடுபவர்களுக்கு இந்தப் பெட்டிக்குள் உள்ள ஆயிரம் பொற்காசுகளும் பரிசு" என எழுதப்பட்டிருந்தது. அங்கிருந்த அனைவரும் ஆயிரம் பொற்காசுகளை இழந்து விட்டோமே" என்று வருந்தினார்கள்.

அப்போது அரசன் "எதற்கெடுத்தாலும் அரசைக் குறை கூறுகிறீர்களே! நாட்டு மக்களுக்கும் பொதுப் பணி என்கிற சேவை மனப்பான்மை இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் நாடு முன்னேறும்" என்றார்.

தங்களுடைய சோம்பேறித் தனத்துக்காக வெட்கப்பட்ட மக்கள் "இனி நாங்கள் அரசைக் குறை சொல்லமாட்டோம். எங்களால் முடிந்தவற்றை நாங்களே செய்வோம்" என்றனர்.

எம்மால் முடிந்தவற்றை நாமே செய்து விடவேண்டும். பிறரை எதிர்பார்த்து காலம் கடத்தக் கூடாது. அப்படிக் காலம் கடக்கும் போது நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போய்விடும்.






# தினமும் கற்றல் அவசியம்

1. நாளைக்கு நாளைக்கு என்று பாடங்களை சேர்த்து வைக்காதீர்கள்.
2. அன்றைய பாடங்களை அன்றே முழுமையாகப் படிக்கா விடினும் திரும்பவும் ஒரு தடவை வாசித்தாவது பாருங்கள்.
3. பரீட்சை வரப் போகிறதே என்று பயப்படாமல், பயம் எதனால் வருகிறது படிக்காததினால்தான் என்பதைப் புரிந்து கொண்டு படிக்க ஆரம்பிக்கலாம்.
4. எளிதான பாடங்களை விரைவாக முடித்து விட்டு கடினமானவற்றை நிதானமாகப் படிக்க ஆரம்பியுங்கள். முதலிலேயே கடினமானவற்றை படிக்க ஆரம்பித்தால் ஐயோ இது தெரியல்லையே அது புரியல்லையே என்ற பதற்றம் ஏற்படும்.
6. படிக்க ஆரம்பிக்கும் போது ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொள்ளுங்கள் முந்திய தடவை 60 புள்ளி பெற்றிருந்தால் இந்தத் தடவை 70 புள்ளி பெற வேண்டும்என்று நிர்ணயித்துக் கொள்ளலாம். கடந்த தடவை சித்தியடையாதிருந்தால் இந்தத் தடவை சித்தியடைய வேண்டும்என்று ஒரு குறைந்த பட்ச இலக்கை நிர்ணயித்துக் கொள்ளலாம்.
7. பரீட்சை நாள்களில் விளையாட்டு. இப்படி பொழுது போக்கு விடயங்களை அறவே தவிர்க்க வேண்டிய அவசியமில்லை. இடையிடையே கொஞ்சம் மனதை சுதந்திரமாக வைத்துக் கொள்ளலாம்.
8. பரீட்சைக்கு முந்தியநாள் அதிக நேரம் கண் விழித்து படித்து தூங்காதிருப்பது கண்டிப்பாகக் கூடாது.
9. பரீட்சைக்கு கிளம்புவதற்கு முன்தினமே தேவையானவற்றை எடுத்து வைத்துக் கொண்டால் காலைநேர ஆர்ப்பாட்டத்தைத் தவிர்க்கலாம்.
10. பரீட்சைக்குச் செல்லும் முன் அது படிச்சியா? இது படிச்சியா? என்று கேட்பவர்கள் இருக்குமிடத்திலிருந்து விலகி நிற்கவும். அது பரீட்சை எழுதுபவரின் தன்னம்பிக்கையை அசைத்துவிடும். பரீட்சை எழுதி வந்தவுடன் அதற்கு விடை என்ன?இதற்கு விடை என்ன என கேட்டு அவை தவறாக எழுதப்பட்டிருக்குமாயின் வருந்த வேண்டாம். ஏனெனில் இந்த வருத்தம் அடுத்த பாடப் பரீட்சைக்கு படிக்கும் உற்சாகத்தைக் கெடுத்து விடும். வேண்டுமானால் எல்லாப் பாடப் பரீட்சைகளும் முடிவடைந்த பின் ஒவ்வொரு பாட வினாக்களின் விடைகளையும் சரிபார்க்கலாம்.


## புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்



## பரீட்சைக்கு நேரமாகி விட்டது

**அம்மா அப்பாவுக்கு**

1. சும்மா சும்மா படி படி என்று சொல்லாதீர்கள்.
2. பரீட்சை என்பது ஒரு பயப்படும் விடயம் என மனதில் பதிய வைக்காதீர்கள்.
3. பரீட்சைக்காகப் படிப்பது என்றில்லாமல் விடயங்களைத் தெரிந்து கொள்வதற்காக புரிந்து கொள்வதற்காகப் படிக்கத் தூண்டுங்கள்.
4. அவனை மாதிரிப்படி இவளைப் போல் படி என்று ஒரு போதும் சொல்லாதீர்கள்.
5. முதலிடத்தை விட்டுவிடாதே என்று பயமுறுத்தாதீர்கள்.
6. "இன்னும் 10 நாள்களில் பரீட்சை வருகிறது. இப்படி நீ விளையாடித் திரிகிறாயே" என்று பரீட்சை பற்றிய அச்சத்தை உண்டாக்காதீர்கள்.
7. பரீட்சைக்கு முந்திய நாள் அதிக நேரம் படிக்க வைப்பதும் அதிகாலையில் எழுப்பி விடுவதும் கண்டிப்பாகக் கூடாது.
8. பரீட்சைக்குப் புறப்படும் பொழுது போருக்கு செல்வதுபோல ஆர்ப்பாட்டம் பண்ணாதீர்கள்.
9. பரீட்சை எழுதி வந்தவுடன், இது எப்படி எழுதினாய் அது எப்படி எழுதினாய். இதை யேன் எழுதாது விட்டாய் என கேட்டு கஷ்டப்படுத்த வேண்டாம்.
10. இவ்வளவு நாள்கள் படித்தவை நினைவிலிருக்கிறதா? என்று அறிவதற்கு அல்ல பரீட்சை. படித்தது புரிந்திருக்கிறதா என அறிந்து கொள்ளத்தான் என்பதைப் பிள்ளைக்கு உணர்த்துங்கள்.



# நிலாவில் நீல் ஆம்ஸ்ரோங்

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி அப்பல்லோ II என்ற விண்கலம் சந்திரனில் தரை இறங்கியது. அதிலிருந்து இறங்கிய நீல் ஆம்ஸ்ரோங் சந்திர மண்ணில் கால் பதித்த முதல் மனிதனாகப் பிரசித்தி பெற்றார். இந்த நிகழ்வின் மூலம் சந்திரனில் தரை இறங்கிய முதலாவது விண்வெளி வீரர் என்ற பெருமைக்குள் அவரின் பெயர் உலகறியச் செய்யப்பட்டது. இவரைத் தொடர்ந்து அவரது சக விண்வெளி விஞ்ஞானியான புஸ் ஆல்ட்றின் சந்திரத் தரையில் இறங்கி அவருடன் இணைந்து கொண்டார். இருவரும் நடந்து சந்திரனின் ஈர்ப்புச் சக்தியின் வலிமையை அளந்தனர். சந்திரனின் பாறை மாதிரிகளையும் தரையின் அமைப்பையும் படம்பிடித்துக் கொண்டனர். அவர்கள் மூன்று மணி நேரம் நிலாவில் நடந்தனர். இவர்கள் நிலாவில் உலவிய காட்சியை பூமியில் உள்ள மக்கள் தொலைக்காட்சி ஊடாகப் பார்த்தும் வானொலி மூலம் கேட்டும் மகிழ்ந்தனர். "என்னுடைய சிறிய காலடி, மனிதகுலத்துக்கு ஒரு மாபெரும் சவலாகும்" என நீல் ஆம்ஸ்ரோங் தனது நிலாப் பயணம் குறித்துக் கூறிக் களித்தார்.

இவர் தனது 30ஆவது வயதில் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி பெற்றார். அப்பல்லோ விண்கலங்கள் தயாரிக்கப்பட்டு விண்வெளி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையிலே அப்பல்லோ ...விண்கலத்தின் மூலம் இவர் சந்திரனுக்குப் பயணமானார். முதன்முதலாக சந்திரனில் கால்பதித்தவர் என்ற பெருமை அவருக்கு கிடைத்தது. 2012ஆம் ஆண்டு ஒக்ஸ்ட் மாதம் ஐந்தாம் திகதி அவர் தனது 82ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய பின்னர் ஓகஸ்ட் 25ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.


# சார்லி சாப்ளின்



விருந்து ஒன்றில் உலகப் புகழ்பெற்ற நகைச் சுவை நடிகர் சார்லி சாப்ளின், உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டைனைச் சந்தித்தார். ஐன்ஸ்டைன் கண்டு பிடித்த ஒப்புமைத் தத்துவத்தைப் பற்றி அவரிடம் விவாதிக்க விரும்புவதாக சாப்ளின் தெரிவித்தார். அதற்கு இது நேரமுமல்ல, இடமுமல்ல என்று ஐன்ஸ்டைன் அவரிடம் விளக்கிச் சொன்னார். "இதோ பாருங்கள் சாப்ளின் நீங்கள் மிகச் சிறந்த நடிகர்தான். நான் இப்போது உங்களுடைய நடிப்பை ரசிக்க விரும்புவதாகச் சொல்லி உங்களை நடிக்கச் சொன்னால் உங்களால் நடிக்க முடியாது. இல்லையா?" என்றார். சார்லின் சாப்ளின் அதற்குப் பின்பு அதைப் பற்றி எதுவும் பேசாமல் வேறு கணித விடயங்களைப் பற்றி கையையும் காலையும் ஆட்டி சுவாரஸ்யமாக எதை எதையோ ஐன்ஸ்டைனிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஐன்ஸ்டைன் சோர்வடையும் வரையில் சாப்ளின் பேசிக்கொண்டே இருந்தார்.

மறுநாள் ஐன்ஸ்டைனுக்கு சாப்ளின் தன்னுடைய போட்டோ ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதில் கீழ்க் கண்ட குறிப்பு காணப்பட்டது" மிகப் பெரிய கணிதமேதைக்கு என் வணக்கங்கள் நேற்று என்னுடைய நடிப்பை ரசித்திருப்பீர்கள் நம்புகிறேன்" என்று எழுதப் பட்டிருந்தது.

# கால்களுக்கான உடற்பயிற்சி



இன்றைய கால கட்டத்தில் உடல் உழைப்பு இன்மை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் கால் மற்றும் மூட்டு வலியால் அவதிப்படுகின்றனர். கால் வலியால் அவதிபடுபவர்களுக்கு எளிய உடற்பயிற்சிகள் உள்ளன. ஆறு அங்குல உயரமுள்ள சதுரமான ஒரு பலகையின் மேல் இரு கால்களின் முன் பாதங்களை ஊன்றி, குதிக்கால்களைத் தரையில் படிய வைத்துக்கொள்ளுங்கள். முழங்கால்களை மடக்காமல் விறைப்பாக வைத்துக் கொள்ளுங்கள் . கைகளை உயரத் தூக்கி ஏதாவது ஒன்றை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு கால்களை விறைப்பாக வைத்து (மடக்காமல்) குதிக் கால்களை மட்டும் பலகைக்கு மேல் வருமாறு உயர்த்த வேண்டும். முன்பிருந்த நிலைக்கு அதாவது, குதிக் காலை தரைமட்டத்திற்கு தாழ்த்த வேண்டும்.

குதிகால்களை உயர்த்தும் பொழுது சுவாசத்தை உள்ளுக்குள் இழுக்க வேண்டும் தாழ்த்தும் பொழுது சுவாசத்தை வெளியே விட்டு கெண்டைத் தசைகள் சிறிது களைப்பு அடையும் வரை செய்தல் வேண்டும். இந்தப் பயிற்சி முடிந்ததும் ஒரு காலை மட்டும் முன்பு சொன்னது போல் பலகையில் நுனிக் காலை (முன்பாகம்) ஊன்றிக் கொண்டு மற்றொரு காலை தரையில் படாமல் உயர்த்திக் கொள்ள வேண்டும். பலகையில் ஊன்றிய காலை மட்டும் குதிக் காலை உயர்த்தி பின்பு தரை மட்டத்திற்கு தாழ்த்த வேண்டும். பின்பு காலை மாற்றிச் செய்ய வேண்டும் . இந்த இரண்டு பயிற்சியாலும் கெண்டைக் கால்கள் உருண்டு திரண்டு அழகாக மாறும். கால் வலி நீங்கி கால்கள் பலம் பெறும்.

## வேலையாள்கள் தேவை

ரயர் கடைக்கு வேலையாள்கள் தேவை.
(சம்பளம் பேசி தீர்க்கப்படும்)
**வசந்ததவம் ரயர்கடை**
K.K.S. **வீதி. யாழ்ப்பாணம்.** - 077 222 8312

## விற்பனைக்கு

கொக்குவில் கொலிச்லேனில் 5 பரப்பு காணியுடன் வீடும் கொக்குவில் பிரம்படி லேனில் ஒரு பரப்பு காணியுடன் புதிய வீடும் விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 723 2535**

## கண்ணீர் அஞ்சலி



பெருங்குளம் சந்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் திருமதி**
**அருந்தவநாயகி நமசிவாயம்**

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்புத் தங்கை - தையல்நாயகி,**
**மைத்துனர் - சிவசோதி**
**பெறாமக்கள் - சுதர்சினி (சுவிஸ்), சிவசங்கர் (சுவிஸ்), சிவதர்சினி, சுபாஜினி, சிவவதனி (மீசாலை), மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள ,பழகவிரும்பும் ஆண்,பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை.மேலும் சிட்டை எழுதுனர் உடன் தேவை.(இரு பாலாரும் விரும்பத்தக்கது.)

**தொடர்புகளுக்கு.021 222 5464, 071 013 6284**

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி(ராசு) செல்வரட்ணம்

சண்முகம் வீதி,சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் "உமா அகம்" வதிரி மேற்கு,வதிரி யை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி செல்வரட்ணம் · 10.10.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். **தகவல்: குடும்பத்தினர்.**
**077 220 8260**

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் **சைமன் கமல்ராஜ்** அவர்களின் அன்புத் தாயார்



### எட்ரூட் அம்மா

08.10.2017 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், நெடுந்தீவு.**

# SLIM
Sri Lanka Institute of Marketing
@
JAFFNA



தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான மூன்று மாதகால கற்கை நெறிகள்

Preliminary Certificate in Marketing (PCM)
Marketing in Tamil (MIT)



New Batch Starts on:
**14.10.2017**
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

தொடர்புகளுக்கு:
**IIS CITY CAMPUS**
#200, சிவன் பண்ணை வீதி
யாழ்ப்பாணம்
021 222 8060
**071 777 3555**

## இலங்கை மின்சார சபை
## உத்துறு ஜனனி மின்னிலைய வளாகத்தினை சுத்திகரிப்புக்கான சேவை சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள்

இலங்கை மின்சார சபை உத்துறு ஜனனி மின்னிலையத்திற்கு சுத்திகரிப்பு சேவைகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பப்படிவம் மற்றும் விலை மனு ஆவணங்களை 31.10.2017 பி.ப. 3.00 மணிவரை பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம் என்னும் முகவரியில் அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திர பெறுமதி - ரூபா. 3,000.00
02. கேள்விப்பத்திர பிணை வைப்பு - ரூபா. 50,000.00

கேள்விப்பத்திரங்கள் 02.11.2017, அன்று பி.ப.2.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம் என்னும் முகவரியில் மனுதாரர்களின் அல்லது மனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
முறையாக பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், உத்துறு ஜனனி மின்னிலையம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்பலாம். அல்லது மேற்படி அலுவலக முகவரியில் உள்ள விலைமனுப் பெட்டியில் (Tender Box) இல் நேரடியாக இடலாம்.

**பிரதம பொறியியலாளர் அலுவலகம்,**
**உத்துறு ஜனனி மின்னிலையம்,**
**இலங்கை மின்சார சபை, சுன்னாகம். 40075**

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தி இராஜேந்திரம் (ராகினி)



**தாய் மடியில்** 02.11.1960
**இறைவன் மடியில்** 10.10.2017

யாழ். வடலியடைப்பு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி சாசன் பேர்க்(Sassenberg)ஐ வதிவிடமாகவும் கொண்ட வசந்தி என்று அன்புடன் அழைக்கப்படும் திருமதி ராகினி இராஜேந்திரம் 10.10.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கோபாலசிங்கம் தவனேஸ்வரி (ராணி) தம்பதியரின் அன்பு மகளும் திரு. திருமதி இராஜேந்திரம் அவர்களின் அன்பு மருமகளும் பவா(இராஜேந்திரம்) இன் அருமை மனைவியும் யாகுலன் பிரியந்தன், தளிர்னா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரஞ்சினி (பாப்பா - இலங்கை), சாந்தினி (சிவா - ஜேர்மன்), மாலினி (மாலா -சுவீடன்), சிறி (நோர்வே), திலீபன் (சுவீடன்), ரமேஷ்(சின்னக்கிளி -ஜேர்மன்) ஆகியோரின் ஆசைச் சகோதரியும் செல்லா(பரீஸ்) காலஞ்சென்ற பாலா (கொலன்ட்) மற்றும் பாபு (பரீஸ்), பவி (லண்டன்), பேபி(கனடா), கண்ணன் (கனடா), ரமணன் (பரீஸ்), நந்தா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2017) வியாழக்கிழமை 9 மணியளவில் Greffener Strebe 2, 48361 Beelen என்னும் இடத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**திருமதி சிவானந்தன் றஞ்சினி (பாப்பா)**
**சி.அனுசாந் (பெறா மகன்)**
**46/1, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 47 ஆம் நாள் நினைவஞ்சலி



**வையகத்தில்** 31 . 10 . 1997
**வானகத்தில்** 28 . 08 . 2017

## அமரர் தேவகுமார் தனுரதன் (முருகா)

**எம் ஆருயிர் தனுக்குட்டி....** உன்னை நீ மறந்ததனால்
எம்மை நாமே தொலைத்தோமடா
கொள்ளை இன்பம் போனதடா
எங்கள் வீடும் இருண்டதடா
எம்மை ஆற்ற யாரும்மில்லை
இதயம் துடிக்கிறது மீண்டும் இங்கு
ஓடோடி வந்திடையா.

(அப்பா, அம்மா, அக்கா, அண்ணா)

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் சரஸ்வதி மண்டப(ராஜா கிறீம் ஹவுஸ்)த்தில் நாளை(13.10.2017) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் இந்த நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.**

அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில். குடும்பத்தினர்.

# நிலத்தடி நீர்



## பாதுகாக்கப்பட வேண்டிய வாழ்வின் ஆதார மூலம்

உலக அளவில் நிலத்தடி நீர் அதி விரைவாக வற்றிவருகிறது. வெவ்வேறு நாடுகளில் பரந்து விரிந்துள்ள பகுதிகளில் மிகப் பெரியவை எனக் குறிப்பிடக்கூடிய 37 நிலத்தடிநீர் இருப்புகள், அடையாளம் காணப்பட்டுள்ளன. மிகப் பெரிய கடல் என்று கற்பனை செய்யக்கூடிய அளவுக்கு நீர்வளம் பெற் றிருந்தது. இவற்றில் சரிபாதிக்கும் மேலானவை வேகமாக உறிஞ்சப்பட்டதால் நீர்க் கொள்ளளவில் மிக மோசமான அளவு குறைந்துவிட்டன. மழை நீர் சேகரிப்புப் போன்ற திட்டங்களை இனிவரும் காலங்களில் 100 வீதம் கடைப்பிடித்தால்கூட இந்த நிலத்தடிநீர்த்தேக்கங்கள் இனி நிரம்பலடை வது என்பது சந்தேகம்தான் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவன மான நாசா, 'கிரேஸ்' என்ற செயற்கைக்கோள் கட்டமைப்பைப் பயன்படுத்தி புவியைப் புகைப்படங்கள் எடுத்ததுடன் பல்வேறு நீர்ப்பயன்பாட்டுத் தரவுகளையும் பெற்று ஆராய்ந்து இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது. இது உலக மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து நாடுகளுக்குமான எச்சரிக்கை ஒலியே.

உலகின் 37 மிகப் பெரிய நிலத்தடிநீர் இருப்புத் தேக்கங்களில் அண்ணளவாக 21 வரையானவை இந்தியா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருக்கின்றன. இழந்த நீரைப் பெற மீண்டும் தங்களைத் தாங்களே வலுப்படுத்திக்கொள்ளும் திறனை இந்த நிலத்தடி நீர்த்தேக்கங்கள் இழந்துவிட்டன. இவற்றிலிருந்து 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரையில் எடுக்கப்பட்ட தண்ணீரின் அளவைக் கொண்டு நாசா இந்த முடிவுக்கு வந்திருக்கிறது.

"13 நிலத்தடி நீர்த்தேக்கங்கள் மிக மோசமான நிலைக்குச் சென்றுவிட்டன. நிலத்தடி நீர் இருப்பு நிலமை மிகவும் மோசமாகிவிட்டது" என்று கலிபோர்னியாவில் உள்ள நாசாவின் ஆய்வுக்கூட முதன்மை ஆய்வாளர் ஜே பேமி கிளிட்டிபுள்ளிவிவரங்களை மேற்கோள்காட்டி எச்சரிக்கிறார்.

### நிலத்தடி நீரின் பங்கு

உலக அளவில் மக்கள் பயன்படுத்தும் தண்ணீரில் 35 வீதமானவை நிலத்தடியிலிருந்து கிடைப்பவை. வறட்சிக் காலங்களில் அதிக ஆழத்துக்குத் துளையிட்டு தண்ணீரை மென்மேலும் உறிஞ்சி எடுக்கின்றனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஆற்று நீரும், நிலத்துக்கு மேலிருந்த நீர்நிலைகளும் அடியோடு வற்றிவிட்டதால் இப்போது நிலத்தடிநீரை இராட்சத ஜெட்டுகள் வைத்து உறிஞ்சி எடுக்கின்றனர் என்ற தகவல் கூறப்படுகிறது. கலிபோர்னியாவில் இப்போது பயன்படுத்தப்படும் நீரில் 60 வீதமானவை நிலத்தடிநீர்தான். சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பயன்பாடு அதிகபட்சம் 40 வீதம் ஆகத்தான் இருந்தது.

நிலத்தடிநீர்ப் பயன்பாடு மிக அதிகமாக இருப்பது மக்கள் தொகை மிகுந்த அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் தான். இந்தியாவின் வட மேற்கு எல்லைப் பகுதிகளிலும் பாகிஸ்தானிலும், வடக்கு ஆபிரிக்காவிலும் இந்த நிலை காணப்படுகிறது. இங்கெல்லாம் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டால் மாற்று வழியில் நீரை வழங்க வேறு நீர் ஆதாரங்களே கிடையாது. இங்கு அடியோடு தண்ணீர் வற்றிவிட்டால் சமூக அமைதி குலைந்துவிடும். அதனால் நிச்சயமற்ற நிலை ஏற்படும்.

நிலத்தடி நீர் அளவு குறைந்ததால் இப் பகுதிகளில் புவிஈர்ப்பு விசையிலும் குறிப்பிடத்தக்களவான மாற்றங்கள் ஏற்படுவதை நாசாவின் செயற்கைக்கோள்கள் பதிவுசெய்து அனுப்பியிருக்கின்றன. நிலத்தடி நீர்மட்டம் குறைவதால் ஏற்படக்கூடிய விளைவுகளில் இதுவரை இடம்பெற்றிராத முக்கியமான நிகழ்வாக இது பதிவாகியுள்ளது. "நாம் பேசிக்கொண்டிருப்பது வெறும் தண்ணீர் பற்றாக்குறைப் பிரச்சினை மட்டுமல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நிலத்தடிநீர் நிரம்பிய பகுதிகளில் புவியின் அழுத்தம் அதிகமாகவும் நீர் குறைந்த பகுதிகளில் சற்றே குறைவாகவும் இவை பதிவாகின்றன.

புவியின் மிகப் பெரிய நீர்த்தேக்கங்கள் காலப்போக்கில் எப்படி மாற்றம் அடைகின்றன என்பதை ஆய்வுசெய்ய எமக்குக் கிடைத்துள்ள முதல் வாய்ப்பு இது" என்று ஓரிகான் மாகாண பல்கலைக்கழக நீரியியல் துறை ஆராய்ச்சியாளர் 'கார்டன் கிராண்ட்' கூறுகிறார்.

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட தண்ணீர்த் திரட்சியால் உருவானவை இந்த நிலத்தடி நீர்த்தேக்கங்கள். இப்பகுதியில் அடர் மழை பெய்தாலும் அத்தனை நீரும் அப்படியே பூமிக்குள் இறங்கி இழப்பைச் சரி செய்துவிடுவதில்லை. மிகக் குறைவான அளவுக்கே நீர் உள்ளே கசிந்து இறங்குகிறது. எஞ்சியவை மேற்பரப்பில் தேங்கி பிறகு வழிந்தோடியோ அல்லது ஆவியாகியோ காணாமல் போகிறது. பனி உருகும்போதும்,மழை பெய்யும்போதும் கிடைக்கும் நீரில் மிகச் சிறிதள வானவை தான் இந்த நிலத்தடி நீர்த்தேக்கங்களில் போய்ச் சேர்கின்றன என்ற விடயங்களும் கண்டறியப்பட்டுள்ளன.

"தண்ணீர் வேண்டும் எனில் தரைக்கடியில் துளையிட்டு தண்ணீரை உறிஞ்சுவது உலகின் எல்லாப் பகுதியிலும் இப்போது வழக்கமாகிவிட்டது. ஆனால், காலவரையறை இன்றி தண்ணீர் கிடைத்துக்கொண்டே இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை" என்று 'பேமிகிளிட்டி' சுட்டிக்காட்டுகிறார்.

### நிலத்தடி நீர்த்தேக்க ஆயுள்

உலகின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கும் நிலத்தடி நீர்த்தேக்கங்களின் ஆயுளானது அதன் மீது இருக்கும் மக்கள் தொகை, அவர்களுடைய தண்ணீர்ப் பழக்கம், தண்ணீரை எடுக்க அவர்கள் கையாளும் தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகிறது.

உதாரணமாக ஆஸ்திரேலியாவின் 'கேனிங்' ஆற்றுப்படுக்கையானது உலகிலேயே நீர்வளத்தை இழப்பதில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. அதேசமயம் 'ஆர்ட்டீஷியன்' வடிநிலத்தில் உள்ள நிலத்தடி நீர்த்தேக்கம் தண்ணீர் வளத்துடன் நன்றாக இருக்கிறது.

சுரங்கத் தொழில் நடைபெறும் இடங்களில் குறிப்பாக, தங்கம், இரும்புத்தாதுக் கனிமங்கள் மற்றும் பெற்றோல், இயற்கை எரிவாயு போன்றவற்றின் அகழ்வுப் பணியின் போதும் அதிக தண்ணீர் செலவிடப்படுகிறது.

உலகிலேயே மிகவும் அதிகமாக நிலத்தடித் தண்ணீர் எடுக்கப்படும் பிராந்தியமாக அரேபியப் பகுதி காணப்படுகிறது. இங்கு மட்டுமே 6 கோடி மக்கள் நிலத்தடிநீரையே தான் பெரிதும் நம்பியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொதுவாக இருக்கும் சிந்து சமவெளி, லிபியா, நைஜர் ஆகியவற்றுக்கான 'முர்சுக் ஜாடோ' வடிநிலமும் அப்படிப்பட்டவைதான் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அட்லான்டிக் கடலோரத்திலும்,வளைகுடா கடற்கரையோரச் சமவெளியிலும் கூட நிலத்தடிநீர் இழப்பு கணிசமாகிவிட்டது. இது தென்கிழக்கு கடலோரப் பகுதி தொடக்கம் புளோரிடா வரை நீண்டு செல்கிறது. அதே வேளையில் இந்தநாட்டின் நடுப்பகுதியில் உள்ள மூன்று பெரிய நிலத்தடி நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு நல்ல நிலையில் உள்ளது.

அருட் சித்தரின் அற்புதவைத்தியம்
சித்து மூலம் மூலிகைகளின் துணை கொண்டு மனநோய் மற்றும் நரம்பியல் தொடர்பான நோய்களை முற்றாகக் குணப்படுத்தி வருகின்றார்.
தொடர்புகளுக்கு : 077 923 5554

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2941 திகதி 11.10.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 39 42 49 67 E
போனஸ் இல.: 06
சனிக் கிழமை ஜக்பொட்: 45,953,300/=
தொ.பே : 011 4624824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள் 14.10.2017 ஆம் திகதி சனிக் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

Galaxy Star
வெற்றி வாரம் 202 திகதி 11.10.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்: 03 01 15 36 58
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 3, 015, 372/-
2017.10.15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## வட இலங்கை சுதேச மருத்துவசபை
## விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்கும் அறிவித்தல்

28.09.2017 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியாகிய வடஇலங்கை சுதேச மருத்துவ சபையின் விளம்பரம் தொடர்பாக தவிர்க்கமுடியாத காரணங்களினால் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2017**

என்ற விளம்பரத்தில் விண்ணப்ப முடிவு திகதி 21.10.2017 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். வழமைபோல அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் தலைவர், வடஇலங்கை சுதேச மருத்துவ சபை லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, மின்சார நிலைய வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு விளம்பரத்தில் குறிப்பிட்டபடி விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்/செயலாளர்**
**வடஇலங்கை சுதேச மருத்துச சபை,**
**லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவ கல்லூரி,**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

### சவிரிமுத்து பீற்றர் மரியநாயகம்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் பாகிஸ்தான், அமெரிக்காவை வசிப்பிடமாகவும் தற்போது ஜா-எலவை வாழ்விடமாகவும் கொண்ட சவிரிமுத்து பீற்றர் மரியநாயகம் 09.10.2017 அன்று இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானசவிரிமுத்து-அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும் சோமா மரியநாயகத்தின் அன்புக் கணவரும் மகில்மொரிஸ் இன் பாசமிகு தந்தையும் செகாராவின் மாமனும் சகிலின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற மேரியோசேப்பின் மற்றும் மேரி றீற்றா, மேரி மாகிறேட் அலிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராஜ்குமார், ஜெய்சி, ரவிக்குமார், யூட்சி, ஜொய்வின், றஞ்சனி, ரமேஸ், ராஜன், ரூபன், யதுநந்தனன் லாவண்யா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளையில் உள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (12.10.2017) வியாழக்கிழமை பி.ப.3 மணியளவில் இறுதி நிகழ்வுகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 713 6607

**தகவல்: மனைவி, மகன், சகோதரிகள்**

## மரண அறிவித்தல்

*அன்னை மடியில்*
*15 . 06 . 1924*



*ஆண்டவன் அடியில்*
*11 . 10 . 2017*

### சபாநாயகம் நல்லையா

மண்கும்பான் கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சபாநாயகம் நல்லையா நேற்று (11.10.2017) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாநாயகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னம்மா (தங்கம்) அவர்களின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2017) வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# முழாசி எரிகின்றது காக்கைதீவு! குப்பை மேட்டால் மக்கள் அவதி

யாழ்ப்பாணத்தின் கழிவுகள் கொட்டப்படும் நகருக்கு அருகில் உள்ள காக்கைதீவு குப்பை மேடு கடந்த மூன்று தினங்களாக முழாசி எரிகின்றது. பற்றியெரியும் தீயால் அந்தப் பகுதியெங்கும் பெரும் புகைமண்டலம் சூழ்ந்துள்ளது. இதனால் காக்கைதீவு பொன்னாலை வீதியில் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குச் சிரமப்படவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைக் கழிவு யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை வீதியில் உள்ள காக்கை தீவிலேயே கொட்டப்படுகிறது. அந்தக் குப்பை மேடு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கொழுந்துவிட்டு எரிகின்றது.

சுவாலைகள் பல கிலோ மீற்றர் துரத்திற்குமப்பால் தெரியும் வகையில் தீ முழாசி எரிவதுடன் அங்கே கொட்டப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள் தீயில் எரிந்து அவற்றில் இருந்து வெளிக்கிளம்பும் புகையானது மக்கள் சுவாசிக்க முடியாத அளவுக்கு அந்தப் பகுதி முழுவதையும் மாசுபடுத்தியுள்ளது.

புகை மண்டலத்துக்கு நடுவே இரவு நேரத்தில் வாகனங்களில் பயணிக்கவே முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தீயைக் கட்டுப்படுத்துவதற்கு மாநகரசபையினர் கடந்த மூன்று நாட்களாகப் பல தடவைகள் முயன்றனர் என்ற போதும் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் கூறப்படுகின்றது.

காக்கை தீவில் குப்பைகள் கொட்டப்படக்கூடாது எனக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுத்திருந்ததுடன் நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டிருந்தது. ஆனால் நகரக் கழிவுகளைக் கொட்டுவதற்குப் பொருத்தமான வேறு இடம் இல்லை என்பதால் தொடர்ந்தும் அங்கேயே கழிவுகள் கொட்டப்படுகின்றன.



காக்கை தீவில் அளவுக்கதிகமான வாயு வெளிக்கிளம்புவதால் அது எப்போது வேண்டுமானாலும் தீப்பற்றி எரியக்கூடிய அபாயம் இருப்பதாக ஏற்கனவே எச்சரிக்கப்பட்டும் இருந்தது. (உ-101)

## எல்லோரும்...

தமிழ் அரசியல் கைதிகளாகி நாங்கள் அரசிடம் எமது வழக்குகள் தொடர்பாக சில கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றோம். 2009ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தொடர்ச்சியாக 4 வருடங்கள் எந்தவித வழக்கு விசாரணைகளுமின்றி கொழும்பு 6ஆம் மாடி, பூசா போன்ற சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம்.

2013ஆம் ஆண்டு எமக்கெதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு 2017ஆம் ஆண்டு வரை 58 தடவைகள் வழக்குக்கு அழைக்கப்பட்டிருந்தோம். வவுனியா மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எமது வழக்கை சாட்சிகளுக்கு உயிராபத்து இருப்பதாகக் கூறி அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றியுள்ளனர்.

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் எமது வழக்குத் தொடரப்படுமாயின் மொழிப் பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடுவதோடு அங்கு எமது தரப்பில் ஒரு சட்டத்தரணியையும் நியமிக்க முடியாது. இவ்வாறான பல பிரச்சினைகளுக்கும் மத்தியில் எமது வழக்கை மாற்றியிருப்பது எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநீதியாகவே நாம் கருதுகின்றோம்.

அநீதியை எதிர்த்து எமது வழக்கை தொடர்ந்தும் வவுனியா நீதிமன்றத்திலேயே நடத்துமாறும் துரிதமாக வழக்குக்கு முடிவைப் பெற்றுத்தருமாறு கோரியும் நாம் இன்று (நேற்று) 17ஆவது நாளாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

எமது உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு ஆதரவாகப் பல கவனவீர்ப்பு போராட்டங்களை நடத்திய சகல பொது அமைப்புக்களும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். நாளை வெள்ளிக்கிழமை வடக்கில் முன்னெடுக்கப்படும் முழு அடைப்புப் போராட்டத்துக்கும் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று இரந்து கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (உ-5)

## முழு அடைப்புக்கு...

ஜைகள் குழு, கிளிநொச்சி பிரஜைகள் குழு, வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கம், வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம், யாழ்ப்பாணம் வணிகர் கழகம், அழகக சங்கங்களின் சம்மேளனம், கிளிநொச்சி பனை தென்னை கூட்டுறவுச் சங்கம், வவுனியா மாவட்டத்திலுள்ள 17 பொது அமைப்புக்கள், வீணாகான குருபீடம், கிளிநொச்சி வர்த்தகர் அபிவிருத்தி சமூகம், கிளிநொச்சி சேவைச் சந்தை வர்த்தகர் சங்கம் , யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவை, வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களின் சங்கம், என நேற்றைய தினம் பல அமைப்புகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே 19 பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன. (உ-5,8)

## மேலெழுந்த...

கத்தின் முக்கிய நபருமான ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்தார்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் புலம்பெயர் இலங்கையர்களுக்கு விளக்கமளிக்கும் செயற்பாட்டில் அரசு முனைப்புக் காட்டியுள்ளது. இந்தப் பணிக்குப் பொறுப்பாக ஜயம்பதியை அரசு நியமித்துள்ளது. இதற்கமைய லண்டனிலுள்ள இலங்கையர்களுக்கு புதிய அரசமைப்புத் தொடர்பில் விளக்கமளித்தார் ஜயம்பதி. அவர் தெரிவித்ததாவது:

தற்போதுள்ள அரசமைப்பு ஒருவகையில் திணிக்கப்பட்டதாகும். தந்தை செல்வா அரசமைப்பு விவாதங்களில் கலந்துகொள்ளாமல் விலகினார். தற்போது விவாதிக்கப்படும் அரசமைப்பு முற்றுமுழுதாக புதிய அரசியல் பின்னணியில் தயாரிக்கப்படுகின்றது. மக்களிடமிருந்து பரவலான கருத்துக்கள் பெறப்பட்டதோடு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் முழுமையான ஆதரவோடு அது உருவாக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் ஒன்றை ஒன்று எதிர்த்து அரசியலை நடத்திய முக்கிய அரசியல் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கி தேசியக் கட்சியும் ஒரே அரசில் இணைந்து தேசியப் பிரச்சினையைத் தீர்த்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளன.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக ஏற்றுள்ளது. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி சில திருத்தங்களை மட்டுமே முன்வைத்துள்ளது. இடைக்கால அறிக்கையின் முக்கிய பகுதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி, மலையகக் கட்சிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன ஆதரித்துள்ளன.

அதிகாரப் பகிர்வை எதிர்த்துவந்த மக்கள் விடுதலை முன்னணி தற்போது நிறைவேற்று அதிகாரமுள்ள அரச தலைவர் ஆட்சியை ஒழித்தல், தேர்தல் முறையை மாற்றுதல், அதிகார ப் பகிர்வை நடைமுறைப்படுத்தல் ஆகிய மூன்று நிபந்தனைகளையும் சமகாலத்தில் நிறைவேற்ற அரசு முயற்சிக்குமாயின் அவற்றை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது.

மகிந்த அணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் குறிப்பாக ஜாதிகஹெல உறுமய உள்பட பெரும்பாலான கட்சிகளும் ஆதரிக்க முடிவுசெய்திருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்க சந்தர்ப்பமாகும்.

இவ்வாறான வாய்ப்பை நழுவவிட்டால் இதே போன்ற வாய்ப்பு எதிர்காலத்தில் கிட்டுமா என்பது சந்தேகமே. தற்போதுள்ள அரசியல் புறச்சூழலில் கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் மேலும்பேச்சுக்கள் ஊடாக முன்னேற்றங்களை காண்பதற்கு வாய்ப்புள்ளது - என்றார். (உ-5,31)

## அநாதரவான...

டையினர் அறிவித்தனர்.

கடற்படையினர் வழமையான கடல் சுற்றுக் காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சந்தேகத்துக்கிடமான முறையில் ஒரு படகின் நடமாட்டத்தை அவதானித்தனர். அந்தப் படகை நெருங்கியபோது படகில் எவரும் இருக்கவில்லை. படகை கடற்படையினர் சோதனையிட்டனர். உள்ளே 44 பொதிகள் அடங்கிய 153 கிலோகிராம் கேரளக் கஞ்சா இருந்ததைக் கண்டனர் என்று கடற்படைச் செய்திக் குறிப்புக் கூறுகின்றது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இதுவரையான காலப் பகுதியில் ஆயிரத்து 639 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை வடக்குக் கடலில் மீட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவிக்கின்றனர். (உ-5-101- 8)

## இடைக்கால...

தமிழ் மக்களுக்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை என அவர்கள் எதிர்ப்பை வெளியிட்டால் தமிழ் தலைமைகள் இலங்கை அரசுக்கு மக்களின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறி தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற போராட வேண்டும். நாம் எமது எதிர்ப்பைக் காட்டும் போது சில மாற்றங்களையாவது எதிர்பார்க்க முடியும்" என்றார் அவர்.

அரசியல் சீர்திருத்தம் குறித்த இடைக்கால அறிக்கை தொடர்பான கருத்தாடல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நேற்றையதினம் இடம்பெற்றது. இந்தக் கருத்தாடல் நிகழ்வில் அரசியல் திருத்தம் தோல்வியடைந்தால் தமிழர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன எனப் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் எழுப்பிய கேள்விக்குப் பதிலை வழங்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தனது உரையில் அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தமிழ் தலைமைகள் ஆதரவான போக்கையே கொண்டுள்ளன. வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை தொடர்பிலும் அதுவே அவற்றின் நிலைப்பாடு. எனவே நாம் தமிழ் மக்கள் மத்தியில் இடைக்கால அறிக்கையில் என்ன விடயங்கள் உள்ளன என்ற தெளிவை ஏற்படுத்த வேண்டும். அதன் ஆரம்பமே இந்தக் கருத்தாடல்.

தமிழ் மக்கள் இடைக்கால அறிக்கை தொடர்பில் நன்கு விளங்கி ஆராய்ந்து தங்களின் நிலைப்பாடுகளைத் தமது அரசியல் தலைமைக்குத் தெரிவிக்கவேண்டும். இடைக்கால அறிக்கையில் தமிழர்களுக்கான அடிப்படை விடயங்கள் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. எனவே இந்த இடைக்கால அறிக்கை தீர்வுக்குப் பொருத்தமற்றது என்பதே எனது கருத்து.

தமிழ் மக்களும் தங்களின் கருத்துக்களை எமது தமிழ் தலைமைக்கு எடுத்துக் கூறி தமது அடிப்படைக் கோட்பாடுகள் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்படவில்லை என்பதை அழுத்தமாகக் கூறவேண்டும். நாம் எமது எதிர்ப்பைக் காட்டும்போது சில மாற்றங்களையாவது எதிர்பார்க்க முடியும்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை அப்புறப்படுத்த அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து மகிந்தவை ஆட்சியில் இருந்து அகற்றின. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்திக்கொண்டன. இதுதான் ஆட்சி மாற்றம் என்ற பெயரில் இடம்பெற்றது.

அரசியல் தீர்வு ஒன்று நீண்டகாலத்தின் பின்னர் முன்வைக்கப்படுகின்றது என்பதற்காக எமது அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்கமுடியாது. ஏனெனில் எமது இனம் தந்தை செல்வாவின் அகிம்சை போராட்டத்தால் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அது கீழ் நோக்கிப் போகின்ற அபயம் ஏற்பட்டுள்ளது -என்றார். (உ)

## அரசியல்...

என்பன தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறையிலுள்ள தமிழ்க் கைதிகள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு. சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடருமாறு அரசு வலியுறுத்தியுள்ளது.

15 வருடங்களுக்கு அதிகமாக தமிழ்க் கைதிகள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்வின் பாதிக்காலம் வீணாகிவிட்டது. இவர்களை விடுவிக்குமாறு நான் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளேன். குற்றமற்றவர்களைத் தடுத்துவைத்தல் நியாயமான செயற்பாடல்ல. இதற்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மக்கள விடுதலை முன்னணியின் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுதலையானவர்கள் கடந்த காலங்களில் மீண்டும் வன்முறைகளில் ஈடுபட்டதைக் காண முடிந்தது. ஆனால், மறுவாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டனர் எனத் தகவல் இல்லை - என்றார். (உ-5,31)

## ஐ.நா...

யாளர் பப்லோ 13 நாள்கள் பயணமாக, இலங்கையை நேற்றுமுன்தினம் வந்தடைந்தார்.

இலங்கையின் நிலமைகள் தொடர்பாக மீளாய்வு செய்து, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அவர் அறிக்கை சமர்ப்பிப்பார்.

வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரும் அவர் பொது அமர்வு ஒன்றிலும் பங்கேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## காணிகளினை...

ஆயிரத்து 299.39 ஏக்கர் காணிகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 9 ஆயிரத்து 148.47 ஏக்கர் காணிகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 984 ஏக்கர் காணிகளும் வவுனியா மாவட்டத்தில் 27 ஆயிரத்து 230 ஏக்கர் காணிகளும் மன்னார் மாவட்டத்தில் 3ஆயிரத்து 294 ஏக்கர் காணிகளும் இராணுவத்தினர் வசம் உள்ளன என்று அரச புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், முல்லைத்தீவில் மட்டும் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் காணி அரச படைகளின் வசம் உள்ளன என்று அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் அண்மையில் தனது ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது. (உ-5,31)

## நாட்டை...

கியை பட்டியல் (ஒரே விடயத்தில் மத்திக்கும் மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்படும் பகுதி) நீக்கப்பட்டு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் முயற்சி இடம்பெறவுள்ளது. அதற்கேற்ற வகையில்தான் இடைக்கால அறிக்கை அமைந்துள்ளது. ஒற்றையாட்சிக்கும், பௌத்த மதத்துக்குள்ள முன்னுரிமையையும் இடைக்கால அறிக்கை சவாலுக்குட்படுத்தியுள்ளது. இதை ஏற்கமுடியாது. புதியதொரு அரசமைப்பு அவசியமில்லை" என்று அரச தலைவரிடம் தாம் எடுத்துரைத்தனர் என்று விமல் வீரவன்ஸ செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதற்கு அரச தலைவர் வழங்கிய பதில் தொடர்பில், விமல் வீரவன்ச எதுவும் தெரிவிக்கவில்லை. (உ5)

## நீதிமன்ற...

வார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளமாட்டார் என்று நேற்றுப் புதன்கிழமை திடீரென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவரின் யாழ்ப்பாண வருகையையொட்டி, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நாளை முழுக் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நிகழ்வும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (உ-5)

## பரிந்துரை...

கொழும்பு, ஒக். 12

இலங்கைக்கு வந்துள்ள ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிறிப் முன்வைக்கும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் இலங்கை அரசுக்கு இல்லை. அவர்களின் அனுபவ ஆலோசனைகளை தேவை ஏற்படின் ஒரு வளமாகப் பயன்படுத்தலாம் என்று அரசு தெரிவித்துள்ளது.

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் இலங்கைப் பயணம் தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சு நேற்று ஒரு செய்திக் குறிப்பை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஏனைய நாடுகளைப் போன்று இலங்கைக்கும் ஐ.நா. சிறப்பு நிபுணர்களின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. நிறுவன ரீதியான கட்டியெழுப்புதல்கள், கொள்கை உருவாக்கங்கள், கொள்கை மறுசீரமைப்புக்கள், பயிற்சிகள், போன்றவற்றுக்குத் தேவையானால் சிறப்பு நிபுணர்களின் ஆலோசனைகளை நாம் பரிசீலனைக்கு உட்படுத்தலாம்.

அரசின் அழைப்பின்பேரிலியே அவர் இலங்கைக்கு வந்துள்ளார் -என்றுள்ளது. (உ-5,31)



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் 20 வயது பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அணி, கல்லூரிச் சமூகத்தால் நேற்று மதிப்புறுத்தப்பட்டது. (ம-23)

# இளம்பறவைகள் கழகத்தின் கால்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், ஒக். 12
சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள்.

வவுனியா ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணிக்கும் வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விண்ணொளி விளையாட்டுக் கழக அணிக்கும் வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஒற்றுமை விளையாட்டுக் கழக அணிக்கும், விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சந்திரன் விளையாட்டுக் கழக அணிக்கும், ஆனந்தா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சந்திரன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வவுனியா ஈஸ்வரன் விளையாட்டுக் கழக அணிக்கும் சுப்பர்ராங் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சுப்பர்ராங் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணிக்கும், வவுனியா யுனிபைட் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## வென்றது யூனியன்

யாழ்ப்பாணம், ஒக். 12
மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணிகள் பிரிவில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆனைக் கோட்டை யூனியன் அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஒலிம்பியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எதுவும் பதிவுசெய்யப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் யூனியன் அணி வெற்றிபெற்றது.

இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். றொக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் வளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# பப்ரிஷ் அணி சம்பியனானது



யாழ்ப்பாணம், ஒக். 12
கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில், கிளிநொச்சி பப்ரிஷ் அணி சம்பியனானது.

கிளிநொச்சி சாந்தபுரம் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பப்ரிஷ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பப்ரிஷ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மூர்த்தி 67 ஓட்டங்களையும், கயன் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பார்த்தீபன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்து இளைஞர் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களை மட்டும் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆட்டநாயகனாக மூர்த்தியும், தொடராட்ட நாயகனாக அனுக்சனும் தெரிவாகினர். (ம-23)

## கே.ஸி.ஸி.ஸி., சென்றலைட்ஸ் அசத்தலான வெற்றிகள்

யாழ்ப்பாணம், ஒக். 12
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டு கழகத்தால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி., சென்றலைட்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி 88:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 64:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## அன்ரனிஸ் அபாரம்

யாழ்ப்பாணம், ஒக். 12
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றது. (ம-23)

## வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், ஒக். 12
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விண்மீன் அணி வெற்றிபெற்றது.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## வெற்றிபெற்றது ஏபிசி வி.கழகம்

யாழ்ப்பாணம், ஒக். 12
வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஏபிசி அணி வெற்றிபெற்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏபிசி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஏபிசி அணி வெற்றிபெற்றது. (ம-23)



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் 20 வயது ஆண்கள் பிரிவில் சம்பியன், 16 வயது ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் மூன்றாம் இடம், 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கபடியில் மூன்றாமிடம், 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உடற்பயிற்சியில் மூன்றாமிடம் ஆகிய இடங்களைப் பெற்ற இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரியின் அணிகள் கல்லூரிச் சமூகத்தால் இன்று மதிப்புறுத்தப்படுகின்றன. (ம-23-422)



# மெஸ்ஸி அதிரடி!

## உலகக்கிண்ணத்துக்கு ஆர்ஜென்ரீனா தகுதி

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கு ஆர்ஜென்ரீனா அணியை அழைத்துச் சென்றுள்ளார் லயனல் மெஸ்ஸி. இதன் மூலம் அவர் ஆர்ஜென்ரீனா உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறுமா பெறாதா என்ற நீண்ட கேள்விகள், சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

ரஷ்யாவில் அடுத்த வருடம் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் உலகின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன. தென்னமரிக்கக் கண்டத்தில் உள்ள நாடுகளில் முதல் நான்கு இடங்களில் உள்ள நாடுகள் மட்டுமே உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறும். ஐந்தாவது இடத்தைப் பிடிக்கும் அணி, நியூசிலாந்துடன் மோதி அதில் வெற்றிபெற்றால் உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறும். ஆர்ஜென்ரீனா அணி கடைசியாக பெரு அணிக்கு எதிராக விளையாடிய ஆட்டத்தைச் சமநிலையில் முடித்துக் கொண்டது. இந்தச் சமநிலை ஆர்ஜென்ரீனாவுக்கு மேலும் பின்னடைவைக் கொடுத்தது. இதனால் ஈக்குவடோர், ஆர்ஜென்ரீனா அணிகளுக்கு இடையிலான தகுதியாட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா வெற்றிபெற்றால் அந்த அணி உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறும் தோற்றால் வெளியேறும் நிலை இருந்தது.

ஈக்குவடோரை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி உலகக்கிண்ணத் தொடருக்கு ஆர்ஜென்ரீனாவை அழைத்துச் சென்றார் மெஸ்ஸி. மூன்று கோல்களையும் அவரே பதிவுசெய்தார்.

ஆர்ஜென்ரீனாவுடன் இணைந்து தென்னமரிக்கக் கண்டத்தில் உள்ள உருகுவே, கொலம்பியா ஆகிய அணிகளும் தகுதி பெற்றன. 5 முறை கிண்ணம் வென்ற பிரேசில் ஏற்கனவே தகுதி பெற்றருந்தது. 32 நாடுகளைக் கொண்ட முக்கிய சுற்றுக்கு 23 நாடுகள் தகுதி பெற்றுள்ளன. இன்னும் 9 நாடுகள் தகுதி பெறவேண்டும். (ம)





# மோசமான துடுப்பாட்டம் தோல்விக்கு காரணம்

## கோக்லி அதிருப்தி

“ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணம், நேர்த்தியற்ற துடுப்பாட்டமே” என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

ஆட்டம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

‘துடுப்பாட்டத்தில் நாங்கள் போதுமான அளவுக்கு சிறப்பாகச் செயற்படவில்லை. மோசமான துடுப்பாட்டத்தால்தான் தோற்றோம். இந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடுவது ஆரம்பத்தில் சவாலாக இருந்தது. அதே நேரத்தில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீரர் பெரென்டோர்ப் மிகவும் அபாரமாக பந்துவீசி எங்களுக்கு நெருக்கடியைக் கொடுத்துவிட்டார். அவர் நேர்த்தியாக பந்துவீசினார். எங்களது சரிவுக்கு அவரது சிறப்பான பந்துவீச்சுத்தான் காரணம்” என்று கோக்லி மேலும் தெரிவித்தார்.

இந்திய அணி துடுப்பெடுத்தாடியபோது முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே இரண்டு இலக்குகளைப் பறிகொடுத்தது. ரோகித் சர்மா 8 ஓட்டங்களுடனும், கோக்லி ஓட்டமெதையும் பெறாதும் ஆட்டமிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# திட்டங்கள் கச்சிதமாக அமைந்தன

## வோர்ணர் பெருமிதம்

“ஏற்கனவே வகுத்த திட்டங்கள் கச்சிதமாக அமைந்தமையால், இந்திய அணியை இலகுவில் தோற்கடிக்க முடிந்தது” என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் பொறுப்புத் தலைவர் வோர்ணர்.

ஆட்டம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே வோர்ணர் இவ்வாறு தெரிவித்தார்.

“எங்களது திட்டத்தைச் சிறப்பாகச் செயற்படுத்தினோம். அபாரமான பந்து வீச்சால் இந்த வெற்றியை எளிதில் பெற்றோம். பெரென்டோர்ப், அடம் சாம்பாவின் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. ஐ.பி.எல். தொடரில் விளையாடிய அனுபவம் இருந்ததால் ஹென்றிக்ஸை முன்னதாக களமிறக்கினோம். அவரும் அதைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார். இறுதி ரி-20 ஆட்டம் ஹைதராபாத்தில் நடப்பதால் ரசிகர்களின் ஆதரவு எங்களுக்கு இருக்கும் (ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத்தின் தலைவராக வோர்ணர் உள்ளார்)” என வோர்ணர் மேலும் தெரிவித்தார். (ம)

# ஆஸி. வீரர்கள் சென்ற பேருந்து மீது கல்வீச்சு

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் சென்ற பேருந்து மீது மர்ம நபர்கள் கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்று பதிலடி கொடுத்தது.



இந்த ஆட்டளளம் முடிவடைந்த பின்னர் ஆஸ்திரேலிய வீரர்கள் தமது விடுதிகளுக்குப் புறப்பட்டுச் சென்றபோது, அவர்கள் பயணித்த பேருந்து மீது கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தியாவின் தோல்வியை அடுத்து விரக்தியில் இருந்த இந்திய ரசிகர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கல்வீச்சுத் தாக்குதலுக்கு ஆஸ்திரேலிய வீரர்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள். (ம)

# கலைவாணி அணி வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 12

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதல் பாதியில் கலைவாணியின் கோலைப் பதிவு செய்தார் தயா. கலைவாணியின் 1:0 என்ற ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் கலைவாணி அணி வெற்றிபெற்றது. (ம-23)



# ரசிகர்கள் ஸ்ரோக்ஸைச் சீண்டுதல் அவசியம் ஆஷஸ் தொடர்பில் மிச்செல் ஸ்ராக் கருத்து



"ஆஷஸ் தொடருக்காக, இங்கிலாந்து வீரர் ஸ்ரோக்ஸ் ஆஸ்திரேலியாவுக்கு வந்தால் ஆஸ்திரேலிய ரசிகர்கள் அவரைச் சீண்டும் வகையில் கருத்துக்களைப் பகிருதல் அவசியம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ராக். ஆஸ்திரேலிய ஊடகமொன்றுக்கு அண்மையில் வழங்கிய செவ்வியிலேயே மிச்செல் ஸ்ராக் இவ்வாறு தெரிவித்தார்.

"ஸ்ரோக்ஸ் ஆஸ்திரேலியாவுக்கு வருகைதந்தால் நன்றாக இருக்கும். அவருக்கு எதிராக ஆஸ்திரேலிய ரசிகர்கள் உரக்கக் கூச்சலிடுவதைப் பார்க்க விரும்புகிறேன். அவர் விளையாடினால் நிச்சயம் ரசிகர்களின் கரகோஷம் அதிகமாக இருக்கும். ஆனால் அதை அவர் சமாளிப்பார் என்று நம்புகிறேன். அதே சமயம் அவர் விளையாடினாலும், விளையாடாவிட்டாலும் இந்தத் தொடர் சிறப்பானதாக இருக்கும்" என ஸ்ராக் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் இரவுநேர களியாட்ட விடுதிக்குச் சென்ற ஸ்ரோக்ஸ் அங்கு நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டார். இந்த விடயம் காணொலி ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் மறு அறிவிப்பு வரும்வரை ஸ்ரோக்ஸுக்கு தடை விதித்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் சபை. எனினும் ஆஷஸ் தொடருக்கான அணியில் ஸ்ரோக்ஸின் பெயர் உள்ளது. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஸ்ராக் இவ்வாறு தெரிவித்தார். (ம)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள DYNAMIC HOLDINGS (LANKA) PVT LTD நிறுவனத்தின் 3ஆவது கிளைக்கு வேலை ஆள்கள் தேவை. பயிற்சியளிக்கப்பட்டு உள்வாங்கப்படுவர். பயிற்சி காலத்தில் ஆரம்ப சம்பளமாக 15,000-25,000 மும் பின் நிரந்தரமாக்கலுடன் 45,000-60,000 வரை அடிப்படை சம்பளம் வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். உற்சாகமும் துடிப்பும் மிக்க இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகைமை - G.C.E O/L , A/L தங்குமிட வசதியுண்டு.

No:- 74, KANNATHIDDY ROAD, JAFFNA.
077 157 1699
021 567 9001

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், வீட்டுப்பெண்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

2வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 14.10.2017

1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 16.10.2017
1.காலை 08-10 2.காலை 10-12

பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்

SAAMSON
Experts in English Training
403,வெலிங்டன் சந்தி யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## வேலையாள்கள் தேவை

வத்தளையில்
**அலுமினிய பிற்றிங் வேலைக்கு**
நன்கு அனுபவமுள்ள வேலை ஆள்கள் உடனடியாகத் தேவை.
சம்பளம் 1700/= - 2200/= வரை.
தங்குமிட வசதி, சாப்பாடு கொடுக்கப்படும்.
விசேடமான கொடுப்பனவுகள் உண்டு.
உதவி ஆள்களும் தேவை.

**தொடர்பு -**
**077 122 0647, 077 706 5127**

## கட்டடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி றோட் 137, 139,141இலக்க 75'அகலமும் 80'நீளமும் உள்ள கட்டடம் வாடகைக்கு உண்டு. முழுமையாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ கொடுக்கப்படும்.
- 077 6914229, 021 222 4103

## இரண்டு வீடுகள் கொண்ட காணி விற்பனைக்கு

7ஆம் கட்டை சங்கானை பிரதான வீதியில் 07 பரப்பு 85 குளி கொண்ட காணியில் இரண்டு வீடுகள் உள்ளடங்கலாக விற்பனைக்கு உண்டு. தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்டைப் பார்வையிடலாம்.

தொடர்பு : 077 828 0944

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office கணினிப் போதனாசிரியர் (பயிலவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

தொடர்புகளுக்கு - 0773614572

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உடன் பழச்சாறு தயாரிக்கும் கடை ஒன்றுக்கு பழச்சாறு தயாரிக்கக்கூடிய அனுபவமுள்ள ஒருவர் தேவை.
- 077 3117875

## கிளி/எடிசன் கல்லூரி, கிளிநொச்சி

**A/L 2017**

உயிர் முறைமைகள் தொழில்நுட்ப மாணவர்களுக்கான செயன்முறை பயிற்சிவகுப்புக்கள்
**(இறுதி சந்தர்ப்பம்)**
B1, B2 நிலையச் சோதனைகள் யாவும் சகல உபகரணங்களுடன் கூடிய பயிற்சிகள் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படும்.

"எந்த மாவட்ட மாணவர்களும் பங்குகொள்ளலாம்."

**இடம் - கூட்டுறவு மண்டபம் டிப்போ சந்தி அருகில், கிளிநொச்சி.**
**காலம் - 14, 15/10/2017 9 மணி - 3.30 மணிவரை.**

## திருக்குமரன் அணி அசத்தல் ஆட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 12
மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில், யாழ்ப்பாண மாவட்ட அணிகளின் பிரிவில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. திருக்குமரன் அணியின் முதலிரு கோல் களையும் பதிவுசெய்தார் சயந்தன். 2:0 என்று அந்த அணியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதி ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணிக்கான மூன்றாவது கோல் திலீபனால் பதிவானது. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது திருக்குமரன் அணி. (ம-23)

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

உடனடியாக பதிவு செய்யுங்கள்
இறுதி சந்தர்ப்பம்



யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
அமெரிக்கா செல்லும் 51 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
0768226243

V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி செல்வரத்தினம்



தோற்றம் 28.04.1950 மறைவு 11.10.2017

கலைவாணிவீதி, தையிட்டி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் முத்தட்டுமட வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி செல்வரத்தினம் நேற்று (11.10.2017) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை பாக்கியவதி தம்பதியரின் மகளும் செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் ரஜனிகாந், சுஜாதா, கீதா, சிறிகாந் (சவுதி), ஜெயகாந் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பூநகரி பிரதேச செயலகம்), கவிதா, அனித்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி, தவராசா, ஜெயச்சந்திரன், யோகேஸ்வரி, தயாராணி(சம்பத்வங்கி, Jaffna), சுகந்தன் (லிபியா), விமல்ராஜ் (லண்டன்) ஆகியோரின் மாமியும் துவாரகன், கௌதம், கஜன், யதுர்சன், ரிஷிகன், அபிஷன், ஆகாஸ், விஜாஷ், அருக்சன், சந்தியா, சாகித்தியா, துஷாயினி, தர்மிகா, வினுசியா, வருணிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்தட்டு மடவீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**செல்வரத்தினம்(கணவர்)**
**077 923 2397**

## வேலையாள்கள் தேவை

213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் **"லிங்கன் கிறீம் ஹவுஸ்"** நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. கேக் தயாரிப்பாளர்கள்: ஐசிங் கேக் உட்பட சகல விதமான கேக், பணிஸ் தயாரிக்கக்கூடியவர்கள்.
2. கிளீனர்ஸ்: சகல விதமான கிளீனிங் வேலைகளும் தெரிந்தவர்கள் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**நிறுவனர் - லிங்கன் கிறீம் ஹவுஸ்**

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

**www.ambafrance-lk.org**

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## இலங்கை - பாகிஸ்தான் ஒருநாள் தொடர் நாளை



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முடிவடைந்த டெஸ்ட் தொடரை 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றி பிரமிக்க வைத்தது இலங்கை. ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே எதிர்வரும் 16, 18, 20, 23 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.